

சென்னை அரசாங்க அறநிலையத்துறை அலுவலகப் புதுக் கட்டிடம்



புதுக் கட்டிடத்தை அறநிலைய அமைச்சர் திறந்துவைத்தல்

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி கார்த்திகை - 1959 டிசம்பர் [மணி 3

ஈழநாட்டுத் திருத்தலங்கள்

1. திருக்கேதீச்சரம்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

—திருமந்திரம்

திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரரும் தங்கள் தேவாரப் பாடல்களால் சிறப்பித்த தலங்களுள் திருக்கேதீச்சரமும் திருக்கோணசலமும் இலங்கைத் தீவில் உள்ளன. திருக்கேதீச்சரம் மேற்குப் பக்கமும், திருக்கோணமலைவடகிழக்கிலும் இரு கண்கள்போல் அமைந்துள்ளன. பாடல் பெற்ற தலங்களுள் சிங்களத்தில் இரண்டு என்று திருக்குற்றால புராணத்திலும், ஈழத்தில் இரண்டு என்று அண்ணாமலைச் சதகத்திலும் குறிக்கப்பட்டுள்ளன. கேதீச்சரம் போன்று ஈச்சுரம் என்ற முடிபுடன் விளங்கும் பிற பாடல் பெற்ற தலங்கள் இராமநதீச்சுரம் இராமேச்சுரம், கணபதீச்சுரம் (திருச்செங்காட்டான்குடி), சம்புகேசுரம் (திருவானைக்கா), சித்தீசுரம் (நரையூர்), தாடகேச்சுரம் (திருப்பனந்தாள்), திருநாகேச்சுரம், பட்டீச்சுரம், பசுபதீச்சுரம் (ஆவூர்), பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்), பாதாளீச்சுரம் (பாமணி), முண்டீச்சுரம் (கிராமம்), முக்கீச்சுரம் (உறையூர்), வர்த்தமானீச்சுரம் (திருப்புகலூர்) முதலியன. திருக்கேதீச்சுரம் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து 22 மைல் தொலைவில் உள்ளது. மன்னார் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து 5 மைல் கிழக்கே இருக்கிறது. கொழும்பிலிருந்து இலங்கையின் மேற்கு கடற்கரையில் வடக்கே சுமார் 45 மைலுக்கப்பால் முன்னீச்சுரம் என்ற ஒரு தலம் இருக்கிறது.

இராமபிரான், இராவணனை சங்காரம் செய்தபின் சீதாதேவி, இளைய பெருமாள், விபீடண ஆழ்வார், சுக்ரீவன், அநுமார் முதலியவர்களுடன் புஷ்பவிமானத்தில் ஆகாய மார்க்கமாகச் சென்றபோது சாயாரூபத்தில் பிரம்மகத்தி பின்தொடர்ந்தது. முன்னீச்சுரத்தை அடுத்தபோது பிரம்மகத்தி அகன்று போவதைக் கண்டு இராமபிரான் அந்தத் தலத்தில் இறங்கி தீர்த்தத்தில் நீராடி, வடிவாம்பிகை சந்நிதியில் முன்னீசுவரரைப்

158335 Q2m 211,458 N59-2-3

பூசித்து, பிரம்மகத்தி தோசத்தை நீக்கியருள வேண்டினர். முன்னீசுவரர் அருளால் முன்னீச்சரத்தை அடுத்துள்ள மாயவனாற்றின் வடபக்கம் மானாவாரி என்னும் இடத்தில் சொர்ணலிங்கம் ஒன்றும், திருகோணமலையில் வெள்ளி லிங்கமும், திருக்கேதீச்சரத்தில் இரத்தின லிங்கமும், கடல்கடந்து சேதுக்கரை சென்று இராமேச்சுரத்தில் சதக (மணல்) லிங்கமும் அமைத்து பிரம்மகததிதோசம் நீங்கப் பெற்றார் என்று தட்சிண கயிலாய புராணம் கூறுகிறது. திருக்கேதீச்சரத்திற்கு மகாதோட்டபுரம் அல்லது மாதோட்டம் என்ற பெயரும் தேவாரத்தில் வழங்குகிறது. முற்காலத்தில் துவட்டா என்பவன் பாலாவி தீர்த்தத்தில் நீராடி கௌரியம்பிகை சமேத திருக்கேதீச்சரரை தரிசித்து, தவம் செய்து விஸ்வகன்மா என்னும் புத்திரனைப் பெற்றான். தலத்திற்கும் மகாதோட்டபுரம் அல்லது மாதோட்டம் என்று பெயரும் உண்டாயிற்று. இங்கு விஸ்வகன்மாவால் நிர்மாணிக்கப்பட்ட கந்தக் கோட்டை என்ற இரும்புக்கோட்டை இருந்ததாகவும் அதிலிருந்த ஏதோ ஒரு சூழ்ச்சியால் அருகில் சென்ற கப்பல்களை ஈர்த்து அக்கப்பல்களையும் பொருள்களையும் கவர்ந்து வந்ததாகப் பழைய நூல்கள் கூறுகின்றன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கைத் தளபதி ஒருவன் இப்பிரதேசத்தில் தோண்டிப் பார்த்தபொழுது அழிந்த கட்டிடங்களின் சின்னங்கள் இருந்ததாகவும் ஒரு விசித்திர வேலைப்பாடுள்ள இரும்புச் சங்கிலி அகப்பட்டதாகவும் அதைப்போன்ற சங்கிலியைச் செய்யக் கூடிய தொழில் நிபுணர்கள் யாரும் இல்லை என்றும் இலங்கைச் சரித்திர நூலாசிரியர்கள் கூறியுள்ளனர். மாதோட்டம் என்பதின் சுருங்கிய பெயர் மாந்தை எனவும், மாந்தையில் குபேரன்தேவி சித்திரலேகையின் தந்தை தெய்வ கன்னியனும், சூரபதுமன் மனைவி பதுமகோளையின் தந்தையும், இராவணன் மனைவி மண்டோதரியின் தந்தை மயனும் ஆட்சி செலுத்தியதாகக் கூறுவர். குபேரன் சிவபெருமான் தோழன் என்னும் பெயர் பெற்றவன். சூரபதுமன் சிவபெருமானிடம் வரம் பெற்று 1008 அண்டங்களையும், 108 யுகங்கள் ஆண்டு முடிவில் முருகப் பெருமானின் வாகனமாகவும், கொடியாகவும் விளங்கும் பேறுபெற்றவன். இராவணன் மனைவி மண்டோதரியும் இராவணனும் சிவபக்தியில் சிறந்து விளங்கினர். மண்டோதரி கேதீச்சுரரை மிகவும் பக்தியுடன் வழிபட்டு தனக்கு நினைத்தபோது காட்சி கொடுத்தருள வேண்டும் என்னும் வரம்பெற்றவள். ஓர் இரவில் இராவணன் பள்ளிகொண்டிருந்த அறைப் பக்கம் தன் அறையில் கேதீசுரரை நினைக்க அவரும் பள்ளிக்குப்பாயத்துடன் தோன்றி இருவரும் பேசிக்கொண்டிருந்த போது இராவணன் சந்தேகித்து மண்டோதரியின் அறைக் கதவைத் தட்டித் திறப்பித்தபோது இறைவன் குழந்தையாக மாறி, மண்டோதரியின் மடியில் தவழ, அம்மகவு தன் தோழியினுடையது என்று உரைத்தனள். இராவணன் சென்றபின் குழந்தையும் மறைந்தது என்பதும் வரலாறு.

ஆர்கலிசூழ் தென்னிலங்கை,
அழகமர் மண்டோதரிக்கும்
பேரருள் இன்பமளித்த
பெருந்துறை மேய பிரானை

என்று குயிற்பத்திலும்,

உந்து துறைக் கடலைக் கடந்து
அன்றோங்குபதிக்கு இலங்கைதனில்
பந்தணை மெல்விரலாட்கு அருளும் பரிசு
அறிவான் எம்பிரான் ஆவாரே

என்று திருவார்த்தையிலும்,

வெள்ளைக் கலிங்கத்தார் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்

என்று அன்னைப் பத்திலும் மாணிக்க வாசகப் பெருமான் மண்டோதரியின் பெருமையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இத்தலத்தின் பெயருக்குக் காரணமாயிருந்த கேதுவின் பூர்வ கதை யாவரும் அறிந்ததே. தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்துப் பங்கிடும்போது திருமால் மோகினி உருவங்கொண்டு அசுரரை விலக்கி, தேவருக்குப் பகிர்ந்துகொடுத்த போது சூரியர் சந்திரர் நடுவில் ஒரு அவுணனும் நின்று அமுதம்பெற்றுப் பருகியபோது சூரியர் சந்திரர் அவனைத் திருமாலுக்குக்காட்டியதும் அவர் உடனே தன் கையிலிருந்த சக்கரத்தால் அவனை வெட்ட தலை பாகம் அவுண வடிவும், உடல் பாம்பு வடிவும் பெற்று ராகுவாகவும், அவுண உடலும் பாம்பின் தலையும் பெற்று கேதுவாகவும் மாறி, அமுதம் பருகின பயனாய் சாவா மூவாத்திறம் எய்தி கேதீச்சுரத்தை வழிபட்டு நவக்கிரகங்களில் இரண்டாக விளங்குகின்றனர். பிருகு முனிவரும், மால்யவானும் இத்தலத்தில் வழிபட்டு உய்ந்தனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறந்து விளங்கும் இத்தலம் சரித்திர காலத்திற்கு முற்பட்டது. மூர்த்தி-கௌரி சமேத கேதீசுரர். தலம்-மாதோட்டம் என வழங்கும் கேதீசுரம். தீர்த்தம் - பாலாவி. திருஞான சம்பந்தப் பெருமானும் சுந்தரரும், இராமேசுரத்திலிருந்தே இத்தலத்தைப் பாடியுள்ளனர். அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்திலும்,

பூதியணி பொன்னிறத்தார் பூண்நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சுரம் மேவினர்

என்ற குறிப்பு உள்ளது.

ஆங்கிலேயர் இலங்கையில் சேரு முன்பே இத்தலத்திலிருந்த புராதனக் கோயிலும் நகரமும் அழிந்துபோயின எனத் தெரிகிறது. இப்புண்ணிய தலத்தின் புகழுக்கேற்றவாறு ஒரு ஆலயம் அமைக்கப்பெற்றிருக்கிறது. நந்தவனம், மடங்கள், வேதாகம பாடசாலை, கலைக் கூடம், வாசகசாலை, வித்தியாசாலை முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன. திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஒன்று சென்ற பல ஆண்டுகளாகப் பணிசெய்து வருகிறது. இச்சபையின் முயற்சியால் திருக்கேதீச்சரத்தில் தபால் தந்தி தொலைபேசி நிலையங்களும் குடிதண்ணீர் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பெயரால் ஒரு மடம் நிறுவப்பட்டு இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெயரால் இன்னொரு மடமும் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தலத்திற்குச் செல்ல விரும்புவோர் தலைமன்னாரிலிருந்தோ மன்னாரிலிருந்தோ தொலைபேசி மூலம் முன்னேற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

பண்டு நால்வருக் கறமுரைத்
தருளிப்பல்லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனர் கடலிடங்
கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்
செய்கே தீச்சர மதுதானே.

—சம்பந்தர்

ஜனகாதி நால்வருக்கும் உபதேசித்தருளி எல்லா உலகிலும் உள்ள ஆன்மாக்கள் அவ்வுபதேசத்தை மேற்கொண்டு ஒழுகும்படி செய்த சிவபெருமான் அருட்கோலங் கொண்டு மக்கள் வணங்கி உய்யும் பொருட்டு வீற்றிருக்கும் திருக்கோயில் திருக்கேதீச்சரம். இங்கு வண்டுகள் கீதம் பாடும். பூஞ்சோலைகளில் மயில்கள் கூத்தாடும். இத்தலம் மாதோட்டம் என்றும்

அறநிலையத்துறை அலுவலகத்தின் புதுக்கட்டிடத் திறப்புவிழா

சென்னை அரசாங்க அறநிலையத்துறை அலுவலகம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் அதற்கென கட்டப்பட்ட புதுக்கட்டிடத்திற்கு 2-11-59-ல் சென்றது. அன்று காலை 5 மணிக்கு, மேளவாத்தியத்துடனும் திருமுறை பாராயணத்துடனும் புதுமனை புகும் வைதீகச் சடங்குகள் நடைபெற்றன. பிற்பகல் 2 மணிக்கு அறநிலையத்துறை அமைச்சர் கனம் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் புதுக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். அப்போது கூடிய கூட்டத்திற்கு அரசாங்க உயர்தர அலுவலர்களும் தர்மகர்த்தர்களும் இதர பிரமுகர்களும் நிறைய வந்திருந்தார்கள். கடவுள் வாழ்த்திற்குப்பின், அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் அமைச்சர் அவர்களையும் மற்றோர்களையும் வரவேற்று, அமைச்சர் அவர்களைப் புதுக்கட்டிடத்தைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அறநிலையத்துறை 1925-ல் ஆரம்பித்தது முதல் இதுவரை உள்ள வரலாற்றையும் எடுத்துச் சொன்னார்கள்.

அமைச்சர் அவர்கள் சொற்பொழிவாற்றிவிட்டு கட்டிடத்தையும் பொருட்காட்சிச் சாலையையும் பார்வையிட்டார்கள். இறை வணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

அறநிலையத்துறை வரலாறு பின்வருமாறு:—1925-ல் இந்துமத அறநிலையச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி ஒரு கழகம் நிறுவப்பட்டது. ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும்கொண்ட அந்தக் கழகத்தின் ஆட்சி சென்னை மாநிலம் முழுவதற்கும் (சென்னை நகர் நீங்கலாக) அமுல் செய்யப்பட்டது. முதல் தலைவர் சர் டி. சதாசிவ ஐயர். 7-2-25-ல் தலைவராகப் பணியேற்றார். 1925 ஏப்ரலுக்குள் மற்ற உறுப்பினர்களும் பணியேற்றுக் கழகம் வேலை செய்யத் தொடங்கிற்று. சர். டி. சதாசிவ ஐயருக்குப் பின்னால் திரு ஆர். சூரியராவ், 23-11-27 முதல் 30-4-28 வரைத் தற்காலிகத் தலைவராக இருந்தார். பின்னர் திவான்பகதூர் சி. வி. அரங்காரெட்டி நிரந்தரத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பிறகு திரு ஆர். சூரியராவ் கழகத் தலைவராக 1930 ஏப்ரல் முதல் இருந்தார். 16-5-35-ல் அவருடைய பதவி காலம் முடிந்ததும் திரு ஏ. கொண்டப்பா தலைவர் பதவியை ஏற்றார். பின்னர் 16-5-40-ல் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை தலைவரானார். அவர் சென்னை மாநில பொதுப்பணியார் தேர்வுக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டபின் திரு டி. எம். சின்னையாப் பிள்ளை 15-11-44-ல் தலைவரானார், அவரது பதவிக் காலத்தில் சென்னை நகருக்கும் அறநிலையச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. 30-9-1951-ல் புது அறநிலையச் சட்டம் அமுலுக்கு வந்தது. அந்தச் சட்டத்தின் கீழ் கழகத்திற்குப் பதிலாக ஒரு ஆணையரும் அவரின்கீழ் ஒரு தனித் துறையும் ஏற்படுத்தப்பட்டது. திரு டி. எம். சின்னையாப் பிள்ளை அவர்களே முதல் ஆணை

(முன்பக்கத் தொடர்ச்சி)

வழங்கும். அடியார்கள் நாள்தோறும் தோத்திரம் செய்து அப்பெருமானுடைய திருவருள் பெறுவர்.

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில் [ல்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமே
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

—சுந்தரர்

தமது இடப்பாகத்திலுள்ள கௌரியாம்பிகை என்னும் அருட்சத்தியோடு தோணிகள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டம் என்னும் இந்நகரில் உள்ள பாலாவி என்னும் தீர்த்தக்கரையில் உள்ள தென்னஞ்சோலைசூழ்ந்த திருக்கேதீச்சரத் தலத்தில் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அடியார்களின் நோய்களை நீக்கியருள்வார்.

யராக இருந்தார்கள். பின்னர் திரு சி. நரசிம்மன் ஐ.ஏ.எஸ்., அவர்களும், திரு டி. கே. சங்கரவடிவேலு ஐ.ஏ.எஸ்., அவர்களும் ஆணையர்களாக இருந்தார்கள். திரு டி. கே. சங்கரவடிவேலு அவர்கள் அரசாங்கத் துறைச்செயலாளராக 10-8-53-ல் பதவி ஏற்ற போது திரு. ஏ. எஸ். மன்னடி நாயர் அவர்கள் ஆணையர் பதவியை 15-9-55 முதல் 11-10-55 வரை வகித்தார்கள். இப்போது உள்ள ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ் அவர்கள் 12-10-55-ல் பதவி ஏற்ருர்கள்.

அறநிலைய அலுவலகம் ஏழு வாடகைக் கட்டிடங்களிலும் கடைசியாக அரசாங்க பழைய அச்சகக் கட்டிடத்திலும் 15-4-25 முதல் 1-11-59 வரை இருந்தது. இறுதியாக இருந்த கட்டிடத்தில் இடம் போதாமலும் வசதி குறைவாகவும் இருந்த படியால் ஒரு புதுக்கட்டிடம் தேவையாக இருந்தது. அதனுல் அரசாங்கத்தார் திரு சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களிடமிருந்து முன்னேமேயே கட்டிடத்திற்கென 1946-ல் விலைக்கு வாங்கப்பட்ட 26 மனைகள் பரப்புள்ள இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு உத்திரவு அளித்தார்கள். இக்கட்டிடம் நன்ருகக் கட்டப்பட்டு அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைந்திருக்கிறது. இக்கட்டிட நிர்மாணத்திற்கு நன்முறையில் பணி புரிந்த கீழ்க்காணும் பொறியியல் அலுவலர்களுக்கும் கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கும் நன்றி உரித்தாகிறது.

பொறியியல் உயர் அலுவலர்

திரு. சி. எம். கோவியஸ்

பொறியியல் துணை அலுவலர்

திரு. என். வெங்கடநரசிம்மன்

பொறியியல் உதவி அலுவலர்

திரு. எம் சுப்பிரமணியம்

சிற்பி

திரு. வின்சென்ட் ஐசக்

பொறியியல் துணை அலுவலர்

திரு. கே. ஆர். வீரப்பன்

கட்டிட ஒப்பந்தக்காரர்

திரு. எஸ். திருநாவுக்கரசு

சிற்ப ஒப்பந்தக்காரர்கள்.

திரு. டி. பி. கணேசமூர்த்தி
திரு. டி. சம்பந்தமூர்த்தி
திரு. நடராசன்

சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் திருமுருகப்பெருமானுக்கு கந்தசஷ்டி விழா 1-11-59-ல் தொடங்கி 5-11-59 வரை நடைபெற்றது. 6-11-59 அன்று சிறப்பு வழிபாடும் நிகழ்ந்தது.

குறிப்பு:—இந்த இதழில் திரு K. பட்சிராஜன் அவர்கள் எழுதிய 'நவதிருப்பதி யநுபவம்' என்ற கட்டுரையில் 29-ஆம் பக்கத்தில் திருமால் நின்றும், இருந்தும், கிடந்தும் அருள் செய்யும் நிலைகளை, பசியன் ஒருவன் சோறு சமைக்குமிடம் சென்று சற்றுப் பொறுத்துத் துய்க்கலாம் என்று சாய்ந்தும், பிறகு கிடையை விட்டு உட்கார்ந்தும், ஆத்திரம் மேலிட்டு நிற்கும் மூன்று நிலைகளைப் போன்றதென்று கூறியிருக்கிருர்கள். எம்பெருமானின் இந்த மூன்று நிலைகளையும் மற்ருெரு விதமாகவும் கூறுவதுண்டு. இறைவனுக்கு நாம் கடன் பட்டிருக்கிருேம்—அன்புக்கடன் பட்டிருக்கிருேம். நம்முடைய அன்பைப்பெற அவன் வந்து நம்மிடம் நிற்கிருன். அன்பு செய்வது தாமதமாகவே அவன் உட்கார்ந்தும் பார்க்கிருன். அதற்கும் காலம் தாழ்க்கவே படுத்தேவிடுகிருன். இப்படியாக மூன்று நிலைகளில் நின்று அவன் மக்களுக்குப் பேரருட் பெருங்கருணை செய்கிருன்.

—ஆசிரியர்.

அண்ணாமலையார் தீபம்



"நான் பெரியவன்". "இல்லை நான்தான் பெரியவன்" என்று இப்படி இரண்டு பேர்களுக்குள் சொற்போர் நிகழ்ந்தது. அவர்கள் யார்? மும்மூர்த்திகளில் இருவரான நான்முகனும், திருமாலும்தான் இவ்வாறு தமக்குள் சண்டை செய்து கொண்டனர். இதற்கு ஒரு முடிவு காண யாரால் முடியும்? எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் தான் தீர்ப்புக் கூறவேண்டியதாயிற்று. அவர் ஒரே அனல் பிழம்பாய் நின்று, அசரீரியாக 'இந்த தீமலையின் அடியையாவது முடியையாவது உங்களில் எவர் முதலில் காண்கிறீர்களோ அவரே பரமர்' என்று மொழிந்தருளினார். உடனே புறப்பட்டனர் இருவரும். விண்ணை நோக்கி அன்ன வுருக்கொண்டு மேலே பறந்தார் பிரமதேவன் முடியைக் காண; வராக வடிவங்கொண்டு கீழே நுழைந்தார் திருமால் அடியைப் பார்ப்பதற்கு. இருவரும் அடி முடியைக்காண அரிதின் முயன்றனர்; முடியாமல் வருந்தினர். இவர்களால் அண்ண முடியாத, அணுக முடியாத அடியையும் முடியையும் உடைய மலையாக அந்த சோதி நின்றது. அதனால் அது அண்ணாமலை எனப் பெயர்பெற்றது. இந்த உண்மையை,

பிரமன்அரி என்று இருவர்தம் பேதைமையால்
பரமம்யாம் பரமம் என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல்உருவாய் அங்கே அளவு இறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ

என்ற திருவாசகப் பாடல் விளக்குகிறது. "ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத் தொருவன்" என்று வில்லிபுத்தூரார் பாரதத்தில் கூறியிருக்கிறார். சிவபெருமான் அழல்மலையாய் நின்றது கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தின் மாலைப்போதில் ஆகும். அதையே ஆண்டு தோறும் திருவண்ணாமலையில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். நாடெங்கிலுமுள்ள சிவன் கோயில்களிலும் நடைபெறுகின்றது.

திருக்கயிலாயமான வெள்ளியங்கிரி வெண்மையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறது. திருவண்ணாமலை வெம்மையுடன் கலந்திருக்கிறது. நிலநூல் (Geology) நான்கு வகை மலைகளைக் கூறியிருக்கிறது. அவற்றில் இம்மலை நெருப்பினால் வந்தது (igneous rock) என்று கூறுகின்றனர். திருவண்ணாமலை பஞ்சபூதத்தலங்களில் அக்கினித்தலம்; ஆதாரத்தானங்கள் ஆறினுள் மணிபூரகத்தானம்: மூர்த்தி, தலம், தீர்த்தம்

இவை முறையாகப் பொருந்தியது. முத்தித் தலங்கள் நான்கில் நினைக்க முத்தியளிக்கும் சிறப்புடையது. இதை,

தில்லையைக் காணக் காசியிலிறக்கச்
சிறக்கு மாரூர்தனிற் பிறக்க
எல்லையி லருணகிரிதனை
நினைக்க வெய்தலா முத்தி

என்னும் அருணசலப் புராணப் பாடல் விளக்குகிறது. "அண்ணுமலையனை அடியேன் மறந்துய்வனே" என்பர் அப்பர்: "அண்ணு மலை அண்ணல் சேவடி நினைவார் வினை யிலரே" என்றும், "நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் அண்ணுமலையாரே" என்றும் சம்பந்தர் கூறியிருக்கிருர். சோணகிரி, சோணசைலம், அருணசலம், அருணகிரி, திருவருணை, திருவண்ணுமலை, முத்திபுரி, ஞானநகரம், சோணைவெற்பு, உயிர்வலி காங்தம் முதலிய பல பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. மகாசிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், பார்வதி தேவியார் தவம் செய்து இடப்பாகம் பெற்றதும் இப்பதியின் தனிப்பெருஞ் சிறப்புக்களாகும்,

இத்தலத்தில் வச்சிராங்கத பாண்டியன், வல்லாள மகாராஜன், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், குகை நமசிவாயர், குரு நமசிவாயர், ஈசானதேசிகர், பிரபுடதேவ மகா ராஜன், அருணகிரிநாதர், சிவப்பிரகாசர், சேஷாத்திரி சுவாமிகள், இரமண அடிகள் முதலியோர் வழிபட்டு இறைவன் இன்னருள் பெற்றவர்கள். இப்பழம் பெரும் பதியைப் பற்றி எழுந்த நூல்கள் பலப்பல. இருக்கு வேதம், அதர்வணவேதம், சரப உபநிடதம், சூதசங்கிதை, உருத்திரசங்கிதை, சிவ மகா புராணம், சிவரகசியம், தேவாரம், திருவாசகம், பதினேராங் திருமுறை, திருப்புகழ், பெரியபுராணம், கந்தபுராணம், அருணசல புராணம் இவைகள் குறிப்பிடத்தக்கவை. இன்னும் அந்தாதிகள், சதகங்கள், பதிகங்கள், மாலைகள் முதலியனவும் இருக்கின்றன.

திருவண்ணுமலை மலையைச் சுற்றிவர எட்டுக்கல் தொலைவு. மலை வலம்வருவதற்குள் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன. அருணசலேசுரர் கோயிலிலிருந்து நாலுகல் தொலைவில் அடி அண்ணுமலை என்று வழங்கும் ஆதி அண்ணுமலை கோயில் இருக்கிறது; அணி அண்ணுமலை என்றும் இதைக் கூறுவர்.

பண்டைக் காலந்தொட்டுக் கார்த்திகைத்தீப விழா நம் நாட்டில் நடந்துவந்திருப்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. 'வேலினேக்கிய விளக்கு நிலையும்' என்ற தொல்காப்பியக் கூற்றுக்கு 'கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு' என்று நச்சினர்க்கினியர் உரை கூறியிருக்கிருர். 'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு' என்று கார் நாற்பதிலும், 'தையலார் கொண்டாடும் விளக்கிடு காணுதே போதியோ பூம்பாவாய்' என்று சம்பந்தர் தேவாரத்திலும் வருகின்றன. 'மலைவிளக்கு', 'குன்றிலிட்ட தீபம்' என்ற பழமொழிகள் நம் நாட்டில் இந்த தீப விழாவின் பழம் பெருமை உணர்த்தி நிற்கின்றன. கார்த்திகை என்ற நட்சத்திரத்தின் பெயரே இம்மாதத்திற்கு அமைந்திருப்பது தனிச் சிறப்புடையதல்லவா?

திருவண்ணுமலையில் இவ்வாண்டு திருக்கார்த்திகைத் தீபப் பெருவிழா 4-12-59-ல் தொடங்கி 13-12-59-ல் முடிவடைகிறது. 13-12-59 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் 4 மணிக்கு பரணிதீபமும், மாலை 6-மணிக்கு மலைமேல் சோதி சொருப மகாதீப தெரிசனமும் நடைபெறும். பக்தகோடிகள் அனைவரும் சென்று உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய அண்ணுமலையானைத் தொழுது, தீப தெரிசனம் செய்து எல்லா நலன்களும் பெறுவார்களாக.

"ஆடிப்பாடி அண்ணுமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே"

"அல்லல் தீர்க்கும் அண்ணுமலை கைதொழ
நல்ல வாயின நம்மை அடையுமே"

—திருநாவுக்கரசர்.

சிக்கல், ஸ்ரீ நவநீதேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ சிங்காரவேலவர் கந்த சஷ்டி திருவிழா அக்டோபர் 30-ந்தேதி ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் 9-ந் தேதியுடன் முடிவுற்றது.

ஆணையாளர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

23—10—59	ஸ்ரீ கோபிநாதசுவாமி கோயில் காமாட்சிபுரம், திண்டுக்கல் வட்டம்.	மலைக்கோயிலுக்குப் படி எழுப்பு கல்நாட்டு விழா.
,,	ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோவில், பழநி.	மலைக்கோயில் ஊர்க்கோயில்களில் திருமுறைக்கோயில் நிறுவுதல்.
24—10—59	,,	அறநிலைய அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கோயிலின் களஞ்சியத் திறப்புவிழா, தேவாரப்பயிற்சி வகுப்பு ஆரம்ப விழா.
25—10—59	ஸ்ரீ கள்ளழகர் கோயில் அழகர் கோயில்.	அறநிலைய அமைச்சர் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட பிரபந்தப் பயிற்சி வகுப்பு ஆரம்பவிழா.
26—10—59	ஸ்ரீ ராமநாதசுவாமி கோயில் இராமேசுவரம்.	அறநிலைய அமைச்சர் அவர்களால் பாம்பன் (கோயில்) நிலத்தில் தென்னம் பிள்ளை நடுவிழா. ஆலய அலுவலகக் கட்டிடத்திற்கு அறநிலைய அமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட கால்கோள் விழா.
28—10—59	ஸ்ரீ மங்களநாதசுவாமி கோயில், திருஉத்திரகோசமங்கை.	அறநிலைய அமைச்சர் அவர்களால் திருப்பணிக்கு கால்கோள் விழா.
,,	ஸ்ரீ ஆதிஜகந்நாதப்பெருமாள் கோயில், திருப்புல்லாணி.	அறநிலைய அமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட பிரபந்தக் கல்வெட்டுத் திறப்புவிழா.
1—11—59	காஞ்சி குமரக்கோட்டம்.	கந்த சஷ்டிவிழா 31-10-59 தொடங்கிற்று. இரண்டாம் நாள் அன்று (1-11-59) அறநிலையத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்துகொண்டார்கள்.
14—11—59	ஸ்ரீ மகாகாளநாதசுவாமி கோயில், கோயில்திருமாகாளம், நன்னிலம் வட்டம்.	சம்பந்தர் தேவாரக்கல்வெட்டுத் திறப்புவிழா.
,,	ஸ்ரீ பார்வதீசுவர சுவாமி கோயில், இஞ்சிகுடி, பேரளம் அஞ்சல்,	திரு அருணகிரிநாதர் திருப்புகழ் கல்வெட்டு தில்லைக்கலம்பகம் கல்வெட்டுத் திறப்பு விழா.
14—11—59	ஸ்ரீ ருத்திரபதீசுவரர்கோயில் திருச்செங்காட்டான்குடி.	சம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள் தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா.
15—11—59	ஸ்ரீ வேதபுரீசுவரசுவாமி கோயில், சாட்டியக்குடி, கிள்ளுக்குடி அஞ்சல், நாகை வட்டம்.	கருவூர்த்தேவரின் திருவிசைப்பா கல்வெட்டுத்திறப்புவிழா.
,,	ஸ்ரீ நவநீதசுவரசுவாமி கோயில், சிக்கல்.	தேவாரத் திருப்புகழ்க் கல்வெட்டுத் திறப்பு விழா, திருமுறைக்கோயில்விழா.

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

(3) மாயை

உயிர்களாகிய நமக்கு இந்நிலையில் (பிறப்பு நிலையில்) அறியாமையும் அறிவும் ஒன்றுரேடொன்று மாறுபட்டு நிகழ்ந்து வருகின்றன. அறியாமைக்குக் காரணம் ஆணவம் எனப்படும் மூலமலம் ஆகும் என்பது முன்னர் விளக்கப்பட்டது. அவ் வறியாமையை விலக்கி, நம் அறிவை விளக்கி வருவது யாது?

சுருங்கக் கூறின், காணப்படும் உலகமே நம் அறிவை விளக்கி வளர்த்து வருகின்றது எனக் கூறலாம். அது இரண்டு பிரிவாக நின்று நம் உணர்வை விளக்கியும் பெருக்கியும் வருகின்றது. ஒன்று நம் உடம்பு; மற்றொன்று உடம்பின் சூழ்நிலையாகிய (environment) நிலமும் அதன்கண் உள்ள பொருள்களும் ஆகும்.

நம் உடம்பு நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களிலிருந்து இடையறுது வரும் ஒளி, ஒலி முதலிய பலவகை அலைவுகளால் (vibrations) தாக்கப்படுகின்றது. அவ் வலைவுகளின் தாக்குதலை நாம் நம் உடம்பில், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் உறுப்புக்களிலிருக்கும் நரம்பு முனைகளால் உணர்ந்து, அவற்றின் பதிவுகளுக்கு ஏற்றபடி நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களை இன்னது, இன்னது என உளங்கொண்டு வருகின்றோம். இவ்வாறு, இருட்டில் உள்ள கண்ணுக்குப் பொருள்களைக் காட்டும் விளக்குப்போல, நம் அறிவை விளக்கி வரும் உடம்பும் சூழ்நிலையுமாகிய உலகைத் தனு, கரணம், புவனம், போகம் என நான்கு வகைப்பட வைத்து விளக்குவது சைவ நூல் மரபு. தனு-உடம்பு (the physical aspect of the body); கரணம்-மனம் முதலிய அகக் கருவிகள் (the psychical aspect of the body); புவனம்-உடம்புக்கு ஆதாரமாக உள்ள நிலம்; போகம்-நிலத்தில் உள்ள நுகர்ச்சிப் பொருள்கள்.

காணப்படும் பொருள்களெல்லாம் இந்த நான்கு வகையில் ஒன்ருக அடங்கும். இவை அனைத்தும் **மாயேயம்** என்ற சொல்லால் குறிக்கப்படும். மாயேயம்-மாயையின் காரியம். காணப்படும் பொருள்கள் எல்லாவற்றுக்கும் முடிந்த முதற் காரணமாக (the ultimate substantial cause) உள்ள பொருள்கள் **மாயை** எனப்படும்.

நாம் கையாளும் சால், கரகம், குடம், முதலியனவும், இருந்து வாழும் வீடும் மண்ணுகிய முதற் காரணத்திலிருந்து ஆக்கப்படுகின்றன. இவை தம் உருக்குலைந்து அழியும் போது மண்ணுகவே மாறும். இதுபோல, தனுகரண புவன போகம் என்பவை மாயையிலிருந்து தோன்றி, அம்மாயையிலே மறைவன ஆகும். **மாயா** என ஆரியத்தில் வழங்கும் சொல்லே தமிழில் **மாயை** என ஈறு திரிந்து வழங்கும். மா-ஒடுங்குதல்; யா-வருதல். எல்லாப் புறப்பொருள்களும் எங்கு ஒடுங்கியிருந்து, எங்கிருந்து தோன்றுமோ அந்த அடிப்படைப் பொருளே **மாயா** அல்லது **மாயை** எனப்படும்.

இத்தகைய மாயை அறிவில்பொருளாய், அருவாய், சத்திருபமாய், வியாபகமாய், என்றும் உள்ளது ஆகும். இது முதல்வன் திருவருளால் வியாபிக்கப்பட்டு, அவன் திருக்குறிப்பின்படி தன் காரியங்களைத் தோற்றியும் ஒடுக்கியும் வரும்.

"விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"

என்னும் திருவருட்பயன் குறட்பா மாயை யின் இயல்பைச் சுருக்கமாகவும் தெளிவாக வும் விளக்குகின்றது.

"ஞாயிற்றின் தோற்றம் உளதாம் வரை யில், விளக்குகள் இருளைச் சிறிது நீக்கிப் பொருள்களைக் கண்களுக்குக் காட்டும். அது போல, சிவஞானம் வெளிப்படும் வரையில், மாயையினின்றும் தனு முதலிய காரியங்கள் உயிர்களின் கன்மத்துக்கு ஈடாகத் தோன்றி உயிர்களோடு கலந்து நின்று, அவற்றின் அறியாமையைச் சிறிது நீக்கி உபகரிக்கும்"- என்பது இப்பாட்டின் பொருள்.

(4) மாயையின் வகை

மாயை சுத்தமாயை அசுத்தமாயை என இருவகைப்படும். இவற்றுள் சுத்தமாயை மல கன்மங்களோடு விரவாதது ; தன்னேடு சம்பந்தப்பட்டுள்ள ஆன்மாக்களுக்கு இன்பம் ஒன்றே பயப்பது ; மயக்காது, பேரறிவையும் பேராற்றலையும் உதவுவது. முதல்வன் திருவருள் நேரே பற்றி நின்று தொழிற் படுத்துதற்கு உரியது. அசுத்தமாயை மல கன்மங்களோடு கலந்துநின்று உயிர்களை மயக்கி அறிவிப்பது. இன்பத்துன்ப மயக்கம் என்னும் மூன்றனையும் தருவது.

(5) சுத்தமாயையின் காரியம்

சுத்தமாயையின் காரியம் **சொல்லும் பொருளும்** என இருவகைப்படும். சொல்லா வது உயிர்கள் உலகப் பொருள்களை இஃது இன்னது என வேறு படுத்தி உணரும் சவி கற்ப உணர்வை (conceptual knowledge related to the wordly things)ப் பயக் கும் மொழி (language) ஆகும். அஃது எழுத்து, சொல், மந்திரம் என மூன்ருக வைத்து எண்ணப்படும். எழுத்து வன்னம் எனப் படும் ; சொல் பதம் எனப்படும்.

பொருள் வடிவாகிய காரியம் **கலை** என வும் **தத்துவம்** எனவும் இருவகைப்படும். இவற்றுள் கலை நிவிருத்திகலை, பிரதிட்டா கலை, வித்தியாகலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை என ஐந்தாம். தத்துவம் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என ஐந்தாம். இவை சிவதத்துவம் எனப்படும்.

(6) அசுத்த மாயையின் காரியம்

அசுத்த மாயையின் காரியம் **வித்தியா தத்துவம், ஆன்மதத்துவம்** என இருவகைப் படும். இவற்றுள் வித்தியாதத்துவங்கள் **மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்** என ஏழாகும். **ஆன்ம தத்துவங்கள் சித்தம், புத்தி, ஆங்காரம், மனம்** என்னும் அந்தக்கரணம் **நான்கு** ; மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் **அறிவுப்பொறி ஐந்து** ; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என் னும் **தொழிற்பொறி ஐந்து**; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் **தன்மாத்திரை ஐந்து**, வான், வளி, அனல், புனல், மண் என்னும் **பூதம் ஐந்து-ஆக இருபத்து நான்கு ஆகும்.**

எனவே, சிவதத்துவம் ஐந்து, வித்தியா தத்துவம் ஏழு, ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு ஆகச் சைவத்தில் கூறப்படும் தத்து வங்கள் முப்பத்தாறு ஆகும்.

(7) தத்துவங்களின் தொழிற் பாடு

படைப்புக் காலம் முதல் ஊழிக் காலம் வரை தன் தன்மை மாருது நிலைத்து உள்ள பொருள்கள் தத்துவங்கள் எனப்படும். தத்- அது, துவம்-தன்மை; எனவே, தன் தன்மை கெடாதது தத்துவம் என்றபடி.

மேலே கூறியபடி மூவகைப்படும் தத்து வங்களின் செயலைச் சுருக்கமாகக் கூறினுல், அவை உயிரை உலக போகத்தில் அழுந்தும் படி செய்வன எனக் கூறலாம்.

உலகியல் அறியாத இளைஞன் ஒருவ னுக்குச் சில தோழர்கள் உடனிருந்து உலகி யலில் பிரவிருத்தியை உண்டுபண்ணுவது போல, மூலமலங் காரணமாக அறியாமையில் அழுந்தியுள்ள உயிர்க்கு உடனிருந்து அறிவு இச்சை முயற்சிகளை எழுப்பும் கருவிகள் வித்தியாதத்துவங்கள் எனப்பட்டன. இவற் ரேடு கூடி உலக முகப்பட்டு உலக நுகர்ச்சி யைப் பெறச் சித்தமாக உள்ள நிலையில் உயிர் புருடன் என்ற பெயரால் குறிக்கப் படும்.

இனி, உலக நுகர்ச்சியைத் தரும் தத்து வங்களே ஆன்ம தத்துவம் எனப்பட்டன.

இவற்றின் முதற்காரணம் மூலப் பிரகிருதி ஆகும். மூலப்பிரகிருதி, தன் ஆடை அணி செயல் என்பவற்றுல் ஆடவரை மயக்கும் இளமங்கை போன்றது. புருடன் என நிற்கும் உயிர் மூலப்பிரகிருதியை அறிந்து, அழுந்தி, மயங்கி, அதனுல் தரப்படும் இன்பம், துன்பம், மயக்கம் என்னும் மூவகை வேதனைகளை மாறி மாறி அனுபவித்து வரும். மூலப்பிரகிருதி தன் காரியங்களாகிய ஆன்ம தத்துவ வடிவத்தில் உயிரைச் சார்ந்து நிற்கும். முதல்வன் திருவருள் இவ்விருவகை தத்துவங்களையும் பற்றி இயக்குதற்குக் கருவிகளாக இடை நிற்பனவே சிவ தத்துவங்கள் ஆகும்.

(8) தத்துவங்களின் விளக்கம்

நம் உடம்பில் நிகழும் நிகழ்ச்சிகளை அறிவு என்றும், தொழில் என்றும் இரண்டு பிரிவாகப் பகுத்து உணரலாம். இவ்விரண்டில் அறிவு நிகழ்ச்சி கேட்டல், உறுதல், காண்டல், சுவைத்தல், மோத்தல் என ஐவகைப்பட நிகழ்கின்றது. இவை உடம்பில் உள்ள செவி, தோல், கண், நா, மூக்கு என்னும் ஐந்து உறுப்புக்களில் உள்ள நரம்பு முனைகளால் நிகழ்தலால், இந்நரம்பு முனைகள் அறிவுப் பொறிகள் (ஞானேந்திரியங்கள்) எனப்பட்டன.

இவ்வாறே, நம் உடம்பில், தசை நார், மூச்சுப்பை முதலியவற்றின் சுருக்க விரிவு பற்றி, தோன்றும் வினை நிகழ்ச்சிகளை ஐந்து வகையில் அடக்கிக் கூறினர் நம் முன்னேர். அவை உரையாடல், போதல் வருதல், இடுதல் ஏற்றல், மலமூத்திர வெயர்வையைக் கழித்தல், கருவுய்த்தல் அல்லது கருக்கோடல் என்பவை. இச்செயல்களுக்குக் கருவியாக வுள்ள உள்நாக்கு, கால், கை, பாயு, உபத்தம் என்பவை தொழிற்பொறிகள் (கன்மேந்திரியம்) எனப்பட்டன.

இனி, அறிவுப் பொறிகளுக்கு எதிர் புலனுகவுள்ள குணங்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்தாகப் பிரிந்து நிகழ்கின்றன. இக்குணங்களுக்குப் பற்றுக் கோடாக உள்ள பொருள்கள் மண் நீர் அனல் கால் வான் என இயற்கையில் ஐந்தாகப் பிரிந்து தோன்றுதலால், அவை ஐம்பூதம் எனப்பட்டன. இப்பூதங்களின் நுண்ணிய நிலையே தன் மாத்திரை எனப்பட்டன. தன் மாத்திரை எனினும் சூக்கும பூதம் எனினும் பொருள் ஒன்றே.

மேற்கூறிய நாலைந்து, இருபது கருவிகளை இவ்வாறு மனங்கொள்ளுதல் எளிது.

இவற்றின் மேலாகிய அகக்கருவிகளாகிய அந்தக்கரணங்கள் பொதுவாக மனம், நெஞ்சு, உள்ளம் முதலிய பெயர்களால் குறிக்கப்பட்டு வழங்கும். இவற்றின் சிறப்பியல்பு யாது என்றுல், நமக்குப் பொருள்களைப் பற்றிய முக்கால உணர்வைத் தருவன இவை எனலாம். புறக்கரணங்களாகிய அறிவுப் பொறிகள் நிகழ்காலப் பொருள் ஒன்றனையே அறியும்; முக்காலப் பொருளையும் அறிதற்கு அவை கருவியாகா. அதற்கு அகக்கரணங்களே கருவியாகும் என்று உணர்ந்து கொள்ளுதல்வேண்டும்.

அகக்கருவியை மனம் என ஒன்றுகவே வைத்துக் கூறுவது உலகியல் வழக்கு. ஆனுல், மெய்ந்நூல்கள் தொழில் வேறுபாடு பற்றி அதை மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என நான்காக வகுத்துக் கூறும்.

ஐம்பொறிகளுள் ஒன்றன் வாயிலாக, புறத்தே உள்ளதொரு பொருளைக் காணும் போது, பின்வருமாறு நம் அகத்தே அறிவு தொழிற்படுகின்றது, முதற்கண் அப் பொருளை விரும்பிப் பற்றுதலும், பின் அதனை இன்னது என நிச்சயித்தலும், நிச்சயித்தபின் அதன்கண் ஒன்றுதலும், ஒன்றியுறும்போது இஃது இன்பம், அல்லது இது துன்பம் என அறிந்து அதன்கண் அழுந்துதலும் என நால் வகைச் செயல் நம்அகத்தே நிகழும்.

இங்கு, பொறிவாயிலாக வந்த புறப் பொருளின் பதிவை (Sense impression or percept)ப் பற்றுங் கருவியாக உள்ளது மனம் எனப்படும்; அதனை இன்னது என நிச்சயிப்பது **புத்தி** எனப்படும்; அதன்கண் ஒன்றும்படி நம் முயற்சியை எழுப்புவது **ஆங்காரம்**; பின் அழுந்தி இன்பத் துன்ப வேதனை உறுதற்கு ஏதுவாக நினைவு ரூபமாக நிகழ்வது **சித்தம்** எனப்படும். இக் கருத்தை

'அந்தக் கரணம் அடைவே உரைப்பக்கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம்-சிந்தையிவை

பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்
உற்றது சிந்திக்கும் உணர்' [தங்(கு)

என்னும் உண்மை விளக்கச் செய்யுளால் உணரல் கூடும்.

இங்குக் கூறிய இருபத்து நான்கு தத்துவங்களும் சத்துவம், ராசதம், தாமதம் எனப் படும் மூவகைக் குணங்கள் ஏற்றத் தாழ்வாகக் கலந்து விளங்கும் விளக்கங்களே ஆகும். முக்குணங்கள் பிரிந்து விளங்கித் தோன்றாமல், அரும்பில் உள்ள மணம்போல, அடங்கி நின்ற நிலையே மூலப்பகுதி எனப் படும். உயிர் மூலப்பிரகிருதியைச் சார்வதால் தான் அதற்குக் காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களும் உண்டாகின்றன. மூலப்பிரகிருதி மான் எனவும் வழங்கும்.

மூலப்பிரகிருதியின் காரியம் என மேற் கூறிய இருபத்துநான்கு தத்துவங்களும் வைதிக சமயத்தார் அனைவராலும் கொள்ளப் படுவன ஆகும். ஆனல் சைவத்தில் இவற்றுக்கு மேல், இவற்றினும் நுண்ணியனவாக பன்னிரண்டு தத்துவங்கள் உள எனக் கொள்ளப் படுகின்றன. சைவத்தின்படி மூலப்பிரகிருதி பின் கூறப்படும் கலை என்னும் தத்துவத்தில் தோன்றிய காரியமே ஆகும். இனி, அசுத்த மாயையின் முதற் காரியம் மாயை என்னும் தத்துவம் ஆகும். ஆணவத்தில் அழுந்தி அறிவிழந்து இல்லை யெனும்படி இருந்த உயிர் இக்காரிய மாயையைப் பொருந்தும்போது தன் அறிவிச்சை செயல், உண்மை மாத்திரையின் விளங்கப் பெற்று, ஒன்றையும் குறிக்கமாட்டாது மயங்கி நிற்கும். தைத்திரீய உபநிடதம் கூறும் ஐங்கோசங்களுள் ஆனந்த மயகோசம் எனப்படுவது இக்காரிய மாயை எனவே சைவத்துட் கொள்ளப்படுகின்றது.

பின், மாயையினின்று காலம், நியதி, கலை என்னும் தத்துவங்கள் தோன்றின. பின், கலையிலிருந்து வித்தையும், மூலப்பிரகிருதியும், அவற்றுள் வித்தையிலிருந்து அராகமும் தோன்றின. இவற்றுள் கலை ஆணவத்தின் மறைப்பைச் சிறிது நீக்கி உயிரின் முயற்சியை எழுப்பும்; அதனோடு, உயிரின் செயலாற்றலை மூலப்பிரகிருதியின் காரியமாகிய அந்தக் கரணங்களைப் பற்றும் படியும் செலுத்தும். அந் நிலையில், கலையின் விருத்தியாகிய வித்தை உயிரின் அறிவாற்றலை விளக்கும்; அராகம் உயிரின் விழைவாற்றலை விளக்கும். இங்ஙனம் கலை வித்தை அராகங்களால் உயிர் தன் செயல், அறிவு, இச்சை என்னும் மூவகை ஆற்றலும் விளங்கி, உலகப் பொருள்களால் வரும் இன்பத் துன்ப மயக்க நுகர்ச்சியைப் பெறும் தகுதியுடையதாய் நிற்கும் நிலையில், அது புருடன் எனப் படுகின்றது. உயிர் புருடனாய் நின்று மூலப் பகுதியால் வரும் முக்குண விளக்கமாகிய இன்பத் துன்ப மயக்கங்களை நுகரும் போது, காலம் அப்போகத்தை இத்துணைக் காலம் நுகர்க என வரையறை செய்யும்; நியதி வினைக்கீடாக இன்ன இன்னதையே நுகர்க என நியமிக்கும். இவ்வாறு உயிர்க்கு உடனின்று உதவும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களின் தொகுதியையே தைத்திரீய உபநிடதம் விஞ்ஞானமய கோசம் எனக் குறிக்கின்றது.

மேலே விளக்கப்பட்ட காரிய மாயை முதலிய ஏழும் உயிரைப் போக நுகர்தற் குரிய கருத்தாவாகச் செய்து, அந்நுகர்ச்சியில் எழுச்சியைத் தருதலின், இவை போசயித்ரு காண்டம் எனப்படும். எனவே, உயிர்க்குப் புருடனுந்தன்மையை எய்துவிப்பவை வித்தியா தத்துவங்கள் என்பதும், அப்புருடனைப் போக்கியமாய் நின்று மயக்குவன மூலப்பிரகிருதியின் காரியம் எனப்பட்ட ஆன்ம தத்துவங்கள் என்பதும் உணரப்படும். போசயிதா-நுகர்வோன், அனுபவிப்போன். போக்கியம்-நுகரப்படுவது, அனுபவம்.

இனி, இவ்விருவகை முப்பத்தொரு தத்துவங்களைத் தொழிற்படுத்துவனவாய், சுத்தமாயையின் விருத்தியாய், முதல்வனது ஞானக்கிரியா சத்திகளின் நிலைக்களமாய் உள்ள தத்துவங்களே மேலே சிவதத்துவம் எனப்பட்ட ஐந்துமாம் இவை செலுத்தும் கருவிகளாதல் பற்றிப் பிரேரக காண்டம் எனப்படும். பிரேரகம்-செலுத்துவது. சுத்த மாயை விந்து, குண்டலினி என்னும் பெயர்களாலும் வழங்கும். அசுத்த மாயை மோகினி எனவும் அதோமாயை எனவும் வழங்கும்.

(9) உடம்பின் வகை

மேலே விளக்கிய முப்பத்தொரு தத்துவங்களுள் (காரிய) மாயை உயிரின் காரண சரீரம் எனப்படும்; ஆனந்தமய கோசம் எனப்படுவது இதுவே.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தன் தொகுதி கஞ்சுக சரீரம் எனப்படும். விஞ்ஞானமாய கோசம் எனப்படுவது இதுவே. (கஞ்சுகம்-சட்டை; இவ்வைந்தும் உயிர்க்குச் சட்டைபோல உடன் பொருந்தி இருப்பவை.)

மூலப்பிரகிருதியின் முக்குணங்களும் விளங்கி நிற்கும் நிலையில், அவ்விளக்க நிலை குணதத்துவம் எனப்படும். சித்தம் என அந்தக்கரணமாக வைத்து உரைக்கப்படுவதும் இதுவே. இது குணசரீரம் எனப்படும். இது மனம் முதலிய மூன்று அகக்கரணங்களையும் அடங்கக் கொண்டிருப்பது ஆகலின், இதுவே மனோமய கோசம் எனப்படுவது.

காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் என்னும் மூன்றும் சேர்ந்து உயிர்க்கு மிக நெருங்கிய நிலையில் மிக நுட்பமாக அமைந்த கருவிகளாக அமைவன. ஆதலால், இவற்றைத் தொகுத்து பரசரீரம் என்னும் ஒரு சொல்லால் கூறுவதும் நூல் வழக்காம். பரம்-அதி நுட்பம்.

இப்பரசரீரத்திற்கு மேல், சூக்கும பூதம் எனப்பட்ட தன் மாத்திரை ஐந்து, மனம் புத்தி ஆங்காரம் என்னும் அகக்கரணம் மூன்று ஆக இவ்வெட்டுத் தத்துவங்களின் தொகுதி சூக்கும சரீரம் எனப்படும். கனவு நிலையில் நமக்கு உணர்வும், போக நுகர்ச்சியும் உண்டாதற்குக் காரணமா உள்ளது இச்சரீரமே ஆகும். ஆயுள் முடிவில் பருவுடலை நீத்தபின் உயிர் பிறிதோர் உடம்பை எடுத்தற்கும், ஒளிஉலகு, இருள் உலகிற் செல்லுதற்கும் பற்றுக் கோடாக உள்ளதும் இச்சரீரமே ஆகும். இதுவே உபநிடத வழக்கில் பிராணமய கோசம் எனப்பட்டது. இஃது எட்டுத் தத்துவங்களால் அமைந்தமையின், புரியட்டகம் எனவும் கூறப்படும்.

இனி, இப்புரியட்டகத்தின் காரியமாய், ஐம்பூத பரிணமம் எனப்படுவதாய், கண்ணுக்குப் புலப்பட்டு, நனவு நிலையில் போக்குவரவுக்கும் போக நுகர்ச்சிக்கும் பயன்படும் பருவுடம்பே தூல சரீரம் எனப்படும். இஃது அன்னமய கோசம் எனப்படும்.

(10) ஐந்தவத்தை

உயிர் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து நிலைகளில் அன்றாடம் ஏறியும் இறங்கியும் வருவதை நாம்உள்நோக்கி (by introspection) உணரலாம்.

உயிர் அன்னமய கோசம் எனப்பட்ட பருவுடம்பைப் பற்றித் தொழிற்பட்டு வினைப்பயனை நுகரும் நிலையே நனவு அல்லது சாக்கிரம் எனப்படும். அதை விட்டுப் பிராணமய கோசம் எனப்பட்ட சூக்கும உடம்பைப் பற்றி நினைவுணர்வுகளோடு கூடி, சூக்கும வினைப்பயன்களை நுகரும் நிலை கனவு அல்லது சொப்பனம் எனப்படும். அவ்விரண்டையும் விட்டு மனோமய கோசம் எனப்பட்ட சித்தத்தைப் பற்றி நின்று முன்னைய வியாபாரங்களிலிருந்து நீங்கி ஒடுக்கமுறும் நிலை உறக்கம் அல்லது சுழுத்தி எனப்படும். அம்மூன்றையும் விட்டு விஞ்ஞானமய கோசம் எனப்பட்ட கஞ்சுக சரீரத்தைப்பற்றி அறிவு நிகழ்ச்சி சிறிதும் இன்றி உயிர்ப்பு முதலிய செயல்களை மாத்திரம் உடையதாய் நிற்கும் நிலை பேருறக்கம் அல்லது துரியம் எனப்படும். இனிக் கஞ்சுக சரீரத்தின் தொழிற்பாடும் நிகழாமையின், ஆனந்தமயகோசம் எனப்பட்ட காரிய மாயையின் செயல் ஒன்றே நிகழப்பெற்று உயிர்ப்பும் அடங்கி நிற்கும் நிலை உயிர்ப்படக்கம் அல்லது துரியாதீதம் எனப்படும்.

இவ்வாறு அசுத்த மாயா காரியங்களாகிய ஐங்கோசங்களைப் பற்றி, அவ்வவற்றால் விளங்கும் உணர்வுகளையே தன் இயல்பாகக் கொண்டு விளங்கி, அவத்தை வேறுபாடு அடைவதாய், இவ்வைங் கோசங்களுக்கும் அப்பாற்பட்டதாய் உள்ள தன்னுணர்வே (Self-consciousness) ஆன்மா எனப்பட்டது.

✳ திருவெஞ்சமாக்கூடல் ✳

பண்ணேர்மொழியாளை யோர்பங்குடையாய்
　　படுகாட்டகத்தென்றும் ஓர்பற்றொழியாய்
தண்ணார்அகிலும் நலசாமரையும்
　　அலைத்தெற்றுசிற்றா றதன்கீழ்க்கரைமேல்
மண்ணார்முழவும் குழலும்இயம்ப
　　மடவார்நடமா டுமணியரங்கில்
விண்ணார்மதிதோய் வெஞ்சமாக்கூடல்
　　விகிர்தாஅடியே னையும்வேண்டுதியே

—சுந்தரர்.

பாடல்பெற்ற கொங்குநாட்டுத் தலங்கள் ஏழில் ஒன்று திருவெஞ்சமாக்கூடல். இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர்ப்பகுதியில் இருக்கிறது. கரூரிலிருந்து தென்மேற்கில் அரவக்குறிச்சிசாலையில் 8 கல் தொலைவு சென்று, கிளைச்சாலையில் பிரிந்து ஐந்து கல் நடந்தோ வண்டிகளிலோ போய் இத்தலத்தை அடையலாம். தங்குவதற்கு தேவஸ்தானக் கட்டிடம் ஒன்றிருக்கிறது.

சிவபெருமான் திருக்கோயில் பள்ளத்தில் கிழக்கு நோக்கியிருக்கிறது. எதிரிலுள்ள ஊர் மேட்டிலிருக்கிறது. அங்கிருந்து சில படிக்கட்டுகள் வழியே இறங்கித்தான் கோயிலை அடையலாம். கோபுரம் இல்லை. மிகப்பழைய கோயில். இரண்டு பிரகாரங்கள் உள்ளன. பிரகாரத்தில் திருமாளப்பத்தியும் இருக்கிறது. கோயிலுக்குப் பின்புறம் தெற்கிலிருந்து குடவனாறு (குழகனாறு) ஓடி நாலு கல் தொலைவில் ஆம்பிராவதி நதியுடன் கலக்கிறது. கோயிலுக்குத் தெற்கே கொஞ்ச தூரத்தில் சிற்றாறு என்னும் காட்டாறு இதனுடன் சேருகிறது. இவ்விரண்டு ஆறுகள் கூடும் இடத்தில் இப்பதி இருப்பதால் கூடல் என்றும், வெஞ்சன் என்னும் அரசன் இங்கிருந்து அரசாண்டு, இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றமையால் வெஞ்சமாக்கூடல் என்ற பேர் வழங்கலாயிற்றென்றும் கூறப்படுகிறது. வெஞ்சமாங்கூடலூர் எனத் திரித்து இப்போது வழங்கப்படுகிறது.

இங்கெழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம் **விகிர்தேசுவரர்**; இறைவி திருப்பெயர்கள் விகிர்தேசுவரி, மதுரசுபாஷினி. தேவாரத்திலும் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலும் அம்பிகையின் பெயர் **பண்ணேர் மொழியம்மை** என்று குறிக்கப்படுகிறது. சுந்தரர் தேவாரத்தில் எம்பெருமானை **விகிர்தா** என்றே கூறுகிறார். கோயில் கல்வெட்டுக்களில் **திருவெஞ்சமாக் கூடல் ஆளுடையதேவர், ஆளுடைய நாயனார், திருவெஞ்சமாக்கூடலுடைய நாயகனார்** என்றெல்லாம் காணப்படுகிறது. இறைவன், அம்பிகை சந்நிதிகள் கிழக்கு நோக்கியே இருக்கின்றன.

இத்தலத்தைப்பற்றி **சுந்திரமூர்த்தி சுவாமிகள்** பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம் அருளியிருக்கின்றார். ஆறு பாடல்களில் சிற்றாற்றின் கீழ்க்கரைமேல் இப்பதி யமைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். ஆற்றின் வளத்தையும், ஊரின் செழிப்பையும், பெண்கள் திரளாக வந்து இறைஞ்சுவதையும், விழாக்களின் சிறப்பையும் வெகு அழகாகச் சொல்கிறார். ஊரின் பெருமையை "வளங்கொள் மதில்மாளிகை கோபுரமும் மணி மண்டபமும் இவை மஞ்சு தன்னுள் விளங்கும் மதிதோய் வெஞ்சமாக் கூடல்" என்கிறார். மாதர்கள் இறைவனை வழிபட்டதை "வரை மானனையார் மயிற் சாயனல்லார் வடிவேற்கண் நல்லார் பலர் வந்திறைஞ்சும்" என்று கூறுகிறார். எம்பெருமான் திருவருள் சுரக்கும் பெற்றியினை "கலந்தார்க்கருள் செய்திடும் கற்பகமே", "தொழுவார்க் கெளியாய் துயர்தீர நின்றாய்" என்று சொல்கிறார். **சேக்கிழார்** பெரியபுராணத்தில் சுந்தரர் இங்கு வந்து வழிபட்டதை "அருவரைச் சுரங்களும் பிறவும் பாயும் நீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து மேயவண் தமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து" என்று கூறியிருக்கிறார். **அப்பர் சுவாமிகள்**, "உஞ்சேனை" என்று தொடங்கும் க்ஷேத்திரக்கோவைத் திருப்பாடலில் இப்பதியைக் கூறியுள்ளார். **அருணகிரிநாதர்** இத்தலத்திற்கு ஒரு திருப்புகழ்ப் பாடல் அருளியுள்ளார். **கொங்கு மண்டல சதகத்திலும்** இப்பதியைப் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. திருச்செங்



திருவெஞ்சமாக்கூடல் வெஞ்சன் உருவம் வலதுபுறம் மார்புவரை புதைந்துள்ளது.

கோடு-வித்துவான் தி. அ. முத்துச்சாமிக் கோனூர் என்பவர் 700 பாடல்களுடைய தலபுராணம் ஒன்று இயற்றியிருக்கின்றனர்.

கோயில் மதிலுக்கு வெளியில் வடமேற்கில் ஆற்றோரம் வெஞ்சன் என்பவனின் சிலை மார்புவரை மண்ணில் புதைந்திருக்கிறது. மக்கள் ஆண்டுக்கொருமுறை இங்கு வழிபாடு செய்கின்றனர். கோயிலுக்கு வடக்கே சற்று தொலைவில் பொன்பரப்பி அம்மன் கோயில் இருக்கிறது. சிவபெருமான் இங்கு ஒரு திருவிளையாடல் நிகழ்த்தினர். தாம் ஒரு கிழவேடம் பூண்டு, சிவகுமாரர்களை இரு சிறுவர்களாக்கி, உமையம்மையை முதியவளாகச் செய்து, இரு குமாரர்களையும் கிழவியிடம் ஈடுவைத்துப் பொன் வாங்கி சுந்தரர் பாடலுக்குப் பரிசிலாக வழங்கினர். இச் செய்தியை,

கிழவேதிய வடிவாகி
விருத்தையைக் கிட்டிஎன்றன்
அழகாகு மக்கள்அடகு கொண்டுஅம்பொன்
அருளுதி யென்றேற்று
எழுகாதலால் தமிழ்பாடிய
சுந்தரற்கு ஈந்தவொரு
மழுவேந்தியவிகிர் தேசுரன்வாழ்
கொங்கு மண்டலமே

எனக் கொங்குமண்டலச் சதகம் கூறுகின்றது.

இக்கோயிலில் இரண்டுகால பூசை நடைபெறுகிறது. மாசி மாதம் பத்து நாட்கள் மகோற்சவம் உண்டு. அழகிய சிறு கோயில். பல பாகங்கள் சிதைவுற்றுத் திருப்பணி செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றது.

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சுவாமி, அம்பாள் கர்ப்பக்கிரக வெளிச் சுவர்களிலும், முன் மண்டபச் சுவர்கள், தூண்களிலும், திருமாளபத்தி தென்வட சுவர்களிலும் காணப்படுகின்றன. அவைகளில் 'இராஜகேசரி', 'ஜயகேசரி' என்ற சொற்கள் தனியே பொறிக்கப் பெற்றுள்ளன. கோனேரின்மை கொண்டான், ஜடாவர்மன் சுந்தரபாண்டியதேவன், பாண்டியன் மாறவர்மன் குலசேகரதேவன், வீரராஜேந்திரன், வீரபாண்டியன், இம்மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டவை. நந்தனூர், நத்தம், திருவெஞ்சமாக் கூடல், இளமாடத்தூர் இந்த ஊர்களைக் கோயிலுக்கு இறையிலி தேவதானமாக விடப்பட்டதையும், நாகம்பள்ளி, துறையூர்நத்தம், மங்கலம் என்ற பாண்டிய தேவர்க்குநல்லூர் இவ்வூர்களைக் கோயில் பூசை முதலியவற்றிற்காக மானிபமாக வழங்கியதையும், கோயில் கணக்கு வேலைபார்க்கும் ஒருவருக்கு வீட்டுமனை கொடுத்ததையும், திருவெஞ்சமாக் கூடல் உட்கிடை நெடுங்குளி என்ற முனிவரதப்பெருமாள்நல்லூரைக் கோயில் ஸ்ரீகாரியம் பார்ப்போர் கோயில் காணியாளர் ஒருவருக்கு அளித்ததையும், விகிர்தேசுவரர் கோயிலில் விளக்கெரிப்பதற்காகப் பொன் வழங்கியதையும், சுந்தரபாண்டிய தேவன் என்கிற கண்டியாத் தேவன் என்பவன் பண்ணேர்மொழியம்மை கோயிலில் சில திருப்பணிகள் செய்ததையும் இக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

இவ்வூர் ஒரு கோட்டையாக இருந்து அழிந்துபோனதற்குரிய அடையாளங்களும் காணப்படுகின்றன.

வண்டுபோற் சாரத் தருள்தேடி
மந்திபோற் காலப் பிணிசாடிச்
செண்டுபோற் பாசத் துடனுடிச்
சிந்தைமாய்த் தேசித் தருள்வாயே
தொண்டராற் காணப் பெறுவோனே
துங்கவேற் கானத் துறைவோனே
மிண்டராற் காணக் கிடையானே
வெஞ்சமாக் கூடற் பெருமானே

—அருணகிரிநாதர்.

இளையான்குடிமாறநாயனார்

இளையான்றன் குடிமாறன டியார்க்கு மடியேன்
—சுந்தரர், திருத்தொண்டத்தொகை.

இயலா விடைச்சென்ற
மாதவர்க்கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து
வாரிமனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத்
தீங்கறியாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான்குடியுடை
மாறனெங் கற்பகமே.

—நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி,

இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்ற ஒரு வேளாளர் வாழ்ந்துவந்தார்; தில்லையில் எல்லையில்லா நடம்புரியும் இறைவன் கழலைச் சிந்திப்பவர்; சிவனடியாரிடம் பேரன்புமிக்கவர். உழவுத் தொழிலால் வரும் செல்வமும், அடியார் பூசை செய்தல் வேண்டுமென்ற எண்ணமும் கொண்டவர். அடியவர் எவர் வந்தாலும் அவர்களை எதிர்கொண்டு கைகூப்பி வணங்கி, இன்சொற்கள் பேசி, வீட்டிற்கு அழைத்துச் சென்று, திருவடிகளை விளக்கி, ஆசனத்தமர்த்தி அருச்சித்து அறுசுவை யமுதளித்துவரும் செயலை மேற்கொண்டிருந்தார்.

மாறனார் செல்வமிருந்த காலத்தில் இப்படிச் செய்வதன்றியும், உண்மையாக வறுமை வந்து துன்புற்றபோதும் இப்படியே செய்ய வல்லவர் என்று உலகத்தவர்க்கு அறிவிக்கும் பொருட்டு நாயனாருடைய செல்வம் நாள்தோறும் மெல்ல மறைந்துபோகும்படி இறைவன் திருவுளம்கொண்டார். வளங்களெல்லாம் சுருங்கியும் மனம் சுருங்காத மாறனார் தமது பொருள்களை மாறியும், கடன்கள் வாங்கியும் முன் செய்துவந்த அடியார் பூசையை முட்டின்றிச் செய்து வந்தார்.

மழைக்காலம்; நள்ளிரவு; இறைவன் ஒரு தவமுனிவர் வேடங்கொண்டு நாயனார் இல்லத்துக் கெழுந்தருளினார். ஊண் உறக்கமின்றிக் கதவடைத்துக் கொண்டிருந்த நாயனார் விருந்தினரை எதிர்கொண்டழைத்து, அவருடைய திருமேனியில் ஈரம்போக்கி ஆசனத் தமரச்செய்து அவருக்கு உணவூட்ட எண்ணினார். மனைவியாரை நோக்கி "நமக்கு முன்பு உணவில்லை யாயினும் இவ்வடியார்க்கு உணவூட்டல் எங்ஙனம்?" என்று கேட்டார். அவ்வம்மையாரும் "வேறொன்று காணப்படவில்லை; நேரமோ அகாலமாயிற்று; அயலாரும் இனிக்கொடுப்பவரில்லை; வேறு போமிடமுமில்லை; பகலில் விதைத்த நெல்முளைகளை வாரி வந்தால் கூடியவாறு அமுது சமைக்கலாம்" என்றார்.

மாறனார் மிகமகிழ்ந்து வயலுக்குப் புறப்பட்டார்; பெருமழை; பேரிருள் கூட்டம் கட்டுவிட்டு உருகுகின்றது போலிருந்தது. உள்ளத்திலுள்ள அன்பு ஊக்கம்தர, இறைகூடை ஒன்றைத் தலையில் கவித்துக்கொண்டு கழனிக்குச் சென்றார். காலினால் தடவிச் சென்று, மழையினால் ஒதுங்கியிருந்த நெல் முளைகளைக் கூடையில் வாரிக்கொண்டு விரைவில் மீண்டார். எதிர்பார்த்து வாயிலில் நின்ற மனைவியார் நெல்லை வாங்கிச் சேற்றினை அலம்பினார். அடுப்பில் மாட்ட விறகில்லையெனக் கணவனாருக்கு உரைத்தார். கூரை அலக்கு ஒன்றை அறுத்துக் கொடுத்தார் மாறனார். அடுப்புமூட்டி, நெல்லை வறுத்து அரிசியாக்கி, உலையிலிட்டு சோறு சமைத்தனர். "கறிக்கு என் செய்வது?" என்று கணவரை வணங்கி வினவினார். அவர் வீட்டுக் கொல்லையில் உள்ள புன்செய்ப் பயிர்களைப் பறித்து வந்து கொடுத்தார். இலைக் கறிகளை ஆய்ந்தெடுத்து அலம்பி, தூய பாத்திரங்களில் இட்டுப் பலவகைக் கறிகளாக ஆக்கினார். முன்போல் செல்வமிருந்தால் அறுசுவை உண்டி அமைக்கலாமே என்று தமது குறையை எண்ணி வருந்தி ஒருவாறு மனம் நிறைவுகொண்டு அம்மையார் கணவனாரிடம் கறியமுதானவற்றைக் காட்டினார். அவரும், துயில்பவர்போல் படுத்திருக்கும் அடியவர்பால் சென்று "அமுது செய்ய

எழுந்தருள்க" என்றனர். அவ்வளவில் அவர் வடிவம் சோதியாய் நின்றது. நாயனரும் மனைவியாரும் திகைத்தனர். இறைவன் உமாதேவியுடன் இடபாரூடராய் விண்ணிலே தோன்றினன். நாயனரை நோக்கி,

"அன்பனே ! அன்பர்பூசை அளித்தநீ
அணங்கி னேடும்
என்பெரு முலகமெய்தி யிருநிதிக்
கிழவன் தானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி
ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க"என்றே அருள்செய்தா
னெவர்க்கு மிக்கான்.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இளையான்குடி என்ற ஊர் எந்த நாட்டில் உள்ளது என்று குறிக்கவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு வடகிழக்கே இளையான்குடி என்ற ஊர் இருக்கிறது. அதில் ஒரு சிவாலயமும் இருக்கிறது. "முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்", "அமுதளித்த செய்" என்ற பெயர்களுடைய வயல் ஒன்று அவ்வூரில் உள்ளது. மாறனர் என்ற பெயரும் பாண்டிய மரபுக்குரியது. வைணவ ஆசாரியரான மாறனும் பாண்டிய நாட்டவரே. ஆதலின் பாண்டிய நாட்டிலுள்ள இளையான்குடியைச் சேர்ந்தவரே மாறநாயனர் என்று கொள்ளவேண்டும். திருநள்ளாற்றுக் கருகிலுள்ள இளையான்குடி என்றும் கூறுகின்றனர். சோழமண்டல சதகமும், தொண்டைமண்டல சதகமும் இச்சரிதப்பெருமை தந்தம்நாட்டிற் குரியதாகப் பேசுகின்றன.

இளையான்குடி மாறநாயனர் வரலாற்றில் பல உண்மைகளையும், நீதிகளையும் தெரிந்து கொள்ளலாம். வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான். உழவினல் வரும் செல்வத்தைக் கொண்டு அடியவர்களுக்கு உணவளித்தலே பெருங்கடன் எனக் கொண்டார் மாறனர். ஈட்டிய செல்வம் எல்லாம் குறைந்து வந்தபோதும் மனஞ்சுருங்காது அடியவர்க்கு அமுது படைக்கும் திருப்பணியைச் செய்துவந்தார். "இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார் கடனறி காட்சியவர்" என்ற திருக்குறள் வாக்கிற்கு இலக்காகி நின்றுர் நாயனர்.

வந்த அடியவர்களை எப்படி உபசரிக்க வேண்டும் என்பதை இவர் புராணத்தில் காண்கிறேம். எதிர்கொண்டு வணங்கி, இன்சொல் கூறி, அழைத்துச்சென்று, ஆசனத்தமர்த்தி, பாதங்களைக் கழுவி, அருச்சித்து அத்தொண்டர் இச்சைப்படி அமுது அளிக்க வேண்டும். இவையே அர்க்கியம், பாத்தியம், ஆசமனம், அருச்சனை என்ற வழிபாட்டின் அங்கங்கள்.

நாயனருடைய மனைவியார் "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்ற பழமொழி பொய்க்கும் வண்ணம் செய்தவர். செல்வம் சுருங்கியபோதும் உடனிருந்து உற்றுழி உதவியும் அமைச்சர்போல் நடந்துகொண்ட பெற்றியர். பகல் விதைத்த செந்நெல்லை வாரி வந்து அமுதாக்கலாம் என்ற யோசனையைக் கணவனுருக்குக் கூறியதும் அவ்வம்மையாரே. பெருமழையில் சென்று நெல் வாரி வந்த கணவனரிடமிருந்து கூடையை வாசலில் நின்று வாங்கியதும், நெல்லை அலம்பிய பின் விறகில்லையென்றும், அதன் பிறகு கறிக்கில்லையென்றும் கணவனர்க்கு வருத்தம் தராத வகையில் பேசியதும், சமைத்து முடிந்தபின் அவருக்கு அவைகளைக் காட்டியதும் தலைசிறந்த செயல்கள். பெண்மணிகளுக்கு எடுத்துக் காட்டாக நிற்பன.

மன்னியவே ளாண்டொன்மை யிளசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்துவைகி
யுன்னருநள் ளிருள்மழையி லுண்டி வேண்டி
யும்பர்பிரா னணையை வயலுழுது வித்துஞ்
செந்நெல்முளை யமுதுமனை யலக்கால் ஆக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே

—உமாபதி சிவாசாரியார், திருத்தொண்டர் புராணசாரம்.

[இளையான் குடிமாற நாயனர் திருநட்சத்திரம்—ஆவணி மகம்]

— கருவூர்த்தேவர் —

வரமார் கருவூர்த்தேவரெனு
மௌனசிவயோகியர் வேதச்
சிரமாரிசைப்பா பலமொழிந்து
சிவத்தானங்கள் பலவணங்கிக்
கரமார் நெல்லியெனச்
சித்திகாட்டிவதிய அவர்க்குமுத்திப்
பரமானந்தந் தருங்கருவூர்ப்
பசுபதீசப் பெருமானே

சைவ சமயநூல்கள் இருவகைப்படும். ஒன்று சாத்திர (அறிவு) நூல்கள்; மற்றொன்று தோத்திர (அன்பு) நூல்கள். சாத்திர நூல்கள் பதினான்கு. தோத்திர நூல்களைப் பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்திருக்கின்றனர். இவைகளில் ஏறக்குறைய 18,000 திருப்பாடல்கள் உள்ளன. ஒன்பதாம் திருமுறை ஒன்பது ஆசிரியர்களால் பாடப்பெற்றது; 29 பதிகங்களையுடையது; 365 பாடல்களைக் கொண்டவை; ஆனால் இப்போது கிடைத்துள்ளவை 301 திருப்பாடல்களே. இவைகளைத் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்று கூறுவர். இவைகளில் பெரும்பகுதியான 103 பாடல்களைப் பத்துத் திருப்பதிகங்களில் திருவிசைப்பா ஆக அருளியவர் கருவூர்த் தேவர் என்பவர். இவருடைய வரலாற்றைக் கருவூர்த் தலபுராணத்தில் 'கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கம்', கொங்கு மண்டல சதகம், திருவாவடுதுறைப் புராணம், நெல்லைத் தலபுராணம் முதலியவைகளில் காணலாம். இவருடைய திருவிசைப்பாவில் வரும் சில குறிப்புக்களை அகச் சான்றுகக் கொண்டும் ஒருவாறு உய்த்துணரலாம்.

கருவூர்த்தேவர், கருவூரில் அவதரித்தார் என்பது இவர் பெயரினின்றே அறியக் கிடக்கின்றது. ஆனால் இவர் இயற்பெயர் தெரியவில்லை. கருவூர்த் தலபுராணத்தில் இவருடைய வரலாறு பின்வருமாறு காணப்படுகிறது :—கருவூர்த்தேவர் கருவூரிலே மறையவர் குலத்தில் அவதரித்தார். வேதசிவாகமங்களை நன்கு கற்றுணர்ந்தார்; பல சமய உண்மைகளைச் செவ்விதின் ஆராய்ந்தறிந்து வைதிக சைவம் தழைத்தோங்கத் திருவிசைப்பாவைப் பாடியருளினர். இவர் பெருமையறியாத சில அந்தணர்கள் இவர் மதுவூன் அருந்தும் வாம மார்க்கத்தவர் என்று இகழ்ந்தார்கள். தம் திறமையை யவர்களுக்கு அறிவிக்க வேண்டி, அகாலத்தில் மழைபெய்யச் செய்தும், கோயில்கதவு தாள் திறக்கச் செய்தும், ஆறு பெருகச் செய்தும் பல அற்புதங்களைக் காட்டினர். காசி, காளத்தி, காஞ்சி, திருவண்ணாமலை, மதுரை, குருகூர், திருச்செந்தூர், கன்னியாகுமரி, சுசீந்திரம், திருநெல்வேலி, திருப்புடை மருதூர், திருக்குற்றாலம், தஞ்சை, திருவானைக்கா, திருவரங்கம் முதலிய பல சிவ வைணவத் தலங்களையும் சென்று வழிபட்டார். திருநெல்வேலிக்கு இவர் சென்றபோது இவர் பெருமையை யாவரும் அறியும் பொருட்டு இறைவன் காட்சி கொடுக்கத் தாமதித்ததாகவும், இவர் ஊரைப் பாழாக்கியதாகவும், பின்னர் ஊரார் வேண்டுகோளுக்கிணங்கி ஊரைச் செழிக்கச் செய்தார். தஞ்சைப் பெரியகோயிலில் இராஜராஜ சோழன் சிவலிங்கப் பிரதிட்டை செய்ய முயன்றபோது மருந்திளகிப் பந்தனமாகவில்லை. அரசன் கருவூர்த்தேவரிடம் குறையைத் தெரிவிக்க, இவர் தஞ்சை சென்று பெருமானை வழிபட்டுச் சிவலிங்கப்பிரதிட்டை செய்தார். அப்பந்தனம் பசும்பொன் உருக்கியமைத்ததுபோல் இருக்கக்கண்டு யாவரும் வியந்தனர். கருவூர்த்தேவரின் குலத்தினரான அந்தணர் சிலர் அரசனிடம் இவர் மதுவூனருந்தி வாமபூசை செய்கிறார் என்று கூறினர்கள். அரசன் அவ் விரவிலே சென்று பரிசோதனை செய்ய அவ்வாறில்லாமை கண்டு அவரை வணங்கிப் பிழை பொறுக்க வேண்டினன். தேவர், அரசனை அவ்வந்தணர்கள் வீடுகளைப் பரிசோதிக்கச் சொல்ல அங்கே மதுமாமிசம் நிறைந்திருக்கக் கண்டான்; அவர்களை நாடு கடந்துபோக ஆணையிட்டான். கருவூர்த்தேவருக்கு இடர்செய்ய எண்ணிய அவர்கள் ஆம்பிராவதி யாற்றங் கரையில் காத்திருந்தார்கள். அதையறிந்த தேவர் அவர்களிடம் அகப்படாமல் திருவானிலைக் கோயிலை அடைந்தார். பிராமணர்கள் பின் தொடர்ந்தார்கள். கருவூர்த்தேவர்,

பசுபதீச்சுரரைத் தழுவிக்கொள்ள இறைவன் தம்முள்ளே இரண்டறக் கலந்து கொண்டருளினுர்.

கருவூர்த்தேவர் பல அற்புதங்கள் நிகழ்த்தியதற்கு கருவூர்த் தலபுராணத்தைத் தவிர வேறு சான்றுகளில்லை. அவரியற்றிய திருவிசைப்பாவிலும் அகச் சான்றுகளில்லை. பதினெண் சித்தர்களில் கருவூரார் என்ற ஒரு சித்தர் காணப்படுகிருர். சித்தர்களே மந்திரம், வைத்தியம், காயசித்தி முதலிய செய்திருக்கின்றனர். கருவூர்ச் சித்தர் பாடல்களுக்கும், கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடல்களுக்கும் சொல், பொருள், நடை இவைகளின் முறையில் அதிக பேதம் காணப்படுகிறது. இவர்கள் இருவரும் காலத்தினுலும் வேறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். பெயர் ஒற்றுமைகொண்டு கருவூர்த் தலபுராண ஆசிரியர் இருவர் வரலாற்றுச் செய்திகளை ஒருவருடையதாக எழுதிவிட்டாரென்று கொள்ளவேண்டும்.

திருவிசைப்பாவிலுள்ள அகச் சான்று கொண்டு கருவூர்த்தேவர் வரலாற்றை ஒருவாறு அறியலாம். இவர் ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக் காப்பிலே 'கருவூரன்', 'கருவூரனேன்' என்று தம் பெயரைக் கூறியிருக்கிருர். அவர் மறையவர் குலத்தினர் என்பதை, 'ஆரணமொழிந்த பவளவாய் சுரந்த அமுதமூறிய தமிழ்மாலை', 'செழுமறை தெரியுந்திகழ் கருவூரனேன்' என்ற அவருடைய கூற்றுக்களால் தெரிகின்றது. "தீந்தமிழ்மாலை" என்று அவர் பல பாடல்களில் கூறுவதிலிருந்து இவருடைய தமிழ் இனிமையுடையது என்பதும் பெறப்படுகிறது. பிச்சையேற்று வாழ்ந்தார் என்பது 'அங்கையோடேந்தித் திரிகருவூரன்' என்ற குறிப்பால் அறியக் கிடக்கின்றது.

அவருடைய கோயில் கருவூர் திருவானிலைக் கோயில் தெற்குப் பிரகாரத்தில் இருக்கிறது. தஞ்சை இராஜராஜேசுவரம் பெரிய கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் அவடைய சந்நிதி யொன்றிருக்கின்றது. வியாழக் கிழமை தோறும் மக்கள் அங்கே பிரபலமாக வழிபாடாற்றுகின்றனர்.

அவர், கோயில் (சிதம்பரம்), திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராஜராஜேச்சரம், திருவிடைமருதூர் முதலிய பத்துத் தலங்களுக்கு 103 பாடல்கள் கொண்ட பத்துப் பதிகங்களை அருளியுள்ளார். தலபுராணத்தில் அவர் வழிபட்டதாகச் சொல்லப்படும் வேறு தலங்களைப்பற்றிய பாடல்கள் காணவில்லை. தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம் இவைகளை இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் கட்டிய பின்னரே கருவூர்த் தேவர் அப்பதிகளைப் பாடியிருத்தல் வேண்டும்.

கோயில்களில் பஞ்ச புராணம் பாடும்போது ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 301 பாடல்களுக்கு இரண்டு பாட்டல்களும், மற்ற திருமுறைகளிலுள்ள சுமார் 17000 பாடல்களுக்கு மூன்று பாடல்கள் மாத்திரமே பாடப் பெறுகிறபடியால் திருவிசைப்பாவின் பெருமை புலனுகின்றது. திருவிசைப்பா என்ருல் இறைவனுடைய திருப்புகழைச் சொல்லும் பாடல்கள். கருவூர்த்தேவரின் பாடல்கள் செம்பாகமான நடையில் ஆற்றெழுக்காகச் செல்கிறது; இனிய ஓசை பயப்பது; அரிய சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் மிளிர்கிறது. எடுத்துக் காட்டாக ஒரு பாடல் :—

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல கிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே.

அவருக்கு இறைவன் குருவாக வந்து அத்தமத்தக சையோக தீக்கை செய்து உபதேசித்தான் என்பது 'கைத்தல மடியேன் சென்னி மேல்வைத்த' என்னும் கூற்ருல் உணரவைக்கிருர்.

'ஆவண வீதிப்பூவணம்', 'இஞ்சிசூழ் தஞ்சை', 'தண்ணிலா விரிதரு வெண்ணிலா',

'உஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பர்' என்பவை களில் எதுகைத்தொடை அழகைக் காண லாம். மொழுப்பு, கசும்பும், சகடை, தெண்டு, துகுக்கும் முதலிய அருஞ்சொல் லாட்சிகளும் அவருடைய பாடல்களில் வரு கின்றன. மாறுபட்ட கருத்துக்களை சுவை பெற அமைக்கும் பான்மையை "போர்த்தம் பெருமை சிறுமை புக்கொடுங்கும்'', "சிறியேனுக் கினியது காட்டிப் பெரிதருள் புரிந்து'' என் னும் கூற்றுக்களால் அறியலாம்.

தூது, நெஞ்சொடு புலத்தல், தோழிக் குரைத்தல், தோழியோடிரங்கல், நற்றாயிரங் கல் முதலிய அகப்பொருள்துறைகள் செறிந்த பாடல்களை மிக அழகுபடப் பாடி யுள்ளார். "மங்கையோடிருந்தே யோகு செய்வானை'' என்று முரண் அணியில் சிவ பெருமான் அருட்டிறத்தினைக் கூறியிருப்பது நினைந்து இன்புறற்பாலது. சூரியன், சந்தி ரன், உயிர், ஐந்து பூதங்கள் ஆகிய எட்டும் தமது உருவாக அட்டமூர்த்தங் கொண்டு சிவபெருமான் திகழ்கிறார் என்பதை,

அம்பரா! அனலா! அனிலமே! புவிநீ!
அம்புவே! இந்துவே! இரவி!
உம்பரா லொன்று மறிவொணு வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே!

என்று திருமுகத்தலைப் பாசுரத்தில் கூறு கிறார். முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னேபோல் போற்றி அவருடைய பாடல்களில் கையாண்டிருக்குமுறை பெரி தும் போற்றத்தக்கது. திருக்குறள், தேவா ரம், திருவாசகம் இவைகளிலுள்ள கருத்துக் களை ஆங்காங்கே காணலாம். தேவாரத்திற் குப் போலவே திருவிசைப்பாவுக்குப் பண் அமைதி வகுக்கப் பெற்றிருக்கிறது. அவரு டைய பத்துப் பதிகங்களிலே இரண்டு புற நீர்மைப் பண்ணிலும், ஒன்று காந்தாரப் பண்ணிலும், மற்ற ஏழும் பஞ்சமப்பண்ணில் லும் அமைந்திருக்கின்றன. "முந்து கருவூரர் பத்தினிரண்டு புறநீர்மை மொழிந்திடு காந் தாரமொன்று... மற்றெவையும் பஞ்சமமே'' என்ற பாடலால் இதை அறிகிறோம். திருவிசைப்பா ஓதும் பயனை, "வல்லோர் இருள் கிழித்தெழுந்த சிந்தைய''ராவர், "சில மாய்ப்பாடு மடியவரெல்லாம் சிவபதம் குறியி னின்றார்க'' ளாவர் என்று அவரே கூறியுள் ளார்.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலாம் உருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தவொண் சுடரே
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனும்ஆர் அமுதுங்
கனியுமாய் இனியையா யினையே

—கருவூர்த்தேவர், திருவிசைப்பா.

சென்னிமலை, ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி தேவஸ்தானம் :

ஸ்ரீ மலையாண்டவர் கோயிலின் திருப்பணி கல்நாட்டு விழா 20-11-59 காலை சென்னை அற நிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் கனம் திரு எம். பக்தவச்சலம், பி.ஏ., பி.எல்., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ்., அவர்களும் கலந்துகொண்டார்கள்.

திருப்போரூர் முருகன் செந்தமிழ்க் கழகம் :

இக்கழகத்தின் முதலாவது ஆண்டு விழா 15-11-59 ஞாயிறு மாலை திருப்போரூர் முருகன் ஆலயத்தில் சென்னை அறநிலையத்துணை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமத் சிவப்பிரகாச சுவாமிகள் வரவேற்புரை ஆற்றி னார்கள். திருவாளர்கள் ஜி. வடிவேலாயுதம், எம். ஏ., என். டி. கிருஷ்ணசாமி, பி. ஏ. பி. டி., புலவர் முருகேசன், எம். ஏ., எம். ஓ. எல்., ஜி. கலியாணம், எம். ஏ., முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தி னார்கள். தவத்திரு சிதம்பர-சிவராம சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். வித்வான் திரு அம்பை-சங்கரனார் நன்றி கூறினார்கள்.

வைஷ்ணவம்

பரிபாடலில் அவதார தத்துவம்

(பி. ஸ்ரீ)

பரிபாடலில் காணப்படும் சில அடிப்படை வைணவக் கொள்கைகளை முதற்பாட்டாகிய கடவுள் வாழ்த்துப் பாட்டில் கண்டோம். இனி நாம் பரிபாடலில் குறிக்கப் பெற்றுள்ள அவதாரக் கருத்துக்களை ஒருவாறு தெரிந்துகொள்ள முயல்வோம்.

இரட்டை அவதாரம்

முதல் பாட்டிலேயே பலராம அவதாரம் பிரஸ்தாபிக்கப்படுகிறது, பலராமனாகவும் தோன்றிய ஒப்பற்றவனே! என்று பொருள் படத் திருமாலை எடுத்த எடுப்பிலேயே இந்த ஆசிரியர் (பேர் தெரியாதவர்) விளிப்பதைக் கேட்கிறோம். இப்படி விளித்து முன்னிலைப் படுத்திய பின்பே இவர் திருமாலின் திரு உருவச் சிறப்பைப் பேசத் தொடங்குகிறார். சங்க காலத்தில் கண்ணன் வழிபாடுபோல் பலராமன் வழிபாடும் பிரசித்தமாக இருந்தது.

எங்கும் நிறைந்தவனாய், எல்லாப் பொருள்களுமாய், சொல்லுக்கு அடங்காத புகழாளனாய் விளங்கும் இறைவன் அடியவர்கள் போற்றி உய்வதற்காக வசீகர வடிவத்தை மேற்கொள்கிறான். அதாவது, கருடக்கொடி முதலிய சின்னங்களுடன் பொன்னாடை அணிந்து ஒரு ராஜாதிராஜன்போல் தேவாதி தேவனும் காட்சி தருகிறான் என்று கூறுகிறார் இந்த ஆசிரியர். இப்படிக் கூறுகிறவர் பலராமன் முதலான அவதார வடிவங்களிலும் திருமால் தன்னை வசீகரமாக வெளியிட்டுக்கொண்டான் என்பதை உய்த்துணர வைக்கிறார் இந்த முதல் பாட்டிலே.

இரண்டாவது பாட்டிலும் பலராமனைக் குறித்த பிரஸ்தாபம் வருகிறது. இந்தப் பாட்டை இயற்றியவர் கீரந்தையார் என்ற புலவர். இவர் பலராமனுக்குப் பின் இளையவனாகத் திருமால் பிறந்தான் என்கிறார். கண்ணனே திருமாலின் அதிமுக்கிய அவதாரம் என்பது குறிப்பு. 'மாயோன்' என்ற திருமாலின் பெயர் கண்ணனுக்குத்தானே சிறப்பாக உரியது.

திருமாலின் நாலுவகை நிலைகளைப் புராணம் பிரஸ்தாபிக்கிறது. வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற நான்கு உருவங்களையும் திருமாலின் வியூக நிலை என்று கூறுகிறார்கள். இந்த நிலைகளில் வாசுதேவன் கண்ணன்தான். சங்கர்ஷணன் பலராமன்தான். கண்ணனைச் 'செங்கண் காரி' என்று குறிப்பிட்டு, வாசுதேவ நிலையை உணர்த்துகிறது மூன்றாம் பரிபாடல். இதனைப் பாடியவர் கடுவன் இளவெயினனார். இப்புலவர் இப்பாட்டில்,

கருங்கண் வெள்ளை

என்று பலராமனைக் குறிப்பிட்டு, சங்கர்ஷண நிலையை உணர்த்துகிறார்.

பிரத்யும்நன் இப்பாட்டில் 'பொன்கண் பச்சை' என்று கூறப்படுகிறான். அநிருத்தன் 'பைங்கண் மாஅல்' என்று குறிக்கப்படுகிறான். பிரத்யும்நனனைக் கண்ணனின் மகன் என்றும், அநிருத்தனைப் பேரன் என்றும் புராணம் குறிப்பிடுவதுண்டு.

'செங்கண் காரி' என்றால், சிவந்த கண்களையும் கரிய உடம்பையும் உடையவன் என்று பொருள். இப்படி இருப்பவன் கண்ணன். பலராமனோ கரிய கண்களையும் வெண்ணிற மேனியையும் உடையவன். எனவே இவனைக் 'கருங்கண் வெள்ளை' என்று சுட்டிக் காட்டுகிறார் புலவர். பிரத்யும்நன் உடம்பு பொன்னிற முடையதாம்; எனவே

பொன்கண் பச்சை என்கிறுர். பச்சை மேனி யுள்ள அநிருத்தனைப் 'பைங்கண் மாஅல்' என்கிறுர்,

இப்படித் திருமாலின் நால்வகை வியூக நிலைகளும் மூன்ரும் பரிபாடலில் குறிக்கப் பெறுவதால், சங்க காலத்திலேயே—நிச்சய மாக—அதன் இறுதிப் பகுதியில்—பாகவத சம்பிரதாய அடிப்படைத் தத்துவக் கொள் கைகளும் (வைணவ அடிப்படைத் தத்துவக் கொள்கைகள்)—உருவாகிவிட்டன என்பது உறுதி. இரட்டை அவதாரக் கொள்கை யுடன் வைஷ்ணவ தத்துவக் கருத்துக்கள் தொடர்ந்து வளர்ந்திருக்கின்றன எனலாம்.

திருமாலிருஞ் சோலையில் திருமாலையும் பல தேவனையும் இரட்டைத் தெய்வமாகச் சேர்த்து வணங்குகிறுர் பதினைந்தாம் பரிபாட லில் இளம்பெரு வழுதியார் என்ற புலவர். திருமாலிருஞ்சோலை முதலான திருப்பதிகள் மிகவும் பழமை வாய்ந்த விஷ்ணுஸ்தலங்க ளாகவும், வைஷ்ணவ சமயத்தின் வளர்ப்புப் பண்ணைகளாகவும் திகழ்ந்தன என்று ஊகிக்க லாம். வேதம் திருமாலையும் பலதேவனையும் குறிப்பிட்டுப் போற்றுவதாகவும் புகழ்வதாக வும் இளம்பெரு வழுதியார் குறிப்பிடுவதால், வைதிக சமயமாக—அதாவது, வேத வழக் குடன் முரண்படாத ஒரு பெருஞ்சமய மாகவே—நம் தமிழ்நாட்டில் வைஷ்ணவம் பண்டைப் பழங்காலத்திலேயே வழங்கி வந்த தென்று கருதுவது பொருந்துவதே.

அந்த நாளில் திருமாலிருஞ்சோலையில் பலராமன் வழிபாடும் பிரசித்தமாக இருந்தது என்றே கருதவேண்டும். அக்காலத்தில் அடியவர் வணக்கத்திற்கு அறிகுறியாக ஆதி சேஷனையும் திருமாலாகப் போற்றும் வழக் கம் இருந்தது என்பதற்கும், உரையாசிரியர் களால் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கும் பரிபாடற் பகுதிகளில் சான்று கிடைக்கிறது.

வராக வடிவம்—உட்பொருள்

இரண்டாவது பாட்டிலே, வராக வடிவம் பிரஸ்தாபிக்கப் படுவதையும் காண்கிறோம். காலப் பெருமையையும் கடந்தவன் திருமால் என்று சொல்லவந்த **கீரந்தையார்** என்ற புலவர் இப்போது நடைபெற்று வருகிற காலப்பகுதியை **வராக கற்பம்** என்ற புராணப் பெயரால் குறிப்பிடுகிறுர். இதற்கு ஏன் இந்தப் பெயர் வந்தது? எவ்வளவோ காலம் கழிந்தபின் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்த நிலத்தைத் திருமால் வராக உருக்கொண்டு பெயர்த்தெடுத்து வெளியே கொண்டு வந்த தால், இந்தக் காலப்பகுதிக்கு இப்பெயர் வந்தது என்கிறது புராணம். திருமாலின் எண்ணிறந்த அரும்பெருஞ் செயல்களால் உலக பரிணமம் நடைபெற்று வருகிறது என் பதைக் குறிப்பாக உணர்த்தும் இப்புலவர் பெருமான் அத்தகைய அரும்பெருஞ் செயல் களில் ஒன்ருக வராக அவதாரத்தைக் குறிப் பிடுகிறுர்.

இந்த அவதாரத்தில் கீரந்தையார் ஈடு படுவதையும் காண்கிறோம். எல்லாம் ஒரே நீர் மயமாகத் தோன்றிய காலத்தில் நிலமகள் அந்த வெள்ளத்திற்குள் மூழ்கிக் கிடந்ததாக வும், திருமால் பன்றியாகித் தானும் அந்த வெள்ளத்திற்குள் மூழ்கி நிலமகளை வெளிக் கொணர்ந்ததாகவும் கூறிப் பூமியின் தோற் றத்தை வருணிக்கிறது புராண பரிபாஷை. இந்தப் புராண ஓவியத்தை அகக் கண்முன் கண்டு அனுபவிக்கிறுர் கீரந்தையார்.

வெள்ளத்தில் திருமாலாகிய பன்றி மூழ்கியதும், தந்தமாகிய கோடு மிகுந்து எழுந்த அலைகளால் கழுவப்பட்டு மாசுநீங்கி வெண்மையாகப் புள்ளிகளோடும் திகழ்கின்ற தாம். அந்தக் கோட்டினுல் பேர்த்தெடுக்கப் பட்ட நிலம் அதிலுள்ள புள்ளிகளுக்கு நடுவே ஒரு புள்ளிபோலவே தோற்றம் அளிக் கிறதாம். இப்படி நிலமகள் திருமாலை அடைந்த பின், ஒரு புள்ளி அளவேனும் துன்பம் அடையவில்லை என்கிறுர் கீரந்தை யார். சிறிதும் துன்பம் அடையாதபடி நில மகளைத் தன் கோட்டினுல் பேர்த்தெடுத்த பெருமான் அங்கேயே வைத்து இவளைத் திருமணம் புரிந்துகொண்டான் என்கிறுர்.

இந்த அருஞ்செயலை—அரும்பெருந் திரு விளையாடலை—ஞானிகள் எண்ணி எண்ணிப் புகழ்ந்துரைப்பர் என்றும் இப்புலவர் கூறு கிறுர். ஞானிகளின் உரையால் இந்த அவ தார அருஞ்செயல் மேலும் சிறந்து தோன்று கிறதாம். வராக உருக்கொண்டு தன்னுடைய கரிய, வலிமை வாய்ந்த, கழுத்தினுல் நீருக்குள் மறைந்து கிடந்த பூவுலகத்தைச் சுமந்து வெளிக்கொணர்ந்து நிலைநாட்டி யிருக்கும்

பகவானுடைய அரும்பெருஞ் செயலைக் கடுவன் இளவெயினனாரும் நான்காம் பரிபாடலில் போற்றிப் புகழ்வதைக் காண்கிறோம்.

அன்பர்கள் மனங்கொண்ட வடிவு கொண்டு திருமால் தன்னை வழிபடும் அடியார்க்கு அடியானாக இருந்து அருள்புரிகின்றான் என்ற கொள்கையை இப்புலவர் வராக அவதார தத்துவமாகவும் காண்கிறார் என லாம்.

நரசிங்க வடிவம்—(உட்பொருள்)

தெய்வம் சாதாரண மக்களுக்கும் விக்கிரக உருவில் காணப்படுகிறது. இந்தத் தெய்வத்தை வேள்வித் தீயில் கண்டார்கள் அந்தணர்கள் என்கிறது இரண்டாம் பரிபாடல். இதே தெய்வம் யோகிகளால் உள்ளத்திலே காணப்படுகிறது என்பதும், ஞானிகளால் நோக்கும் இடம் எங்கும் காணப்படுகிறது என்பதும் குறிப்பு. இதே தெய்வத்தைத் துஷ்ட அசுரர்கள் தாங்கள் மூட்டிய பகைத் தீயிலேயே கண்டு அதிலே மாய்ந்தொழிந்தார்கள் என்ற கருத்தையும் பரிபாடலில் காண்கிறோம். அத்தகைய பகைவர்களில் நிகரற்றவன் இரணியன்.

அந்த இரணியனை அழிப்பதற்காக, தனக்கென்று ஓர் உருவும் ஒரு பெயரும் இல்லாத பெருமான் பயங்கர நரசிங்க வடிவம் கொண்டார். உலகியல் கடந்த பெருஞானிகளே இத்தகைய தத்துவத்தை உள்ளபடி அறிந்து பாடவல்லவர் என்று கருதும் கடுவன் இளவெயினனார் நான்காம் பரிபாடலில் இந்த அவதாரத்தைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறார். இரணியனைக் கொன்று மகனாகிய பிரகலாதனைக் காத்த இந்த அருட்செயலில், எத்தகைய பயங்கர நிகழ்ச்சிகளுக்கும் இயற்கைத் தோற்றங்களுக்கும் இடையிலும் இறைவன் திருவருள் காணப்படுவதாகும் என்ற குறிப்பைப் புலப்படுத்துகிறார்.

பிரகலாதன் திருமாலைப் புகழ்ந்தான். அது பொறுக்காமல் இரணியன் புகைந்த நெஞ்சுடன் மகன் என்றும் பாராது ஹிம்ஸை நெறியை மேற்கொண்டான் என்று தொடங்கி இப்புலவர் சொல்லும் கதை எவ்வளவு ரசமாக அமைந்துவிடுகிறது என்பதைச் சற்று நோக்கலாம். புகழ்ந்த நெஞ்சு குளிர்ந்தது, புகைந்த நெஞ்சிலோ பூசிய சந்தனம் உலர்ந்தது என்பதுதான் எவ்வளவு வசீகரமான தொடக்கம், பாருங்கள்!

பிரகலாதனைப் பிருங்கலாதன் என்கிறார் இப்புலவர். இந்தப் பையனைப் பல கட்டுகள்-மிகப் பலவாகிய கட்டுகள்-பொருந்தக் கட்டினானும் இரணியன். உடல் ஒடுங்கக் கட்டுவதுதானா நோக்கம்? உள்ளம் மிகவும் ஒடுங்குமாறு கட்டிப் போடுவதும் சிறைப்படுத்துவதும்தானே உலக சரித்திரம் காட்டும் கொடுங்கோலர்களின் நோக்கம்? இந்தப் பேருண்மையை நுட்பமாக உணர்த்துகிறார் கடுவன் இளவெயினனார்.

எவரையும் நடுங்கச் செய்யும் செயல்களைச் செய்தான் இரணியன். சிறுவனாகிய பிரகலாதனையும் அந்தப் பெருந்துன்பம் நடுங்கச் செய்துதான் இருக்கவேணும் என்கிறார் புலவர். 'நடுக்கத்து அலர்ந்த புகழோன்' என்கிறார் புலவர். உடல் நடுக்கத்திலும் உள்ளம் ஒடுங்கவில்லை எனவே புகழும் ஒடுங்கவில்லை, மலர்ந்து பரவியது என்கிறார்,

> அலர்ந்த புகழோன்,
> தாதை ஆகலின்,
> இகழ்வோன் இகழா
> நெஞ்சினன் ஆக

என்பது இப்புலவரின் அருமையான வாக்கு.

சக்கரவர்த்தியும் சர்வாதிகாரியுமாக இருந்த இரணியனது செயல் இகழத்தக்கதுதான். தந்தை ஆயினும் இகழ்தற்கு உரியவன்தான் இரணியன். இது பிரகலாதன் கருத்து என்றும் சொல்லலாம். எனினும், 'அவன் என் தந்தை; எனவே மகனாகப் பிறந்த நான் இகழாத மனமுடையவனாய் இருப்பேன்!' என்பது பிரகலாதன் நிலை.

பிரகலாதன் இகழவில்லைதான்; துன்பத்தைப் பொறுத்துக்கொண்டே இருந்தான். ஆனால் கடவுள் இகழ்ந்தாரும் இரணியனின் கொடுஞ்செயலை. தன்னிடம் நன்றாக நட்புக் கொண்டிருந்த பிரகலாதனுடைய நல்ல மனத்திலே பொருந்தியிருந்தான் திருமால். பிரகலாதனுடைய மனம் அஹிம்ஸை நெறியிலேதான் உறுதியாக நின்றது. ஆனால் இங்கே இருந்து பாய்ந்த தெய்வசக்தி இரணியனை இகழ்ந்து அழித்து உலகத்தை வாழ்வித்தது.

'நன்று நட்ட அவன் நன்மார்பு முயங்கி' என்று பிரகலாதன் உள்ளத்தில் திருமால் இருந்த இருப்பைக் குறிப்பிடுகிறார் புலவர்.

ஒன்று நட்ட
அவன்

என்று இரணியனைக் குறிப்பிடுகிறார். ஒரு வகையாக இரணியனும் நட்புக்கொண்டிருந் தான் என்கிறார். அன்பின் தலைகீழ் நிலைமை தானே பகைமை! அன்பில் ஈடுபடுவோருக் குள்ள ஒருமை உள்ளம் பகைமையில் ஈடு படுவோருக்கும் உள்ளதுதான். ஆனால் பிரக லாதன் நெஞ்சிலிருந்து பிரகலாதனைத் திருத் திப் பணிகொண்ட அன்புக்கடவுள் இரணி யன் நெஞ்சையோ பிளந்துதான் தன் கருணை யைப் புலப்படுத்திக்கொள்ள முடிந்ததாம். இதே கருத்தைப் பின்னாளில் நம்மாழ்வார் தமக்கே உரிய ஞானத் தெளிவுடன் சமய உலகின் ஒரு பேருண்மையாக வெளியிட் டிருக்கிறார்.

இரணியனது பெரிய மலைபோன்ற மார் பில் அந்தப் பகைவலி கெடும்படியாகப் பாய்ந் தான் திருமால் என்கிறார். அப்போது துன் பம்தரும் உற்பாதங்கள் ஏற்பட்டனவாம். இரணியன் வீட்டுத் தூணை அவனே பிளக்க, அங்கிருந்து அவனுடைய பகைமையும் கொடு மையுமே உருவாகி வெளிப்பட்டதுபோல் தோன்றியதாம் நரசிங்கம். தூண் பிளந்து அந்தப் பிளவுகள் விழுந்தன; அப்படியே இரணியனது துண்டிக்கப்பட்ட மாமிசப் பிளவுகளும் விழுந்தன!—என்ன பயங்கர மான வருணனை பாருங்கள்; அந்த விதமாக 'இரணியன் மார்பினைப் பிளந்த நகத்தை உடையவனே!' என்று அழைக்கிறார் நரசிங்க மூர்த்தியை இப்புலவர் பிரான்.

இறைவன் எங்கும் இருக்கிறான் என்ற உண்மைக்கு மட்டுமா அந்தத் தூண் சாட்சி சொல்லிற்று? அந்த இரணியன் வீட்டுத் தூண் இறைவனுடைய அருள் உலகப் பொருள் அனைத்திலும் நிறைந்திருக்கிறது என்பதற்கும் சாட்சி சொல்லிற்று என்பது குறிப்பு. ஆனால் ஒளிக்குமுன் இருள் மாய் வதுபோல் இரணியன் மாய்ந்தொழிந்தான். அவன் தீவினையே அவனைத் தீர்த்துவிட்டது. திருமாலின் திருவருள்—பிரகலாதனை வாழ் வித்த அதே திருவருள்-இரணியனுக்கு மறக் கருணை ஆயிற்று. நரசிங்க அவதாரத்தின் உட்பொருள் இப்போது ஒருவாறு தெளிவு படுகிறதல்லவா?

அவரவர் இயல்பை அறிந்து ஏற்றபடி அருள்புரிகின்றது தெய்வத் திருவருள். மற்றப்படி திருமால் தனக்கென்று பகையோ நட்போ இல்லாதவன் என்கிறார் கடுவன் இளவெயினனார். அன்பரது மனநிலைக்கு ஒத்த வடிவம்கொள்ளும் தெய்வம் ஹிம்ஸை நெறியில் நின்ற தீயோருக்கெல்லாம் எடுத்துக் காட்டாக உள்ள இரணியனது மனநிலைக்கு ஒத்த வடிவுகொண்டான், அந்த வடிவுதான் நரசிங்கம்! - இது இப்புலவர் பெருமானின் உய்த்துணரவைக்கும் பொருள்.

வாமன வடிவம் (உட்பொருள்)

வாமனவதாரத்தின் தத்துவத்தையும் பரிபாடலில் கண்டு கொள்ளலாம். அந்த அவதாரத்தில் குள்ளன் நெடுமாலாகி உலகங் களை யெல்லாம் அளந்தான் அல்லவா? அப் போது ஊன்றிய திருவடி கீழே உள்ள ஏழு உலகங்களையும் பொருந்தி நின்றதாம்.

கீழ்ஏழ் உலகமும்
உற்ற அடியினை!

[அடியினை-ஓர் அடியையும் உடையவனே!] என்பது மூன்றும் பரிபாடலில் கடுவன் இளவெயினனார் வாக்கு.

உலகம் அளந்த கதை இறைவன் எங்கு மாகி எல்லாமாகி இருப்பதையும், இறை யொளி நிறைந்த உலகத்தில் அசுர இருள் அழிந்தொழியும் என்பது விதியாக இருப் பதையும், நன்கு உணர்த்தும் அவதாரக்கதை யாகும். இறைவனுக்கு அசுரர்களும் பகை வர்கள் அல்லர். 'அவுணருக்கும் முதல்வன்நீ' என்று திருமாலை நோக்கிக் கூறுகிறார் இப் புலவர். 'அமரர்க்கு முதல்வன்நீ' என்று சொன்ன வாயால் அசுரர்களுக்கும் முதல்வனா கக் குறிப்பிடுகிறார் திருமால்.

அசுரர்களே முதலில் அறிவு மயங்கித் திருமாலோடு மாறுபட்டுப்பகைத்தார்களாம். வாமனன் பேர் உருக்கொண்டு நிலஉலகத்தை அளந்தபொழுது, அந்தத் தோற்றத்திற்கு அஞ்சி அசுரர்கள் தத்தம் இருப்பிடங்களை

1583325

விட்டு ஓடிக் கடலில் விழுந்து செத்துப் போனுர்கள் என்கிறது இந்த மூன்ரும் பரிபாடல். அப்படி இறந்தவர்கள் ஒழிய, மற்ற அசுரர்களுக்கும் திருமாலே முதல்வன் என்கிருர் புலவர்.

இந்த உண்மையை அறிந்துகொள்ளும் அடியவர்களாகிய ஞானிகளுக்கும் 'இவர் பகைவர்; இவர் நண்பர்' என்ற வித்தியாச புத்தி ஏற்படலாகாது என்கிருர்.

அதனுல் 'பகைவர்இவர்;
இவர்நட்டோர்' என்னும்
வகையும் உண்டோநின்
மரபு அறிவோர்க்கே?

என்பது இந்தப் புலவர் வாக்கு.

பரிபூர்ண அவதாரம்

பலராமனுக்கு இளையவனுகிய கண்ணன் முதியோர்க்கும் முதியவன் என்றும், திருமாலே பலராமனுக்குத் தம்பியாகத் தோன்றினுன் என்றும் கீரந்தையார் கூறுவதால், கண்ணனே அவதாரங்களில் பரிபூர்ண அவதாரமாகக் கருதத்தக்கவன் என்பது இப்புலவரின் தேர்ந்த கருத்து என்று சொல்ல வேண்டும்.

ஒருவனே ஒருவனுக்குத் தம்பியாகவும் மூத்தவனுகவும் இருக்கும் அவதார அதிசயத்தை இவர் சுட்டிக்காட்டும் அழகைத்தான் பாருங்கள் :

'நீயே வளையொடுபுரையும்
வாலியோற்கு அவன்
இளையன்' என்போர்க்கு
இளையை ஆதலும்,
புதைஇருள் உடுக்கைப்
பொலம் பனைக்கொடியோற்கு
முதியை என்போர்க்கு
முதுமை தோன்றலும்

[வளை - சங்கு, வளையொடு புரையும் - சங்கை ஒத்த. வாலியோற்கு - வெள்ளைநிறமுடைய பலராமனுக்கு. இளையை ஆதலும் - இளையவனுகவும். புதைஇருள் - நிறைந்த இருளை ஒத்த கருநிறம் பொருந்திய. உடுக்கை- ஆடை. பொலம்பனைக் கொடியோற்கு-அழகிய பனைக்கொடியை உடையவனுன பலராமனுக்கு, முதியை என்போர்க்கு - நீ முதியவன் என்பவர்களுக்கு. முதுமை தோன்றலும் - திருமாலின் முதுமைச் சிறப்பு தோன்றுவதும்.]

முதியோர்க்கெல்லாம் முதியவன் என்ற சிறப்பை திருமால் பலராமனுக்குத் தம்பியாக அவதரித்த கிருஷ்ணுவதாரத்திலே சிறப்பாகக் காணலாம் என்பது கீரந்தையார் கருத்து. இறைவனது முதுமைச் சிறப்பைப் போல் அவதாரச் சிறப்பும் ஆச்சரியமானது தான் என்கிருர்.

பழமைக்கும் பழமையான சிவபெருமான் புதுமைக்கும் புதுமையாக இருக்கிருன் என்று பொருள்பட மணிவாசகப் பெருமான் கூறுகிருர் அல்லவா. இக்கருத்தை வைணவ சமயம் தனக்கே உரிய அவதாரத் தத்துவத்தைக் கொண்டு, வற்புறுத்துகிறது என்பது கீரந்தையார் குறிப்பு. எல்லாமாகிய பொருள் ஒருத்தி வயிற்றில் பிறந்ததே புதுமைக்கும் புதுமைதான் என்று பிற்காலத்து பக்தமணி ஒருவர் கூறியுள்ளார்.

காலம் கடந்த கடவுள்—ஒரு காலத்தவன் ஒரு ஊரன் என்று குறிப்பிட்டுப் பேச முடியாத ஆண்டவன்—ஒரு காலத்தில் உலகத்தின் ஒரு சிறு பகுதியாகிய வடமதுரையில் தேவகியின் வயிற்றிலே பிறந்த அதிசயத்தை,

உற்ற புவனம்
அனைத்தும்உதிப் பித்(து)அதனுள்
சிற்றிடைத் தேவகியார்
சீரார் வயிற்றுதித்தான்

என்று மேலே சொன்ன பிற்காலத்து பக்தர் பாடியிருக்கிருர். இத்தகைய அவதார அதிசயத்தைத்தான் வேருெரு முறையில் சுட்டிக் காட்டுகிறது கீரந்தையார் வாக்கு. பின் பிறந்த காரணத்தை முன்னிட்டுத் திருமாலை இளையவன் என்று சொல்லலாம்; தனக்குரிய முதுமைச் சிறப்பால் கண்ணன் பலராமனுக்கும் மூத்தவன்தான், எல்லாருக்கும் மூத்தவன்தான் என்று பாடிப் பரவசமாகும் கவிஞர் வாக்கிலே, அவதார தத்துவம் நன்கு வெளியிடப் பெறுகின்றதல்லவா ?

கடவுள் நிலைகளில் பெருமையைக் காட்டிலும் எளிமைதான் அன்பர்களை வசீகரிக்

கிறது. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுள் எங்கும் நிறைந்திருப்பதே எளிமைக்கு அறிகுறிதான். கடவுளின் பெருமை நிலையைப் பரத்வம் என்றும், எளிமை நிலையை சௌலப்பியம் என்றும் வைஷ்ணவர்கள் கூறுவார்கள். சௌலப்பியநிலைக்கு, கடவுள் எங்கும் நிறைந்திருக்கும் அந்தர்யாமி நிலையைக் காட்டிலும் அவதார நிலையே சிறந்த சான்ருகும் என்பது வைஷ்ணவர்களின் கொள்கை.

இத்தகைய அவதார நிலை வைணவத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். அவதார நோக்கமே அன்புதான் கருணைதான். ஆனல் அவதார மூர்த்தியின் அன்பு முறையையும் எளிதில் கண்டுகொள்ள இயலாது. திருமாலின் அன்புநெறிக்கு உலகமெல்லாம் சான்று தந்தபோதிலும், அவதாரத்திலே சிறப்பாக திருமாலின் கருணை வெளிப்படுகிறது என்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்துகிருர் கடுவன் இளவெயி'னனுர்.

* * *

பிறவா யாக்கைப் பெரியோன் சிவபெருமான் என்ருல், பல்பிறப்பும் பிறந்த பெரியோன் திருமால் என்பது வைணவர் கொள்கை.

பிறவாப் பிறப்பிலை
பிறப்பித்தோர் இலையே

என்பது அவதாரம் பற்றிய வைஷ்ணவக் கொள்கையை ஒரு மகா வாக்கியம்போல வெளியிடும் கடுவன் இளவெயினனுர் வாக்கு.

செய்திகள்

பேட்டை வாய்த்தலை, ஸ்ரீமத்யார்ஜுனேசுவரசுவாமி கோயிலில் நடைபெற்ற கந்தர் சஷ்டி விழாவில் 4-11-59 மாலை திருவானைக்காவல் திரு. அர்த்தநாரி அடிகள் அவர்களால் "முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

காஞ்சி, ஞானப்பிரகாச தேசிகர் மடாலயத்தில் மெய்கண்ட தேவர் குருபூசைவிழா 1-11-59 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் தொடங்கியது. சென்னை அறநிலையத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமை தாங்கி விழாவினை நடத்திக்கொடுத்தார்கள். நகரப்பிரமுகர்களும், திரு. வி. எல்லப்ப முதலியார், திரு. ஏ. கே. தங்கவேலு முதலியார், நகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சோமசுந்தர முதலியார் ஆவணக்களரி அலுவலர் திரு. பெரியண்ணன், திரு. அண்ணங்கராச்சாரியார், கழகத் தலைவர் திரு. நெ. கா. நடேச முதலியார், மடாலய இடைக்கால அறங்காவலர் திரு. என். ஆர். சடகோப முதலியார், திரு. ஆடியபாத செட்டியார், காஞ்சி அறநிலையத்துறை உதவி ஆணையாளர் திரு. நாகராஜன் முதலியோர்கள் விழாவில் கலந்துகொண்டனர். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "சிவஞான போதம்" பற்றியும், திரு. சச்சிதானந்த-சிவகுமாரன் அவர்கள் "திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணம்" பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

ஐப்பசி மாதம் 13-ஆம் தேதி வெள்ளிக்கிழமை நரகசதுர்த்தி (தீபாவளி) அன்று விருதுநகர் ஸ்ரீசொக்கநாதசுவாமி கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

ஐப்பசி மாதம் 19-ஆம் தேதி வியாழன் அன்று விருதுநகர் ஸ்ரீசொக்கநாதசுவாமி கோயிலில் கந்தர் சஷ்டி உற்சவம் கட்டளைக்காரர்களால் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நவ திருப்பதி அநுபவம்

[திரு K. பட்சிராசன் B.A., B.L.,]

இறைவன் ஐந்து நிலைகளில் இருப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். அதாவது, பரமபதத்திலே இருக்கும் இருப்பு, பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பது, இராமகிருஷ்ணாதி அவதாரங்கள், எல்லா ஆத்மாக்கள் உள்ளும் மறைந்து நிற்கும்நிலை, அடியார் மனங்களில் தோன்றும் வடிவோடு அந்தந்த திவ்ய தேசங்களிலே "பின்னானார் வணங்கும் சோதி" யாக கோயில் கொண்டிருக்கும்நிலை என்பன. இவற்றை முறையே, பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்று கூறுவர் ஆன்றோர். இவற்றில் நாம் கிட்டி யநுபவிக்கும் நிலை அர்ச்சை தான். இந்த அர்ச்சாவதாரத் திருமேனியோடு எம்பெருமான் ஸேவை ஸாதிக்கும் திருப்பதிகளில் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பெற்ற திருப்பதிகள் நூற்றெட்டு. அவற்றுள் ஒன்பது திருப்பதிகளே நவதிருப்பதிகள் என்று விசேஷப் பெயர் பெறும்.

தமிழ் முனிவன் வதியும் பொதிய மலையில் பிறந்து நீரோடு தமிழ் பெருக்கும் பொருனையாற்றின் இருமருங்கிலும் அமைந்தன இவ்வொன்பது திருப்பதிகளும். இவ்வொன்பது திருப்பதிகளையும் மங்களாசாஸனம் செய்தவர் ப்ரபந்தஜன கூடஸ்தரான நம்மாழ்வார் தான். ஆழ்வார்களிலே நம்மாழ்வார்தான் ஞானசிகரம் என்று போற்றப்படுபவர். வேதங்களில் உட்பொதிந்த ஞானம் அரைகுறையாக வேதம் படிப்பவர் கையில் சிக்கி, தெளிவின்றிக் கலங்கி, இறுதியில் நம்மாழ்வார் என்ற ஞானமடுவில் தேங்கித் தெளிந்து தன்னுள் மறைந்துள்ள அபூர்வப் பொருளை யெல்லாம் காட்டிற்று என்று பொருள்பட வரும்

"மண்ணாடின ஸஹ்யஜலம் தோதவத்திச் சங்கணி துறையிலே துகில் வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்தத்தைக் காட்டுமா போலே அல்பச்ருதர் கலக்கின ச்ருதி நல் ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது"

[மண்ணாடின-கலங்கின, ஸஹ்யஜலம்-மலைத் தண்ணீர், சங்கணி துறை - திருச்சங்கணி துறை என்ற ஆழ்வார் திருநகரியிலுள்ள நீர்த்துறை, அந்தஸ்தத்தை - உள்ளிருப்பவற்றை, அல்பச்ருதர்-குறைந்த கேள்வி யறிவை உடையவர், ச்ருதி - மறை.]

என்ற ஆசார்ய ஹ்ருதய சூத்திரம் ஒவ்வொரு அறிஞரும் சிந்தித்து மகிழ்தற்குரியது. நம்மாழ்வார் குருகூரில் அவதரித்தவர். குருகூர் என்ற ஆழ்வார் திருநகரி பொருநை ஆற்றின் தென்கரையில் திருநெல்வேலியிலிருந்து திருச்சீரலைவாய் செல்லும் வழியின் நடுவில் அமைந்துள்ளது. மேலே கூறிய நவதிருப்பதிகளில் திருக்குருகூர் முக்கியமானது. மற்றவை, துலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) திருப்புளிங்குடி, திருப்பேரை, ஸ்ரீவைகுந்தம், வரகுண மங்கை (நத்தம்) திருக்குளந்தை (பெருங்குளம்) திருக்கோளூர் என்பன. இந்த ஒன்பது தலங்களும் நம்மாழ்வார் வாழ்வில் மிகவும் ஏற்றமுடையன என்பர் அறிஞர்.

உலகில் எம்பெருமான் ஒருவனே புருஷன். ஏனைய ஆன்மாக்கள் அனைத்தும் பெண்ணியல்புடையன என்பது சாஸ்திரங்கள் கண்ட உண்மை,

"ஸஏவ வாஸுதேவோ ஸௌ
ஸாக்ஷாத் புருஷ உச்யதே |
ஸ்த்ரீ ப்ராயம் இதரத்ஸர்வம்
ஜகத் ப்ரஹ்ம புரஸ்ஸரம் ||

எனவே ஆன்மாக்கள் ஸ்வதந்திர மற்றவை, இறைவனின் அதீனத்துக்கு உட்பட்டவை என்பது தானே போதரும். எப்பொழுது ஒரு உத்தம ஸ்திரீயின் பூரண நிலையை ஒரு ஆன்மா அடைகின்றதோ அப்பொழுது

தான் அது இறைவனையும், இறைவனுக்கும் தனக்கும் உள்ளதொடர்பையும் அறிந்து கொண்டதாகும். அவ்வறிவே ஆன்மா பெறவேண்டிய தலையாய பேறு. இப்பேறு, எப்போது ஒரு ஆன்மா இவ்வுலகில் மற்றப் பொருள்களின் மீதுள்ள அபிமானத்தைக் கட்டோடு விடுகின்றதோ அப்போது கிட்டும். இத்தகைய உத்தம நாயகியின் பாவத்தைப் பெற்றால்தான் ஒரு ஆன்மா இறைவனை உள்ளபடி அறிந்து அனுபவிக்க முடியும் என்பது நம்மாழ்வாரின் வாழ்க்கைச் சரிதத்தினின்று புலனாகும். அச்சரிதமும் அவரது பிரபந்தங்களினின்றே பெறக் கிடைக்கும். இவ் ஆழ்வாரின் ஞான வாழ்வில் இந்த ஒன்பது தலங்களும் எப்படி ஏற்றமுற்றன என்பது பின்னர் நன்கு விளக்கப் பெறும். எனினும் சுருங்கக் கூறின் இவ்வொன்பது தலங்களில் திருப்புளிங்குடி, வரகுணமங்கை, ஸ்ரீவைகுந்தம் இம்மூன்று தலங்களிலும் உள்ள மூர்த்திகள், ஞானபக்குவம் பெற்றுக் கொண்டிருந்த நம்மாழ்வாரைத் தாம் அனுபவிக்க விரைந்த இடங்கள் என்று ஆசார்ய ஹ்ருதயம் கூறும். எனவே மற்ற ஆறு தலங்களும் அவ்விதம் ஆழ்வார் நாயகிக்குரிய ஒவ்வொரு குணங்கள் பிரகாசித்த இடங்கள் என்பர். அவற்றையும் பின்னர் விளக்குவோம்.

முதல்மூன்று தலங்களையும் இறைவன் நாயகியைப்பெற விரும்பி விரையும் விரைவை விளக்கும் தலங்களாக ஆசார்ய ஹ்ருதயம் குறித்தது என்பதை மேலே கூறினோம்.

இப்படிக் கூறுவது புதிதாகத் தோன்றலாம். ஆனால் இவ்வுண்மை எளிதில் விளக்கக்கூடியது. இறைவன் தன் விளையாட்டாக உலகத்தையும் உயிர்களையும் தோற்றுவிக்கிறான். அவ்வுலகத்தோடு உயிர்களை இணைக்கும் மாயையும் உண்டாக்குகிறான். உயிர்கள் அம்மாயைக் கட்டை அறுத்துத் தன்னை மீண்டும் வந்தடைகின்றனவா என்று பார்க்கிறான். அவன் தானே இங்கு பலநிலைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் செய்கிறான். ஏதேனும் ஒரு ஆன்மா அவனை அடைய முற்படுமானால் அது அவனை அடையு முன்பு-அவன் அதை வாரியுண்கிறான். அத்தனை ஆத்திரம் அவனுக்கு. ஏனெனில் மாயையிலகப்பட்ட உயிர்கள் அதிலே மயங்கி அவனை மறக்கின்றன. அல்லது ஆன்மா ஞானம் பெற்று அந்த அனுபூதியிலேயே தன்னை இழந்து விடுகின்றன.

அன்றி அவன் அருளிய நூல்கள் அனைத்தும் ஓதி, கர்மங்கள் அனைத்தும் செய்து, அவற்றின் பலன்கள் பெற்று அந்த அகங்காரத்திலே தன்னையே இறைவனாக எண்ணி அழிகின்றன. இக்குழிகளையெல்லாம் தப்பி தன் உண்மை வடிவம் என்ன என்பதை ஒரு ஆன்மா உணர்ந்து, தான் என்றும் இறைவனின் அடிமை என்ற நிலையை இழவாது காப்பாற்றிக் கொள்வது மிக துர்லபமாகையாலே அப்படி ஒரு ஆன்மா பக்குவமானால் அதை இறைவன் மேல் விழுந்து பற்றுகிறான் என்பது நம்மாழ்வார் காட்டும் உண்மை.

“ வாரிக்கொண்டு உன்னை
விழுங்குவன் காணில் என்று
ஆர்வுற்ற என்னை ஒழிய
என்னில் முன்னம்
பாரித்துத் தான் என்னை
முற்றப் பருகினன்
காரொக்கும் காட்கரை
யப்பன் கடியனே ”

[பாரித்து-பரிவு கொண்டு.]

என்பது மாறன் மறை. பருகுகிறான் என்ற பதமே இவ்வான்மா இறைவனை அடையு நெறியில் எவ்வித நீர்ப்பண்டமாய்க் கரைந்து நிற்கின்றது என்பதைக் காட்டும். இப்படி இறைவன் ஆன்மாவைப் பற்ற விரையும் நிலையைத்தான் Thompson என்ற ஆங்கிலக்கவி எழுதிய The Hound of Heaven என்னும் கவிதை விளக்குகின்றது. இப்படி ஆழ்வாரைப் பற்ற இறைவன் இடங்களாக அம் மூன்று தலங்களும் குறிக்கப் பெறுகின்றன. ஆசார்ய ஹ்ருதய சூத்திரம் கூறுவதென்ன என்பதை இனி ஆராய்வோம் :

“போக்ய பாகத்வரை தெளிந்த
சந்தைக்கு முன்னில்
மூன்றிலும் ப்ரகடம் ”

ஆழ்வார்க்கு பரமபக்தியாகிற உணர்வு தலையெடுக்குமளவும் இறைவனுக்குண்டான

ஆத்திரம் "தெளிந்த வென் சிந்தை" என வரும் பாசுரவாக்குக்கு முந்திச் சொல்லப் பட்ட "புளிங்குடிக் கிடந்து, வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று" என்ற விடத்தே சொல்லப்பட்ட மூன்று திருப்பதிகளான திருப்புளிங்குடி, வரகுண மங்கை, ஸ்ரீவைகுந்தம் என்ற மூவிடங்களி லும் அவன் கிடந்திருந்து நின்ற மூன்று நிலைகளிலும் தெரியும் என்பது இதன் பொருள்.

பசியன் ஒருவன் சோறுசமையுமிடத் தைக் காண்கிறான். சற்றுப் பொறுத்தால் அதைத் துய்க்கலாம் என்று அங்கே சாய் கிறான். அவன் ஆத்திரம் பொறாமல் கிடையை விட்டு உட்காருகிறான் சற்று. பின் அதுவும் பொறாமல் ஆத்திரம் மேலிட்டு எழுந்து நிற்கிறான். இம் மூன்று நிலைகளை யுமே அம் மூன்று ஸ்தல மூர்த்திகளின் நிலை விளக்கும் என்பது விஷயம்,

இம் மூன்று இடங்களும் ஆழ்வாராகிய நாயகிக்கு பரம பக்தியாகிய உத்தம ஸ்த்ரீ பாவம் பக்குவம் பெற்ற இடங்கள் என்பதா யின் இந்த மூன்று பதிகள் போக, பாக்கி யுள்ள ஆறுதலங்களும் எதைக் குறிக்கும் என்ற வினா எழுமல்லவா? அந்த நாயகி தசைக்குரிய ஆறு முக்கிய குணங்களையும் வெளிப்படுத்திய இடங்களாகப் பெரியோர் பணிப்பர்.

அக்குணங்களாவன :— அனன்யசேஷ த்வம், அனன்யசரணத்வம், அனன்ய போக்யத்வம், ஸம்ச்லேஷத்தில் தரிப்பு, விச்லேஷத்தில் தரியாமை, ததைக நிர்வா ஹகத்வம் என்பன. அதாவது பிறவொரு வனுக்கு அடியளல்லாமை, பிறரைச் சரண மாகப் பற்றாமை, பிறன் அனுபவிக்கப் பெறாமை, அவனோடு கூடியிருக்கையில் வாழ்வு, அவன் பிரிவு பொறாமை, தன் செயல் யாவும் அவனிட்ட வழக்காகை. மேலே சொன்ன இந்த ஆறு தலங்களில் ஆறு குணங்களும் வெளியாகின்றன என் பது அறிஞர் கூற்று. முதன் மூன்று தலப் பெருமையையும், ஆறு குணங்கள் எப்படி எங்கு தோன்றுகின்றன என்ற விவரத்தை யும் அந்தந்த தலங்களின் தல வரலாற்று விசேஷங்களையும் இனித் தனித்தனியே அனுபவிப்போம். (தொடரும்.)

வித்துவான் ச. சேதுசுப்பிரமணியம்
சமயப் பிரசாரகர்

சிதம்பரம்
26—9—59

வாழ்த்துரை

முற்கால மன்னர்கள் கல்லால் கட்டியகோயிலைவிட எத்தனையோ மடங்கு பெருமை யுள்ளது சொல்லால் கட்டிய "திருக்கோயில்". என்றும் அழியாத—எவ்வளவோ உண்மை யான சொல்லால் எழுத்து வடிவில் அழகிய ஏடுகளில் கட்டப்பட்டு வருகிறது. இருக்கும் இடம் தேடி இன்ப ஒளிபெருக்கும் ஞான சூரியனாக எங்கும் சென்று எல்லா உள்ளங்களி லும் உலவுகிறது.

ஓராண்டல்ல; வாழ்க பல்லாண்டு. வளர்க இதன் அறிவுச் சுடர் என்று உலக முழு வதும் பொங்கித் ததும்பி ஓடிவரும் அறிவுக் களஞ்சியம் இத்திருக்கோயில். இருட்கேணியி லிருந்து ஈடேற்றும் இன்பவிளக்கு.

விளக்கு வெளிச்சத்தின் அடியில் இருட்டு இருக்கும். அவ்விதம் வானுற ஓங்கிய கோபுரம் நிறைந்த இடங்களில் காலச் சுழலில் தோன்றிய இருளை விலக்க அறிவுச் சோதி யாக மலர்கிறது. இத் **திருக்கோயில்** மலர்.

பழமைக்குப் பழமை, புதுமைக்குப் புதுமை ஆகி மாதந்தோறும் மலர்ந்து புதுமணம் வீசிப் பொங்கும் இன்ப அலையாக எழும்புகிறது. சிவனுக்குள் இருக்கும் செம்மை ஒளியாக மலர்கிறது. கலைச் சித்திரங்களுடன் வந்து கண்ணையும் கருத்தையும் மகிழ்விக்கும் தேனை ஊற்றுகிறது.

இவ்வித மலர்—ஓராண்டில் நிறைந்த அறிவு மணம் தரும் குழந்தை மலர். இரண்டா வது ஆண்டில் மன்னும் இமயமலைபோல் உயர்ந்து ஓங்குக; மலர் மணம் செய்வதுபோல் தேன் சுவைச் சொட்டச் சொட்ட நாடெங்கும் சென்று பரவுக. பல்லாண்டு வாழ்க திருக் கோயில் மலர். வளர்க சமயப் பொது நோக்கின் சிகரம்.

ச. சேதுசுப்பிரமணியம்.

தவமும் சுடுசினமும்

(பரசுராமவதாரம்)

[பி. ஸ்ரீ.]

முனிவருக்கு ஐந்து பிள்ளைகள். நல்ல பரம்பரை; உத்தம பத்தினி பிருகு முனிவரின் குல வழி என்றால் சொல்லவா வேண்டும்? ஜமதக்கினியும் ரேணுகாதேவியும், வளர்த்த பிள்ளைகள் என்றால், கல்வி கேள்விகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்ந்தார்கள் என்பதில் அந்தப் பிரதேசத்திலுள்ளவர்களுக்கு அதிசயம் சிறிதும் ஏற்படவில்லை. ஐந்தாவது பிள்ளை திருமாலின் அவதாரமாகப் பிறந்து இருக்கிறான் என்பதும், அவனால் பயங்கர மான செயல்கள் உலகநன்மையின் பொருட்டு நடைபெற வேண்டியிருக்கின்றன என்பதும், பலரும் அறியாத தேவ ரகசியம்!

இந்த ஐந்தாம் புதல்வன் கடும் தவம் புரிந்து தன் சக்தியைப் பெருக்கிக் கொள்ள விரும்பினான். இந்த நோக்கத்துடன் இமய மலைச்சாரல் அடைந்தான். உள்ளத்தை ஒரு மைப்படுத்தி மலைபோல் அசையாத ஆற்றல் உள்ளதாகச் செய்து கொண்டு மாதவம் புரிந்தவனுக்கு சிவபெருமான் கட்புலனாகி ஆசி கூறினார். ஆசியுடன் ஒரு கோடரியை யும் அபார சக்திக்கு உரியதோர் ஆயுதமாகக் கொடுத்தருளினார். தாம் கொடுத்த பரிசாகிய அந்த கோடரியை 'இதோ இந்தப் பரசு (கோடரி)' என்று சொல்லிக்கொடுத்தால், இந்த ஆயுதத்தைப் பெற்றுக்கொண்டவன் **பரசுராமன்** என்ற சிறப்புப் பெயருடன் விளங்கினான்.

நீறுபூத்த நெருப்பைப் போலவே இருந்தான் பரசுராமன். ஆனால் சாம்பலை ஊதி நெருப்பை ஜொலிக்கச்செய்யும் நிகழ்ச்சி ஒன்று விரைவில் நடைபெற்றது. பரசுராமன் வந்த காரியம் நிறைவேற வேண்டுமல்லவா? விதி ஒரு பேரரசனை ஒருநாள் ஜமதக்னி முனிவரின் ஆச்ரமத்திற்கு இழுத்து வந்தது.

இந்த விருந்தாளி அரசனாகவா தோன்றினான்—ஒரு மனிதனாகத்தான் தோன்றினானா? ஆயிரம் முரட்டுக் கைகளுடன் வந்து சேர்ந்தான். பிரதாப இலங்கேச்வரனை இராவணனையும் அலறச் செய்தவன் இவன். கார்த்தவீரியன் என்ற பெயரைக் கேட்டதுமே இராவணனும் பயப்படுவான்!

பரிவாரங்களுடன் வந்த கார்த்தவீரியனை வரவேற்று உபசரித்தார் ஜமதக்கினி முனிவர்! 'நான் காட்டிலே வேட்டையாடித் திரும்பி வந்துகொண்டிருக்கிறேன்; பசியோடு இருக்கிறேன். என்னுடன் வந்தவர்களும் பெரும் பசியோடு இருக்கிறார்கள்' என்றான் கார்த்தவீரியன். முனிவர் அறுசுவை உண்டி அளித்து அவர்கள் பசியைப் போக்கினார்.

அரசனுக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. நாட்டிலேயே அருமையாகப் பெருஞ் செல்வர்களுக்கும் அரசர்களுக்கும் கிடைக்கக் கூடிய சாப்பாடு காட்டுப்புறத்தில் வசிக்கும் முனிவரால் எப்படித் தயாரிக்கப்பட்டது. அரசன் அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தான். தெய்வப் பசுவாகிய காமதேனுவின் உதவியால்தான் இத்தகைய விருந்தை ஜமதக்கினி தங்களுக்கு அளித்தார் என்பதை விரைவில் ஊகித்து அறிந்து கொண்டான்.

'முனிவர் பெருமானே, நமக்கு அந்தப் பசு தேவை' என்றான். முனிவருக்கோ உள்ளம் வேதனையடைந்தது. 'என்ன பேராசை இந்தப் பேரரசனுக்கு!' என்று தமக்குள் தாமே ஜமதக்னி எண்ணமிட்டார். 'என்ன பதில் சொல்வது இந்த முரடனுக்கு' என்று முடிவு செய்வதற்குள், கார்த்தவீரியன் தன் படைவீரர்களின் உதவியால் தெய்வப் பசுவைக் கவர்ந்து சென்றான்.

பரசுராமன் அதை அறிந்ததும் சினம் கொண்டான். 'துஷ்ட அரசனுக்குப் புத்தி கற்பிப்பேன்! நம் தந்தையாருக்கு உதவியாக இருந்து பணியாற்றும் பசுவை "வலிமையே உரிமை" என்று கருதிக் கவர்ந்து கொண்டு போகிறானே! இவன் அரசனா, அசுரனா?' என்ற நினைவுகளுடன் பரசுராமன் தன் கோடரியைக்

கையில் எடுத்துக் கொண்டு வில் அம்பு முதலியவற்றையும் எடுத்துக்கொண்டு அரசனைத் தொடர்ந்தான்.

கார்த்தவீரியனா பயப்படுகிறவன்? தன் சேனைகளை அணிவகுத்துக்கொண்டு பரசுராமனுடன் போராடி இவனைக் கைதியாக்கிக்கொண்டு போக விரும்பினான். ஆனால் பரசுராமன் கோடரியும் கையுமாக அந்த அணிவகுப்பைப் பிளந்து கொண்டு போய்க் கார்த்தவீரியனை வெட்டித்தள்ளி, காமதேனுவை மீட்டுக்கொண்டு தந்தையிடம் வந்து சேர்ந்தான். ஆனால் பரசுராமனின் இந்த வெற்றி ஜமதக்னிக்குக் கவலையைத் தான் விளைத்தது.

'மைந்தனே, நாம் ஆச்ரம வாசிகள். ஹிம்சை வழியில் செல்லக்கூடாதே? நீயோ கொலை செய்து விட்டாய். இந்தப் பாதகத்திற்குப் பரிகாரம் செய்துகொண்டுவா' என்று ஜமதக்கினி சொன்னார். பரசுராமன் உடனே தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டான். பல புனிதத் தலங்களையும் அடைந்து நன்னீராடி தந்தையின் விருப்பத்திற்கிணங்கப் பரிகாரம் செய்துகொண்டு திரும்புவதே நலம் என்று துணிந்தவனாய் வெகு தூரம் சென்று விட்டான்.

மைந்தன் தீர்த்த யாத்திரை செய்து திரும்பிய பின், தந்தையார் ஒரு வேள்வி செய்ய விரும்பினார். அதற்காகத் தூயநீர் கொண்டு வருமாறு தன் மனைவிக்குக் கட்டளையிட்டார். அவள் கங்கையாற்றுக்குச் சென்றாள். அங்கே இரு காதலரைப் பார்த்த வண்ணம் கால தாமதம் செய்து விட்டாள். ஜமதக்கினி முனிவருக்கு வேள்விக்குரிய நேரம் தவறிவிட்டது. பிறகு மனைவியைக் கண்டதும் கடுஞ்சினங் கொண்டார். கோப வெறியில் 'உங்கள் தாயைக் கொன்று விடுங்கள்' என்று கட்டளையிட்டார். அப்போது ஆச்ரமத்திலிருந்த புதல்வர்கள் நால்வரும் மறுத்துவிட்டார்கள். அவர்களைச் சபித்தார் முனிவர்.

பிறகு பரசுராமனை நோக்கி 'நீ என் கட்டளையை நிறைவேற்றுவாயா?' என்று கேட்டார். உடனே பரசுராமன் அப்படியே செய்துவிட்டுத் தந்தைமுன் வந்து நின்றான். 'இப்போது உனக்கு வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்' என்றார். பரசுராமனோ இரண்டு வரங்கள் கேட்டான். தாய் உடனே உயிர் பெற்று வரவேண்டும் என்பது முதல் வரம். இரண்டாவது வரம் சகோதரர்கள் சாபத்திலிருந்து விமோசனம் பெறவேண்டும் என்பது.

தந்தை அப்படியே வரம் கொடுத்ததும், அவருடைய தவவலிமையால் ரேணுகாதேவி புதிய உயிர் பெற்று எழுந்து வந்தார். பரசுராமன் சகோதரர்களும் சாபம் நீங்கி மகிழ்வெய்தினர். ஜமதக்கினியின் ஆச்ரமத்தில் வழக்கம்போல் காரியங்கள் நடைபெறலாயின. முனிவர் பெரும் பொழுதையும் தவப்பொழுதாகவே கழித்து வந்தார்.

திடீரென்று சிலர் ஆச்ரமத்திற்கு வந்து தியானத்தில் ஆழ்ந்திருந்த ஜமதக்கினி முனிவரைக் கொன்று விட்டார்கள். கார்த்தவீரியனது புதல்வர்கள் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று இப்படித் துணிந்து விட்டார்கள். அச்சமயம் பரசுராமன் வெளியே போயிருந்தான். திரும்பி வந்ததும் பரசுராமன் இறந்து கிடந்த தந்தையையும் அழுது புலம்பிக் கொண்டிருந்த தாயையும் கண்டான். மகனைக் கண்டதும் ரேணுகாதேவி வயிற்றிலடித்துக் கொண்டு அலறினாள். ஒரு தடவையல்ல, பல தடவை அப்படிச் செய்தாள்.

பரசுராமன் அவள் எத்தனை தடவை அப்படிச் செய்தாள் என்பதை எண்ணிக் கொண்டிருந்தான். இருபத்தொரு முறை தன் தாய் வயிற்றில் அடித்துப் புலம்பியதைக் கணக்கிட்ட பின், அடங்காச் சினத்துடன் பரசுராமன் ஒரு பயங்கரமான சபதத்தைச் செய்தான். 'கொடிய அரச குமாரர்கள் என் தந்தையைக் கொன்றார்கள். அவர்களை நான் என் பரசு என்ற கோடரியால் கொன்று தீர்ப்பேன். அவர்களை மட்டுமா? கொடிய அரசர்களையெல்லாம் கொன்றொழிப்பேன்' என்று சபதம் செய்தான். அந்தக் காலத்திலே அரசர்களில் பலரும் மக்களுக்குப் பல கொடுமைகளையும் செய்து வந்தார்கள். துஷ்ட அசுரர்களின் செயல்களைக் கூசாது செய்து லோக பயங்கரர்களாக இருந்தார்கள். திருமாலின் பரசுராமாவதாரம் கொடுமைக்கு எதிர்க் கொடுமைகள் செய்து அந்தத் துஷ்ட அரசர்களை வம்ச நாசம் செய்ய வேண்டிய காலம்

நெருங்கி விட்டதால் பரசுராமனுக்குக் கோப வெறி பொங்கிய வண்ணமாய் இருந்தது.

'என் தாய் 21 முறை வயிற்றில் அடித்துக்கொண்டதால், நான் இந்த துஷ்ட அரச குலத்தை 21 தலைமுறை நாசம் செய்து கொண்டிருப்பேன்!' என்று கூறித் தன் சபதத்தை உறுதிப் படுத்திக் கொண்டான். உடனே பரசும் கையுமாகக் கிளம்பி விட்டான். கொஞ்சமும் தயை இல்லாமல் துஷ்ட அரசர்களைத் தாக்கிக் கொன்றான். கோப வெறி மேலும் மேலும் பொங்கியது. அங்குமிங்கும் எங்கும் திரிந்து அரசர்களை வதைத்த வண்ணமாய் இருந்தான். பரசுராமன் பெயரைக் கேட்டதுமே க்ஷத்திரியர்களுக்கு ஒரே நடுக்கமாகிவிட்டது.

துஷ்ட நிக்கிரகம் செய்து முடிந்த பின்பும் இரத்தவெறி மேலும் பொங்கியது. தவம் செய்ய அமர்ந்தாலும் எந்த அரசனைக் கொன்றொழிக்கலாம்?' என்பதே சிந்தனை ஆகிவிட்டது. இராமனுக்குத் திருமணம் நடப்பதற்கு முன் ஜனக மகாராஜாவின் சபையிலே சிவதனுசு முறிந்த ஓசை பரசுராமனது தவச் சாலையிலும் கேட்டது. பரசுராமன் சீறி எழுந்தான்.

* * *

திருமண வைபவங்கள் இனிது நிறைவேறிய பின் விசுவாமித்திரன் ஆசி கூறித் தசரதனிடத்திலும் இராமனிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு தவம் புரிய வேண்டுமென்று இமயமலையை நோக்கிப் போய்விட்டான். இராமாவதாரத்திற்காகத் தான் செய்ய வேண்டிய பணிகள் முற்றுப் பெற்றுவிட்டன என்பதை அறிந்து கொண்டதும் அப்படியே வடக்கு நோக்கிப் போய் விட்டான்.

தசரதன் தன் நகரத்திற்குப் பயணமாகி விட்டான். சேனையுடனும் இராமலட்மணருடனும் மருமகளாகிய சீதையுடனும் புறப்பட்டான். வழியிலே கெட்ட நிமித்தங்களைக் கண்டான். நிமித்திகனை (சோதிடனை) அழைத்துக் கேட்டான். அவன்,

இன்றேவரும் இடையூ(று), அது
நன்றாய் விடும்

என்று பதில் சொன்னான்.

இப்படி நிமித்திகன் சொன்னதுதான் தாமதம், ஒரு பயங்கர உருவம் தங்களை நோக்கி வருவதைத் தயரதன் முதலானவர்கள் கண்டார்கள். வீசிய சடையும் ஜொலிக்கும் மழுவுமாய் ஒரு பொன்மலை நெருப்பைக் கக்கிக் கொண்டு வருவதுபோல் கண்களில் கனல் பிறக்க விழித்துக் கொண்டு வந்தது அந்த உருவம்.

தசரதனின் படைவீரர்கள் நடுங்கினார்கள். கடல் கொந்தளித்துக் கொதித்துக் கரை புரண்டு வருவதுபோல் வந்த பரசுராமன் ஒரு செங்கிரமான வில்லை வளைத்து, நாணேற்றித் தெறித்துக் கொண்டே வந்தான். அப்படி வரும் போதே கூர்மையான அம்புகளையும் தேர்ந்தெடுத்தான். இவ்வளவு கோபத்திற்குக் காரணம் என்னவோ என்று, பார்த்தவர்களெல்லாம் பயந்தே போனார்கள்.

பரசுராமனுடைய தோள்கள் பூரித்தன. ஊழிக் காலத்தின் இறுதியோ! என்றே நினைத்து விட்டான் தசரதன். கார்த்தவீரியனது ஆயிரம் தோள்களையும் வெட்டித் தள்ளிய தோள் வலிமை இப்போது யாரை இரையாக்கிக் கொள்ளுமோ? என்று எண்ணினான். இராவணனை வென்ற கார்த்தவீரியனைக் கொன்ற பரசுராமன் க்ஷத்திரிய குலத்திற்கே ஒரு பழியை உண்டாக்கி விட்டான் என்பதைச் தசரதன் நன்கு அறிந்திருந்தான்.

பரசுராமனிடம் தவத்திற்கு உரியபெரும் பொறுமையும் காணப்பட்டது; அதனுடன் முற்றும் முரண்பட்ட சுடுகனல் போன்ற கொடுஞ்சினமும் காணப்பட்டது. இது அரசர்களின் உள்ளங்களில் பெரும் பயத்தை விளைத்து, முடிவில் அவர்களையும் முடித்து விட்டது. பரசுராமன் சிவபெருமானிடம் பரசு என்ற தன் போர்க்கருவியைப் பெற்றுக் கொண்டதுடன் அப்பெருமானிடத்திலேயே போர்க்கருவிகளில் பெரும் பயிற்சியும் பெற்றிருந்தான் என்பது பிரசித்தமான செய்தி.

பரசுராமன் பூமியை மிதித்து நடந்து வந்த அந்த நடையே தசரதனது படை வீரர்களுக்குக் கலக்கம் விளைத்து விட்டதால், அவர்கள் செயலற்று நின்றார்கள். பரசுராமன் அலட்சியமாக ஊடுருவிச் சென்று தசரதன் முதலியவர்களுக்கு முன்னே வந்து நின்றான். 'இந்தக் கொடியவன் இந்தச் சமயம் பார்த்து வந்து விட்டானே' என்று தசரதன்

கொடிய மனவேதனையுடன் திகைத்துத் திடுக்கிட்டு நிற்க, இராமன் 'இவன் ஆரோ?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அதே சமயம் பரசுராமனும் இராமன் எதிரே வந்து சேர்ந்தான்:

சிங்கம்என உயர்தேர்வரு
குமரன்எதிர் சென்றான்.

அதுகண்ட தசரத சக்கரவர்த்திச் சற்றுக் கலக்கம் தெளிந்தவனாய் உள்ளத்தை ஒருவாறு தைரியப் படுத்திக்கொண்டு பரசுராமரிடம் வந்து அதிதி பூசை செய்யத் தொடங்கி அப்படியே அவன் அடிகளில் முடி பொருந்த விழுந்து வணங்கினான்.

தசரதன் அடிகளில் விழுந்து வழிபட்ட போதிலும், பரசுராமனுக்குக் கொஞ்சமும் சீற்றம் தணியவில்லை. அவன் சக்கரவர்த்தியை அலட்சியம்செய்து இராமனை நோக்கி, 'உன்தோள் வலிமையால் ஒடிந்து விழுந்ததன்மையை நான் அறிவேன்; இனி அந்த உன் தோள் வலிமையை நான் நேரில் கண்டு அறிந்து கொள்ள வந்திருக்கிறேன். என்னுடைய தோள்களில் கொஞ்சம் தினவும் ஏற்பட்டிருக்கிறது! நான் வந்த காரியத்தைத் தெரிந்து கொண்டாயல்லவா? என்று அதட்டும் குரலில் பேசினான்.

காலில் விழுந்து கிடந்த தசரதன் இப்போது எழுந்து நின்று 'நாங்கள் உனக்கு ஒரு பொருளோ? மன்னித்தருளவேணும்' என்று பிரார்த்தித்தான்.

'இவனும் எனது உயிரும் உனது
அபயம்இனி'

என்றான்.

இப்படிச் சொல்லிக் கொண்டே மறுபடியும் மனம் வெம்பிப் பரசுராமன் அடிகளில் விழுந்தான். பரசுராமனுக்கோ இப்போது கோபத்துடன் இகழ்ச்சி உணர்வும் ஏற்பட்டது. இராமன் முகத்திற்கு நேரே போய் நின்று கொண்டு, 'இராமா, சிவனார் வில்லின் கதையைச் சொல்லுகிறேன் சுருக்கமாக' என்றான். இந்தப் பீடிகையுடன், 'அந்த வில்லைச் சிவபெருமானுக்குக் கொடுத்த விசுவகர்மன் அது போன்ற வேறொரு வில்லை திருமாலுக்குக் கொடுத்தான். தேவர்கள் அந்த இரண்டு விற்களிலும் எது வலிமை வாய்ந்தது என்று பிரமனைக் கேட்டார்கள். உடனே பிரமன் தந்திரமாகத் திருமாலையும் சிவபெருமானையும் வலியப் போர் புரியும்படித் தூண்டிவிட்டான். அப்போது இருவரும் இரண்டு விற்களையும் நாணேற்றி இடைவிடாது போர் புரிந்தனர்' என்று அந்தப் பழைய கதையைச் சொன்னான்.

கடைசியாகத் தேவர்கள் சமாதானப் படுத்திவிட்டார்கள் என்றும், சிவன் தன் வில்லைத் தேவேந்திரனிடம் கொடுத்தான் என்றும், திருமால் தன் வில்லை ஒரு முனிவனிடம் கொடுத்தான் என்றும் செய்தி சொன்னான் பரசுராமன். அந்த முனிவன் தன் பாட்டன்தான் என்றும், ஆகவே அந்த வில் தனக்குக் கிடைத்தது என்றும் சொன்னான். சிவதனுசு மேலே சொன்ன போரிலே பழுதாகி விட்டதால், அதை முறித்ததில் இராமனுக்குப் பெருமை இல்லையென்றும் தெரிவித்தான்.

பிறகு தன் கையிலிருந்த வில்லைக்காட்டி, 'அரசே' இந்த வில்லை நீ வளைக்க முடியுமென்றால், நான் உன்னை உண்மையாகவே பெருமை வாய்ந்த மன்னனாக ஒப்புக்கொள்வேன். அப்படியானால் உன்னுடன் போர் புரியாமலே திரும்பி விடுவேன்' என்று சொன்னான். இராமன் பதில் சொல்வதற்கு முன்பே மறுபடியும் தொடர்ந்து பேசினான்.

'பழுதுபட்ட வில்லை முறித்துவிட்ட அந்த வலிமையை நினைத்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை, என்று பரசுராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இராமன் பரசுராமன் கையிலிருந்த அந்த வில்லை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தான். பரசுராமனோ,

ஊனவில் இறுத்த மொய்ம்பை
நோக்குவது ஊக்கம் அன்றால்;
மானவ! மற்றும் கேளாய்,
வழிப்பகை உடையன் நும்பால்

என்று சொல்லி மேலும் பேசிக் கொண்டே போனான்.

இராமனிடம் தனக்குப் பகைமை உணர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணமாக, தன் தந்தையை அசுரனை ஒத்த அரசன் கொன்றான் என்ற செய்தியையும் தெரிவித்தான்.

தான் இரண்டு தலைமுறை முடிதரித்த மன்னர்களை எல்லாம் களைந்து ஒழித்து வருவதாகிய அந்தப் பிரதாபத்தையும் சொன்னான். அரசர்களின் இரத்த வெள்ளத்திலே தான் தன் தந்தைக்கு நீர்க்கடன் முதலிய கடன்களைச் செய்து பின்பு கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டதாகவும் சொன்னான்.

கடைசியாகத் தவத்தில் அமர்ந்த வண்ணம் க்ஷத்திரியர்களை மறந்திருந்த போது இராமன் வில்லை முறித்த ஓசை காதில் படக் கோபமாய் இங்கு வந்ததாகக் கூறினான்.

சிலையைநீ இறுத்தஓசை
செவிஉறச் சீறிவந்தேன்

என்றான். 'நீ வில்லை வளைக்கும் ஆற்றல் பெற்றிருந்தால் இதை வளைத்துப்பார்' என்று கூறி முடித்தான்.

இராமன் புன்சிரிப்புக் கொண்டு அழகாய் ஒளிவிளங்கிய முகத்துடன், 'எங்கே பார்க்கலாம் அந்தத் திருமாலின் வில்லை?' என்று கேட்டுக்கொண்டே வில்லை வாங்கிக் கொண்டான். வாங்கிய வில்லை தன் தோள் வரை இழுத்து வளைத்ததும் பரசுராமனுக்கு அச்சம் பிறந்துவிட்டது உள்ளத்திலே. உடனே இராமன் 'என் அம்புக்கு இலக்கு எது?' என்று கேட்டான்.

'கொடிய அரசர்களைத் தண்டிக்கக் கிளம்பிய நீ வெறிகொண்டு அரசர்களையெல்லாம் கொன்றொழித்தாய்; அதற்காக நான் உன்னைக் கொன்று விடலாம். ஆனால் அந்த மரண தண்டனையை உனக்கு இப்போது விதிக்கவில்லை' என்று சொல்லிக்கொண்டே மேலும் தன் கருத்தைத் தெளிவு படுத்தினான் இராமன்:

பூதலத்து அரசை எல்லாம்
பொன்றுவித் தனையென்றாலும்,
வேதவித் தாய மேலோன்
மைந்தன்நீ விரதம் பூண்டாய்,
ஆதலில் கொல்லல் ஆகாது;
அம்புஇது பிழைப்பது அன்றால்,
யாதுஇதற்கு இலக்கம் ஆவது
இயம்புதி விரைவின் என்றான்.

பரசுராமனை இராமன் 'வேதவித்தாய மேலோன்' என்று ஒப்புக் கொள்ளவில்லை; வேதவித்தாய மேலோன் மைந்தன்' என்று தான் ஒப்புக்கொள்கிறான். 'உன் தந்தைக்காக உன்னை மன்னித்து விடுகிறேன்' என்றான். பரசுராமன் ஹிம்சை நெறியில் ஈடுபட்டிருந்ததால் இவனை வேத வித்தாய மேலோன் என்று இராமன் ஒப்புக்கொள்ளவில்லை.

பரசுராமன் கொடுத்த வில்லை வளைத்து நாணேற்றி அம்பையும் அதில் பொருத்தி விட்டான். 'இனி இந்த பாணத்திற்கு இலக்கு எது? இராமபாணம் குறி தவறுவதுண்டா? விரைவில் பதில் சொல்லு!' என்று இராமன் துரிதப்படுத்துகிறான் பரசுராமனை. உடனே பரசுராமன் இராமனைத் துதிக்கக் காண்கிறோம்.

நீதியாய் ! முனிந்திடேல்;
நீஇங்கு யாவர்க்கும்
ஆதி,யான் அறிந்தனென்,
அலங்கல் நேமியாய் !
வேதியா ! இறுவதே
அன்றி, வெண்மதிப்
பாதியான் பிடித்தவில்
பற்றப் போதுமோ?

இராமனைப் பரசுராமன் வேதியா! என்று அழைக்கக் காண்கிறோம். நீதியும் அருளும் உடைய இராமனே தன்னைக் காட்டிலும் 'வேதியா!' என்று அழைப்பதற்குத் தகுதி வாய்ந்தவன் என்பது குறிப்பு. பரசுராமனுடைய தவம் இராமன் அம்புக்கு இலக்காகிறது. அந்தத் தவ வலிமைதானே பரசுராம கர்வத்திற்குக் காரணம்? இப்போது கர்வ பங்கம் (செருக்கு அழிவு) ஆகி விடுகிறது. பரசுராமன் விடைபெற்றுக் கொண்டு போய் விடுகிறான்.

துஷ்ட அசுரர்களை அடக்கி ஒடுக்குவதற்காக ஏற்பட்ட பரசுராம அவதாரம் அந்த வரம்பைக் கடந்து செல்லத் தொடங்கி விட்டது. அவதாரத்தின் நோக்கம் நிறைவேறிய பின்னும் ஹிம்சை வெறி பொங்கிய வண்ணமாய் இருந்தது. அந்த வெறியைப் போக்குவது இராமாவதாரத்தின் கடமைகளில் ஒன்றாகிவிட்டது.

பரசுராமாவதாரம் ஒரு அதிசயமான அவதாரம். அந்த அவதார நோக்கம் பூர்த்தியான பின்னும் பொங்கிக்கொண்டிருந்த

~ உத்தமர் கோயில் ~

பேரானைக் குறுங்குடியெம்
  பெருமானைத் திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூ
  ருத்தமனை முத்திலங்கு
காரார் திண்கடலேழு
  மலையேழிவ் வுலகேழுண்டும்
ஆராதென் றிருந்தானைக்
  கண்டது தென்னரங்கத்தே

—திருமங்கையாழ்வார்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 திவ்விய தேசங்களில் ஒன்று திருக்கரம்பனூர். இப்போது உத்தமர் கோயில் என்று வழங்குகிறது. 'கரம்பனூர் உத்தமனை' என்று திருமங்கையாழ்வார் அருளியிருப்பதாலும் இப்பெயர் பெற்ற தென்னலாம். இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே நாலு கல் தொலைவில் கொள்ளிட ஆற்றின் வடகரையில் நல்ல இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. உத்தமர்கோயில் என்ற இருப்புப்பாதை நிலையத்து அண்மையிலும் இருக்கிறது. இப்பதிக்கு, பிட்சாண்டார் கோயில், கதம்பவனம், திரிமூர்த்தி க்ஷேத்திரம், ஆதிமாபுரம் என்ற பெயர்களும் உண்டு. பிட்சாடன மூர்த்தி இங்கு கோயில் கொண்டிருப்பதால் பிட்சாண்டார் கோயில் என்றும், கதம்பமரங்கள் நிறைந்திருந்ததால் கதம்பவனம் என்றும், பிரமனும் இத்தலத்தின் தேவதையாக இருத்தலின் ஆதிமாபுரம் என்றும், அயன் அரி அரன் என்ற மூவரும் இங்கு எழுந்தருளியிருக்கின்றமையின் திரிமூர்த்தி க்ஷேத்திரம் என்ற பெயர்கள் வரலாயின. கல்வெட்டுக்களில் திருக்கரம்பந்துறை, குணசீலமங்கலம் என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

திருமால்

நான்கு புறமும் நல்ல மதில்களால் சூழப்பட்ட கோயில். கிழக்குவாயில் ஒன்றுதான். அதை ஒரு சிறு கோபுரம் அழகு செய்கிறது. கோயில் உள்ளே நுழைந்ததும் எதிரில் எம்பெருமான் சந்நிதி. பெருமாள் சயனத்திருக்கோலம்; கிழக்கே திருமுகமண்டலம். புருஷோத்தமன் என்பது திருநாமம். இந்த சந்நிதியை யொட்டித் தென்புறம் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. தெற்குப் பிரகாரத்தில் தாயார் சந்நிதி கிழக்கு முகமாக உள்ளது; பூர்ணவல்லி அல்லது பூர்வாதேவி என்பது நாச்சியாரின் திருப்பெயர். பள்ளிகொண்ட பெருமாளின் விமானம் உத்தியோக விமானம். இந்த கர்ப்பக்கிரகத்தை யொட்டியே சிவபெருமான் கர்ப்பக்கிரகம் அமைந்திருக்கிறது. ஆனால் மேற்கு பார்த்த சந்நிதி. இறைவனின் திருநாமம் பிட்சாடனமூர்த்தி. தேவியார் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது; திருப்பெயர் சௌந்தரபார்வதி. கோயிலின் தென்மேற்கு மூலையில் கலியாண மண்டபம் இருக்கிறது. அங்கே இலட்சுமி நாராயணர் சந்நிதியும், இராமர் சீதை இலக்குவர் அனுமன் இவர்களுடைய

பிட்சாண்டவர்

பிரமன்

ஆவேச வெறியையும் செருக்கையும் இராம பாணம் பலிகொண்டது. இப்படிப் பரசுராமாவதாரத்தின் தத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது கம்பனின் மேதை; பரசுராமனுடைய மகாபலத்தையும் ஒப்பற்ற கர்வத்தையும் அடக்கி ஒடுக்கிய இராமாவதாரம் இனிப் பெரிய காரியத்திற்கு (இராவண வதம் செய்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கு)ச் சித்தமாகிவிடும் என்ற குறிப்பைப் பரசுராமனின் வாக்கிலேயே காண்கிறோம்.

உத்தமர் கோயில் கோபுரமும் விமானமும்

சந்நிதியும் இருக்கின்றன. வடமேற்கு மூலையில் வேணுகோபாலன் சந்நிதி இருக்கிறது. வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கி பிரமன், சரசுவதி இவர்களின் சந்நிதிகள் அமைந்திருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் தசரதலிங்கம் எழுந்தருளியுள்ள தனிச் சந்நிதியிருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தமான கதம்பதீர்த்தம் கோயிலுக்குக் கிழக்கேயிருக்கின்றது. கதம்ப மரம் 'இப்பதிக்குரிய சிறப்புமரம். இங்கே பிரமன், மார்க்கண்டேயர், கதம்ப முனிவர், ஜனகர், கருடன், திக்குப்பாலகர்கள், தேவர்கள், சத்கீர்த்தி வர்த்தனன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றதாகச் சொல்லப்படுகின்றது. கோயிலுக்கு வந்து மணம் செய்து கொள்பவர்களுக்காக வடக்கு வீதியில் கலியாண விடுதியொன்று கட்டப்பெற்றிருக்கிறது. தண்ணீர்க்குழாய், மின்சாரம், சமயல் பாத்திரங்கள் முதலிய எல்லா வசதிகளும் இருக்கின்றன.

நாள்தோறும் நாலுகால பூசை நடைபெறுகின்றது. சித்ராபௌர்ணமியில் பெருமாளுக்கும், வைகாசி விசாகத்தில் பிட்சாடனருக்கும் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலில் சில கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை, ஆண்டாள் கோயிலையும் பெருமாள் கோயிலையும் ஒட்டிய சுவரிலும், பிட்சாடனர் கர்ப்பக்கிரகத்தின் நான்குபுறச் சுவர்களிலும் உள்ளன. இவ்வூர் இராஜராஜ வளநாட்டில் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. சோழமன்னன் இராஜாதிராஜ தேவன் காலத்தில் கோயிலுக்கு நிலதானம் செய்ததையும், பாண்டியன் குலசேகரதேவன் காலத்தில் சுந்தரபாண்டிய தேவனால் பல கோயில்களுக்கு பூசை முதலியவற்றிற்கு நிலம் வழங்கியதையும், உத்தமர் கோயில் பூசைக்காக ஒருவர் விற்குடியிலுள்ள பூமியைக் கொடுத்ததையும் இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. 'தானும் சிவனும் பிரமனுமாகிப் பணைத்ததனி முதலை' என்ற திருவாய்மொழிக்கிணங்க இத்தலத்தில் மும்மூர்த்திகளும் விளங்குவது தனிச் சிறப்புடையது. மூர்த்திபேதமின்றி வழிபட வேண்டுமென்ற உண்மையையும் நமக்கு அறிவிக்கின்றது.

சிலமா தவம் செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்து—முலகிற்
பரம்ப நூல் கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூர் உத்தமன்பேர் கல்

—பிள்ளைப் பெருமாளையங்கார்.

மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

(திருமூழிக்களம்—முன் தொடர்ச்சி)

நம்மாழ்வார் திருமூழிக்களத்தப்பன் பக்கலில் சில பறவைகளையும் முகில்களையும் தூது விடுகிறாரென்று முன்னம் தெரிவித்து இவற்றின் உள்ளுறை பொருள்களையும் அடைவே உணர்த்தி வருகின்றோம். நாரை கொக்கு குருகு விசேஷார்த்தங்களின் தொடர்ச்சியிது. ஆழ்வார் நாரையை விளிக்குமிடத்து "வாயுந் திரையுகளும் கானல்மட நாராய்!" என்று விளிக்கின்றார். உணவைத் திரட்டுவதிலுண்டான ஊக்கத்தினால், அலைகள் வந்து கிட்டி மேலே தாவிப் போகா நிற்கவும் கடற்கரையிலே அசையாம லிருக்கின்ற நாரையே! என விளித்தவாறு. எம்பெருமான் பக்கலிலே நெஞ்சை ஊன்ற வைத்து நிற்பவர்கள் ஸம்ஸாரக் கடலலைகளான ஸம்ஸாரதாபத்ரய வ்யஸனங்கள் மேன்மேலும் வந்து நெருக்கா நின்றாலும் அவற்றை லக்ஷியம் பண்ணாமே யிருந்து "கணைநாணிலோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே! ஓவாத வூணாக வுண்" என்று தங்களுக்கு உணவாகச் சொல்லப்படுகிற பகவத் குணங்களை யநுபவிப்பதிலேயே ஊன்றி யிருக்கும்படியைச் சொன்னவாறு.

திருமூழிக்களப்பதி விஷயமாக இப்போது நாம் எடுத்துக்கொண்ட * எங்கானலகங்கழிவாய் * என்கிற திருவாய் மொழிப் பதிகத்தின் பாசுரங்களினடைவே செல்லுவோம். (1) "செங்கால மடநாராய்!" என்று நாரையின் காலிற் செம்மை வருணிக்கப்படுவதனால் முந்துற முன்னம் ஆசாரியனுடைய திருவடித் தாமரைகளே நமக்குத் தஞ்சமென்பது காட்டப்படுகிறது. கால் என்பது வடமொழியில் சரணமெனப்படும். சரண



உத்தமர்கோயில் உள்தோற்றம்

மென்னுஞ் சொல் ஆசரணம் அதாவது அனுட்டான மென்கிற பொருளையும் தெரிவிக்கும். ஆசாரியனுக்கு வெறும்ஞானமிருந்தும் பயனில்லை. "ஞானமனுட்டானமிவை நன்ருகவே யுடையனனகுருவை" என்று மணவாளமாமுனிகள் பணித்தபடியே அனுட்டானமும் செம்மையாக இருக்கவேணு மென்பது காட்டப்படுகிறது. வழி நடந்து செல்வதற்குக் காலும் வேணும் கண்ணும் வேணும். காலில்லாத முடவனும் கண்ணில்லாத குருடனும் பிறருடைய உதவியின்றியே நடந்து செல்ல முடியாது. ஞானமில்லாத ஆசாரியன் குருடனது தானத்திலும், அனுட்டானம் [ஆசாரம்] இல்லாத ஆசாரியன் முடவனது தானத்திலும் கொள்ளப்படுவன். ஞானம் ஆசாரம் என்னுமிரண்டனுள் ஆசாரமே மிக முக்கியமாதலால் அஃது இங்கு முன்னங் கூறப்பட்டது.

2. அமர்காதல் குருகினங்காள்! இவ் விளியில் அமர்ந்த காதலுடைமை கூறப்படுகின்றது. ஆசாரியனுக்கு ஞானமும் அனுட்டானமும் குறையற்றிருந்தாலும் சீடர்கள் பக்கலில் அன்பு இல்லாதவளவில் பயனில்லை. 'சீடர்கள் பலகால் வருந்தி வேண்டினு லொழிய உபதேசம் செய்யக் கடவோமல்லோம்' என்று பல ஆசிரியர்களிருப்பதுண்டு. அன்னவர்களால் சீடர்கள் உய்வுபெற இயலாது. சீடர்கள் உய்வதைத் தம் பேருகக் கொண்டிருக்க வேண்டுமாசிரியர். அதற்குச் சீடர்கள் பக்கல் காதல் இன்றியமையாதது. காதல் அன்பு கருணை அருள் இவை பரியாயங்கள். வைணவ சம்பிரதாயத்தில் ஸ்ரீராமாநுஜர்க்கு முற்பட்ட ஆசிரியர்கட்கு இக்குறை அரிதாயிருந்த தென்றும், ஸ்ரீராமாநுஜர் பக்கலிலேயே இக்குணம் நிறைந்திருந்ததென்றும், அதனுலேயே அவர்க்கு ஆசார்ய பரம்பரையில் தலைமை ஏற்பட்டதென்றும் பிரசித்தமாகப் பேசி வருகிருர்கள். இவ்விடத்து "ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னேர், ஏரா ரெதிராசரின்னருளால்-பாருலகில், ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்" என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரம் கருதத்தக்கது.

3. தடம்புனல்வாய் இரை தேருங் கொக்கினங்காள்! 'தடம்புனல்' என்றதனுலே நீர் வெள்ளம் குறையற்றிருப்பது தெரிகின்றது, இத்தகைய இடத்தில் கொக்குகளின் இரைக்குப் பஞ்சமில்லாமையாலே 'இரையுண்ணும்' என்ன வேண்டியிருக்க 'இரை தேரும்' என்றது, "உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்கிறபடியே அற்பமான வுணவுகள் தென்பட்டால் அவற்றைப் பொருள்படுத்தாதேயிருந்து கனத்த வுணவுகளை எதிர்பார்த்திருக்குமென்பது தெரிவிக்கப்படுகின்றது. அதுபோல, அஸாரமும் அல்ப-ஸாரமுமான அர்த்தங்களைக் கொள்ளாதே யிருந்து ஸாரமும் ஸாரதரமும் ஸாரதமமுமான அர்த்த விசேஷங்களை ஊக்கத்தோடு நோக்கிக் கொண்டிருக்குமாசிரியர்களின்படி தெரிவிக்கப்பட்டதாகிறது.

4,5. இவ்விரண்டு பாசுரங்களில் மேக விடு தூது உள்ளது. மேகமாகக் கருதுவதும் ஆசிரியர்களையே யென்க. மேகத்திற்கும் ஆசிரியர்க்கும் பலபடிகளாலே ஒற்றுமையை விளக்குவோம்.

(i) மேகமானது கடல்நீரை முகந்து கொண்டு பெய்வதாக நூற் கொள்கை. ஆசிரியர்களுக்கு வடமொழி வேதக்கடலும் தென்மொழி வேதக் கடலுமாகிய இரு கடல்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றினின்று அர்த்த விசேஷங்களாகிற தீர்த்தங்களை முகந்துகொண்டு சீடர்களாகிற நன்னிலங்களிலேயே பெய்வர்கள் ஆசிரியர்கள்.

(ii) கடல் நீரானது உப்புத் தண்ணீராகையாலே அது ஒருவர்க்கும் வாய்க்கொள்ளலாம்படியிராது. அதை மேகமானது தான் பருகிச் சுவைமிக்கதாக்கிப் பெய்து எல்லாரும் உவந்து கொள்ளும்படி செய்கின்றது. அதுபோலவே வேதக் கடல்களிலுள்ள பொருள்களை நம்போல்வார் நேராக அநுபவிக்கப் புகுந்தால் கசக்குமென்று கருதிய ஆசிரியர்கள் தாம் அப்பொருள்களைப் பருகிச் சுவைப்படுத்தி ரஸகனமாக உபதேசிப்பர்கள். விரஸமாகக் காணும் நூற்பொருள்களையும் தங்கள் வாக்காலே ரஸப்படுத்தி வெளியிடுவர்களென்க.

(iii) நம்மாழ்வார் திருவிருத்தத்தில் "உயிரளிப்பான் மாகங்களெல்லாந் திரிந்து" என்றருளிச் செய்தபடியே மேகமானது உலகமெல்லாம் சென்று திரிந்து வேண்டின

விடத்தே பெய்யும். ஆசிரியர்களும் "எண்டிசையும் பேர்த்தகரநான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகர ராமின் திரிந்து" என்கிற பூதத்தாழ்வாருடைய நிய மனப்படியே சீடர்களுள்ள விடமெங்கும் ஸஞ்சரித்து நல்ல பொருள்களை உபதேசித்து உய்விப்பர்கள்.

(iv) மேகம் பெய்வதனுல் பள்ளமான விடங்களும் நிரம்பப்பெற்று சமநிலைக்கு வந்துவிடும். மேகமானது பள்ளமான விடங்களிற் பெய்து அவற்றைப் பூரிக்குமென்றபடி ஆசிரியர்களும் 'நீசனேன் நிறை யொன்று மிலேன்' என்றிருக்கும் பரமசாத்விகர்களிடத்தே (அதாவது, தம்மைக் குறைவாளர்களாகநினைத்திருக்கும் ஸச்சிஷ்யர்களிடத்தே) அர்த்தங்களைப் பெய்து அவர்களைத் தம்மோடொத்தவர்களாக்குவர்கள்.

(v) மேகமானது எப்போதும் பெய்யாது; சில கால விசேடங்களிலே பெய்யும். தாபம் மிகுந்தவாறே பெய்வதைக் காண நின்றேம். அதுபோல ஆசிரியர்களும் ஸம்ஸார தாபம் மிக்கவர்கள் வந்து வேண்டுங் காலங்களிலும், தாங்கள் தரிக்கைக்காக வாய்விட்டுப் பேசவேண்டிய காலங்களிலும் அர்த்தங்களைக் கொட்டுவர்கள்.

(vi) மேகம் பெய்யவேண்டிய காலங்களிலே பெய்யாவிடில் உலகில் பல தீங்குகள் மலியும். அதுபோல ஆசிரியர்கள் உபதேசிக்க வேண்டிய காலங்களில் உபதேசியா தொழியில், தேகமே ஆன்மாவென்று பிரமிப்பது, நமக்கு நாமே கடவோம் என்றிருப்பது, பகவான் தவிரப் பிறர்க்கு உரிமைப்படுவது, தம்மைக் காத்துக்கொள்வதில் தாமே முயல்வது, "கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டதல்லால் காதல்மற்றி யாதுமில்லை" என்னப் பட்ட ஆபாஸ பந்துக்களிடத்து ஆசாபாசம் கொண்டிருப்பது முதலான பல தீங்குகள் தம் போல்வாரிடத்து மலியும்.

(vii) ஆண்டாள் திருப்பாவையில் "திங்கள் மும்மாரி பெய்து" என்றருளிச் செய்தபடியே மேகமானது மாதம் மூன்று மழை பெய்து வாழ்விக்கும். ஆசாரியர்கள் உபதேசிக்கும் பொருள்களும் மூன்று மூன்றுயிருக்கும். திருமந்திரம், துயம், சரமச்லோகம் என மூன்று ரகஸ்யங்களை யுபதேசிப்பர்கள். சித்து அசித்து ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்களைப் பற்றிப் பேசுவர்கள்; தத்துவம் ஹிதம் புருஷார்த்தம் என்னும் மூன்றைப் பற்றிப் பேசுவர்கள். கீதையில் முதல்ஷட்கம், இரண்டாவது ஷட்கம், மூன்றுவது ஷட்கம் என்பவற்றைப்பற்றி யுரைப்பர்கள்; பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி என்பவற்றைப்பற்றி விவரணம் காட்டுவர்கள். இங்ஙனே மும்மாரி பெய்வர்களென்று காண்க.

(viii) மேகம் எவ்வளவு பெய்தாலும் பெய்தோமென்றிராமே மேன்மேலும் பெய்வதிலேயே ஊக்கங் கொண்டிருக்கும். அது போல ஆசிரியர்களும் உபதேசங்களையும் உபந்யாஸங்களையும் எவ்வளவு நிகழ்த்தினலும் த்ருப்தி பெருமே மேன்மேலும் உபதேசிக்கக் குதூகலங் கொண்டிருப்பர்கள். மேகமும் கைம்மாறு கருதாது, ஆசிரியர்களும் கைம்மாறு கருதாதே சீடர்கள் உய்வதையே தமக்குப் பேருகக்கொண்டு உபதேசிப்பர்கள்.

(ix) மேகம் சில சமயங்களிலே நாலு ஐந்து சிறுதுளிகளைப் பெய்துவிட்டுப் போய் விடும். மற்றுஞ் சில சமயங்களில் "கடல் வாய்ச் சென்று மேகங் கவிழ்ந்திறங்கிக் கதுவாய்பட நீர் முகந்தேறி எங்குங் குடவாய்பட நின்று மழை பொழியும்" என்று பெரியாழ்வாரும், "தாழாதே சார்ங்கமுதைத்த சரமழை போல்" என்று ஆண்டாளும் அருளிச் செய்தபடியே கனக்கப் பொழியும். ஆசாரியர்களின் படியும் இப்படியே. செவியிலே நாலு வார்த்தைகளை உபதேசித்துவிட்டு நிற்கிற காலமுமுண்டு; ஏற்ற கலங்களெதிர் பொங்கி மீதளிப்ப மாற்றுதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்போலே வாங்கக் குடம் நிறையப் பொழிவதுமுண்டு. போதும்போது மென்னும்படி பேசுவர்கள்.

(x) மேகம் சில விடங்களிலே சில காலங்களிலே பெய்கிற நீரானது முத்தாகி மேன்மை பெறும்; அவை உயர்ந்த பூஷணங்களாகி விளங்கும். அதுபோல ஆசிரியர்கள் சில சிறந்த சீடர்களிடத்தே உபதேசிக்கும் அர்த்த விசேஷங்கள் முத்துப் போலேயாகிப் பின்புள்ளார்க்கும் அணிகலமாயிருந்து விலையுயர்ந்து விளங்கும். சீர்வசனபூடணம், உபதேச ரத்தினமாலை, நவரத்தினமாலை என்னும் பெயர்களால் விளங்கும்.

(xi) மேகம் பெய்தநீர் ஆறுகள் குளங்கள் ஏரிகள் கிணறுகளாகிய இவற்றில் சேர்ந்தால் அனைவர்க்கும் உபயோகிக்கத் தக்கவையாகும்; மற்றையிடங்களில் தேங்கினால் வாய் வைக்க வொண்ணாததாய்ப் போம். ஆசிரியர்கள் பெய்தருளின பொருள்களும் நல்ல ஞானத் துறைகளிலே சேர்ந்தால், முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து பேசும் பரம்பரையிலே வந்து உபஜீவிக்கத் தக்கவையாகும். அவையே அதிகாரிகளல்லாதார் பக்கலிலே தேங்கினால் பயனற்றொழியும்.

(xii) "எத்தனையும் வான் வறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்று குலசேகராழ்வார் கூறியபடியே மேகம் பயிர்களால் எதிர்பார்க்கப்பட்டு அவற்றை வாழ்விக்கும். "நீர் காலத்து எருக்கிலம் பழவிலைபோல் வீழ்வேனை" என்று ஆண்டாளருளிச் செய்தபடியே எருக்கிலை போல்வனவற்றை மாளச் செய்யும். ஆசாரியர்களின்படியும் இப்படியே. "நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன, நாரணனைக் காட்டிய வேதங் களிப்புற்றது; தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது" என்ற இராமானுச நூற்றந்தாதிப் பாசுரத்தின்படியே பலர்க்கு நன்மையாகும்; சிலர்க்குத் தீமையுமாகும். ஆனாலும், உலகத்தை வாழ்விப்பதொன்றே மேகத்திற்கு நோக்கம்; ஆசிரியர்கட்கு மதுவேயாம்.

இங்ஙனே பலபடிகளால் மேகத்தோடு ஒற்றுமைபெற்ற ஆசிரியர்களே திருமொழிக்களப்பதியிலே நம்மாழ்வாரால் தூதுவிடப் படுகின்றார்களென்று கொள்க.

[தொடரும்]



ஒப்பிலியப்பன் கோயிலில் நம்மாழ்வார் பாசுர கல்வெட்டை அறநிலைய ஆணையர் திறந்து வைத்தல்.



கருவூர்ப்பசுபதீசுவரர் கோயில்.

✳ கருவூர் ஆனிலை ✳

விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூரு ளானிலை
அண்ண லாரடி யார்க்கு நல்லரே.

—திருஞானசம்பந்தர்

கரூர் என்று இப்போது வழங்கும் ஊர் கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற பதிகள் ஏழில் ஒன்று. இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு பகுதியின் தலைமையிடம். கரூர் என்னும் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் கோயில் இருக்கிறது. ஊருக்கு **கருவூர்** என்றும், கோயிலுக்கு **ஆனிலை** என்றும் பழைய தமிழ் நூல்களில் பெயர்கள் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்திலுள்ள பதினொரு பாசுரங்களிலும் 'கருவூருள் ஆனிலை' என்று கூறி யிருக்கிறார். பேரூர்ப் புராணத்தில்,

ஆனடுத்துயர் பூசனையாற்றி யகிலமும்
தானளித்தலினற் கருவூரெனத் தக்கது
வானடுத்தெழும் வஞ்சி பசுபதியாயினர்
பானநஞ்சினர் பாழியு மானிலை யாயிற்றே

என்று கூறப்பட்டிருக்கிறது. சேக்கிழார் எறிபத்த நாயனார் புராணத்தில் "தொண்டர் தம் சிந்தை நீங்கா அங்கிலை யரனார் வாழ்வது ஆனிலை என்னுங் கோயில்" என்று சொல்கிறார். இத்தலத்திற்கு வஞ்சி, ஆதிமாபுரம், ஆதிபுரி, வஞ்சுளாரணியம், வஞ்சிவனம், கற்பபுரி, கரபுரி, கோபிதாரவனம், பசுபதீச்சரம், பாற்கரபுரம், சண்மங்கலபுரம் என்ற பெயர்களும் உண்டு. ஆ (காமதேனு) வழிபட்டதால் **ஆனிலை** என்றும், கற்பம் தோறும் பிரமன் தவம் செய்து படைப்புத் தொழில் பெற்றபடியால் **கற்பபுரி** என்றும், அவன் கரு உற்பத்தி செய்த இடமாதலின் **கருவூர்** என்றும், திருமாலும் இங்கு பள்ளிகொண்

டிருப்பதால் **பாற்கரபுரம்** எனவும், வஞ்சி மரங்கள் நிறைந்துள்ளதால் **வஞ்சிவனம்** என்றும், மலை, காடு, ஆறு, தீர்த்தம், நகரம், கோயில் என்ற ஆறு மங்கலப் பொருள்கள் உள்ளமையால் **சண்மங்கலபுரம்** என்றும் பெயர்கள் அமைந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் **முடிவழங்கு சோழபுரம்** என்று இவ்வூருக்குப் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. சோழ மன்னர்களின் தலைநகராகவும், சோழர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து ஊர்களான காவிரிப்பூம் பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர் என்பவற்றுள் ஒன்ருகவும் விளங்கியது. சேரநாட்டின் தலைநகரான வஞ்சி என்பது இக்கருவூர்தான் என்பது ஒரு சில ஆராய்ச்சியாளரின் கருத்து. திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமானுக்கு தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்து கொடுத்தபோது தேவேந்திரன் கருவூரில் அரசாண்ட சோழ மன்னனை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு அழைப்பு விடுத்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

திருஆனிலைக்கோயில் ஊருக்கு மேற்கில் அமைந்திருக்கிறது. கோயில் வாயிலை பெரிய கோபுரம் அழகு செய்கிறது. இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியும், இரண்டு அம்மன் சந்நிதிகள் கிழக்கு, தெற்கு நோக்கியும் இருக்கின்றன. தெற்கு வெளிப்பிரகாரத்தில் கருவூர்த்தேவர் கோயில் இருக்கிறது. ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருவிசைப்பாவில் பத்துப் பதிகங்களை அருளியவர் இவரே. வடக்கு வெளிப் பிரகாரத்தில் அழகிய நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இத்தலத்துப் பெருமான் திருநாமம் **பசுபதீசுவரர், கலியாண பசுபதீசுவரர்** என்பன. கிழக்கு நோக்கியுள்ள அம்பிகையை **அலங்காரவல்லி** என்றும், தெற்கு நோக்கியுள்ள தேவியை **சௌந்தர நாயகி** என்றும் வழங்குகின்றனர். தலபுராணத்தில் **வடிவுடையம்மை** என்ற பெயர் சொல்லப்படுகிறது. இலிங்கமூர்த்தி சிறிது வடபுறம் சாய்ந்திருக்கிருர்; முடியில் பசுவின் கொம்புபட்ட வடு இருக்கிறது.

இத்தலத்தில் பஞ்சலிங்கங்கள் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. ஆதிநாயகராகிய **பசுபதிலிங்கம்**, அதன் கீழ்பால் உள்ள **கோடீச்சுரலிங்கம்**, அதற்கும் கீழ்பாலிருக்கும் **கயிலாய நாதலிங்கம்**, அதன் தெற்கே அமைந்திருக்கும் **கரியமாலீச லிங்கம்,** அதற்கும்



கருவூர்க்கோயில் நூற்றுக்கால்மண்டபம்.

அக்கினி திக்கில் ஆம்பிராவதி நதிக்கரையி லிருக்கும் வஞ்சுளேச்சுரலிங்கம் என ஐந்து மாம். இத்தலத்தின் விருட்சம் வஞ்சி (அசோகம்).

இப்பதியில் ஆறு தீர்த்தங்கள் உள் ளன. 1 **ஆம்பிராவதி ஆறு**. அம்பாநதி யென் றும், ஆம்பிரம் என்ற மாமரங்களின் நிழலில் ஓடி வருவதால் ஆம்பிராவதி என்றும் பெயர் பெற்றது. இப்போது அமராவதி என்று வழங்குகிறது. இந்த ஆறு ஆனை மலைத் தொடரிலுள்ள பன்றி மலையிலிருந்து உற்பத்தியாகி வந்து திருமுக்கூடல் என்னு மிடத்தில் காவிரியுடன் கலக்கிறது. இதை சூதநதி, பொருனை என்றும் கூறுவர். 2. வெண்ணெய் மலைக்குக் கிழக்கி லுள்ள **தேனுதீர்த்தம்**. 3. கருவூருக்குக் கிழக் கில் கோபிதாரவனத்திலிருக்கும் **முருகதீர்த்தம்** 4. **ஆம்பிராவதி** நதிக்கரையிலுள்ள **அரச தீர்த்தம்**. 5. ஆதிநாயகரின் ஆலயத்துக்குள் ளிருக்கும் **தாடகை தீர்த்தம்**. 6. வஞ்சுளேச் சுரர் கோயிலுக்குக் கிழக்கில் உள்ள **பிரம தீர்த்தம்**. இதைப்பற்றி,

சிவமார் வஞ்சி வனத்திடை திகழாம்
பிரமா நதியுடனே
தவமார் தேனு முருக வேள்
சதுமா முகத்தோன் தாடகையாம்
இவராற்கண்ட நால்தீர்த்த மிலகும்
அரச தீர்த்தமுடன்
பவநோய் தீர்க்கும் தீர்த்தமருள்
பசுபதீசப் பெருமானே

என்ற பாடல் அறிவிக்கின்றது.

இத்தலத்தில் சுக்கிரன், முசுகுந்தன், கோபிதாரன், விபண்டகன் இவர்கள் இறை வனை வழிபட்டுப் பேறு பெற்றனர். இன்னும் எறிபத்த நாயனர், புகழ்ச் சோழ நாயனர், சிவகாமியாண்டார், கருவூர்த்தேவர் முதலிய சிவனடியார்கள் பசுபதீச்சுரரை வழிபட்டு முத்தி யடைந்தனர்.

கருவூர் ஆனிலைக் கோயில் இலிங்க மூர்த்தியின்மேல் பங்குனி மாதம் 27, 28, 29-ஆம் நாட்களில் (சுமார் மார்ச்சு 15, 16, 17) சூரியனுடைய கதிர்கள் படுகின்றன. ஐப்பசி மாதத்திலும் அதே தேதிகளில் விழுகின்றன. ஆனல் மக்கள் பங்குனி மாதத்திலேதான் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

திருஞான சம்பந்தப் பெருமான் இத்தலத் தைப்பற்றி பதினெரு பாசுரங்களுடைய பதிகம் ஒன்று அருளியுள்ளார். இறைவன் பெயர் பசுபதி (உயிர்களுக்கெல்லாம் தலை வன்) என்பதற்கேற்ப, அவர் பாடல்களில் 'ஆனிலை யண்டனர் அருள்ஈயுமன்பரே,' 'ஆதியார் அடியார் தம் அன்பரே', 'அண்ண லார் அடியார்க்கு நல்லரே', 'அடிகள் யாவையு மாய ஈசரே' என்று கூறியுள்ளார். சம்பந்தர் இப்பதிக்கெழுந்தருளியதை "செல் வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் சென் றிறைஞ்சி நல்லிசை வண்டமிழ்ச் சொற் ருெடைபாடி" என்று சேக்கிழார் சொல்கிருர். அருணகிரிநாதர், கருவூர் என்ற பெயரமைத்து ஐந்து திருப்புகழ்ப் பாடல்களும், வஞ்சி என்ற பெயர்வரும் இரண்டு பாடல்களும், கர்ப்பபுரம் என்ற பெயரில் ஒரு பாடலும் ஆக எட்டுப் பாடல்களை அருளியுள்ளார். அவைகளில் ஒன்று :—

மதியால்வித் தகனகி மனதாலுத் தமனகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேயென் நினைவேநற்
பொருளாயோய்
கதியேசொற் பரவேளே கருவூரிற் பெருமாளே.

இன்னும் கருவூர்த்தேவர் பாடிய திரு விசைப்பா பாடல்களில் தம்மைக் கருவூரன் கருவூரனேன் என்று கூறிக் கொள்கிருர். மேலும் கருவூர்த்தல புராணம் என்ற நூலும் உண்டு. பாயிரம் முதல் கருவூர்த்தேவர் கதி பெறுச் சருக்கம் முடிய 21 சருக்கங்களும், 1129 பாட்டுக்களையும் கொண்டது. இதன் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. கோயம் புத்தூர் வித்துவான் கந்தசாமி முதலியார் வச னம் எழுதி ஒவ்வொரு சருக்கத்திற்கும் ஒவ் வொரு பாடல் பாடி யிருக்கின்ருர்.

கருவூர்க் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை வீரராஜேந்திர சோழன் மூன்ரும் குலோத்துங்கன், இராஜேந்திர சோழன், விக்கிரமசோழன், இராஜராஜ தேவன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், மீனுட்சி நாயக்கன் முதலிய மன்னர்களின் காலத்தவை. இவைகளில் பாக்கூர், கணபதி நல்லூர், வீரசோழநல்லூர், நெல்வேப்பள்ளி,

ஆதிச்சமங்கலம் முதலிய கிராமங்களைக் கோயிலுக்கு வழங்கியதைக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு கல்வெட்டில் கருவூர், வெங்கல நாட்டின் வீரசோழ மண்டலத்தின் ஒரு பகுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோயிலில் வேலை பார்ப்பவர்களுக்கும், சில வகுப்பினருக்கும் உரிமைகள் வழங்கப் பெற்றதும் இக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. கி. பி. 1066-ல் வீர ராஜேந்திரன் பாக்கூர் என்ற கிராமத்தைக் கோயிலுக்கு வழங்கியுள்ள செய்தியைக் கூறும் கல்வெட்டின் கடைசியில் "இத்தர்மம் நோக்குவான் பாதம் என்தலை மேலே" என்று மிகப் பணிவுடனும் பக்தியுடனும் குறித்திருப்பது நோக்கத்தக்கது.

இந்த கருவூர்தான் சேர மன்னரின் தலைநகரான வஞ்சியென்று ஆராய்ச்சிப் பேரறிஞரான திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள் தாம் எழுதிய வஞ்சி மாநகர், **சேரன்செங்குட்டுவன்** என்ற நூல்களில் பல ஆதாரங்களைக் காட்டிக் கூறியுள்ளார்கள். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் மேல் கடற்கரையிலுள்ள திருவஞ்சைக்களத்தினருகேதான் சேரர் தலைநகரான வஞ்சி இருந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். சங்க இலக்கியங்களிலிருந்து சில புலவர்கள் கருவூரைச் சார்ந்தவர்களென்று தெரிகிறது.

இத்தலத்தில் வளங்கியம்மன் கோயில், வஞ்சியம்மன் கோயில், திருமால் கோயில் இவைகள் இருக்கின்றன. ஆம்பிராவதி, மணிமுத்தாறு, காவிரி இவை மூன்றும் கூடுகின்ற திருமுக்கூடல் என்னுமிடத்தில் மணியீசர் என்ற இலிங்கமூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்.

அபயப்பிரதான ரங்கநாத சுவாமி கோயில்

கருவூர்ப் பசுபதீச்சரக் கோயிலுக்குச் சிறிது தென்கிழக்கில் முக்கால் கல் தொலைவில் இக்கோயில் இருக்கிறது. பக்கத்தில் ஆம்பிராவதி ஆறு ஓடுகிறது. கோயிலில் ஒரே பிரகாரம். அரங்கநாதர் கிழக்கே திருமுக மண்டலம்; சயனத் திருக்கோலம். நாச்சியார் திருநாமம் அரங்கநாயகித் தாயார். இத்தலத்தை ஆழ்வார் மங்களசாசனம் செய்த வித்துவக்கோடு என்றும் சிலர் சொல்கின்றனர். கோயிலினுள்ளே வடமேற்கில் அனுமன் சந்நிதி யிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் ஒரே கல்லினால் செய்யப்பெற்ற அரங்கநாதர் திருவுருவம் இருக்கிறது. பூமியைத் தோண்டும்போது கண்டெடுக்கப்பட்டதாம். அழகிய உருவம்; 10 அடி நீளம். ஆதிசேஷனின் படம் 4 அடி அகலம் 3 அடி உயரம் இருக்கிறது. இக்கோயிலிலுள்ள இலந்தை மரத்தில் எல்லாக் காலத்திலும் பலவகையான அளவுகளிலும், பலவித சுவைகளுடனும் பழங்கள் இருந்துகொண்டே வருகின்றன. சித்திரை மாதத்திலும், மார்கழியிலும் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

தான்தோன்றிமலை



தான்தோன்றிமலை கல்யாணவெங்கட்ரமணசுவாமி கோயில்

கருவூருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் இம்மலை இருக்கிறது. தாந்தோணி மலை என்று வழங்குகின்றனர். இது கருவூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே மூன்று கல் தூரத்தில் கரூர்-திண்டுக்கல் சாலையில் இருக்கிறது. இம்மலையிலுள்ள கோயிலில் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். மேற்கே திருமுக மண்டலம். மலையைக் குடைந்து அதிலேயே பெருமாளும் செதுக்கப்பட்டிருக்கிறார். சுமார் ஏழு அடி உயரமுள்ள அழகிய திருவுருவம். எம்பெருமானின் திருநாமம் **கலியாண வெங்கடரமண சுவாமி**. தாயார் சந்நிதி இல்லை. இக்கோயிலின் உற்சவமூர்த்தி கருவூர் அரங்கநாதர் கோயிலில் இருக்கிறார். புரட்டாசி

மாசி இம் மாதங்களில் தான்றோன்றி மலையில் நடக்கும் திருவிழாக்களுக்கு உற்சவமூர்த்தியைக் கருவூரிலிருந்து எழுந்தருளச் செய்கிறது வழக்கம். இத்தலத்தைத் தென்திருப்பதி என்றும் கூறுகின்றனர். வட திருப்பதிக்குச் செல்ல இயலாதவர்கள் இங்கே தங்களுடைய பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றார்கள்.

வெண்ணெய் மலை

இந்த மலை கருவூருக்கு வடகிழக்கே சுமார் இரண்டு கல் தொலைவில் இருக்கிறது. முருகப்பெருமானுக்குகந்த சிறந்த குன்றுதோருடல்களில் ஒன்று. கரூர்-சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் சிறிய குன்றின்மேல் குமரன் கோயில் கொண்டிருக்கிறார். பெரிய வெண்மையான பாறையின்மேல் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இப்பாறை நல்ல வெயிலிலும் குளிர்ச்சியாக இருக்கிறது. 32 படிகள் ஏறிச்சென்று குன்றக்கோயிலை அடையலாம். முதலில் முருகப்பெருமான் காட்சியளிக்கிறார். ஒரே பிரகாரம்தான். அதில் விசுவநாதர், விசாலாட்சி, கருவூர்த்தேவர் சந்நிதிகள் இருக்கின்றன. கருவூர்த்தேவர் சிலைக்குப் பக்கத்தில் வெள்ளைப்பாறை நீண்டு கொண்டிருக்கிறது. அதில் மந்திரச் சக்கரம் சிறு எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கின்றனர். பிரகாரச் சுவர்களில் வள்ளித் திருமண வரலாறு அழகிய ஓவியங்களாகத் தீட்டப் பெற்றிருக்கின்றது. நவராத்திரி விஜயதசமியின்போதும், ஆடிக் கிருத்திகை யன்றும் முருகப்பெருமான் கருவூருக்கு எழுந்தருளி உற்சவம் கொள்கிறார். மலைக்குக் கீழே சந்நிதிக் கெதிரில் ஒரு சிறு திருக்குளம் (பெரிய கிணறு) மிக ஆழமாக இருக்கிறது; படிக்கட்டுகள் உண்டு. இதையன்றிக் கோயிலுக்குச் சிறிது வடகிழக்கில் தேனு தீர்த்தம் உள்ளது. பிரமன் கர்வம் கொள்ள சிவபெருமான் காமதேனுவைக் கருவூரில் சென்று படைப்புத் தொழிலைச் செய்யச் சொன்னாராம். காமதேனுவும் அப்படியே செய்து உயிர்களுக்கு உணவாக மலைபோல் வெண்ணெயை உண்டாக்கியது. அதுவே வெண்ணிறமுள்ள குளிர்ச்சியுள்ள வெண்ணெய் மலை ஆயிற்று. இதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது:—



பாலசுப்பிரமணியசுவாமி கோயில்,
வெண்ணெய்மலை.

பூத்திட வுதித்த சராசர மனைத்தும்
　　பொசித்திட உள்ளிடைத் தெரிந்து
நீத்தவர் சடில நிருமல னுறையும்
　　நீள்திருக் கோயில் உத்திரத்தில்
மீத்திக ழமுதந் தானெனத் திரண்ட
　　வெண்ணெய்மால் வரையெனவிதித்துத்
தீர்த்த மொன்றதன் கீழ்பால் வகுத்தது
　　அத்தீர்த்தமும் தேனுமா தீர்த்தம்.

ஒப்பிலியப்பன் கோயில், ஸ்ரீ வெங்கடாசலபதி ஆலயத்தில் 7—11—59 அன்று மாலை 4 மணிக்கு ஸ்ரீ பூமிதேவிதாயார் ஸ்ரீ ஸ்ரீநிவாசர் கலியாணம் அறநிலையத்துறை ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. தஞ்சை அறநிலையத்துறை துணை ஆணையாளர் அவர்களும் உடனிருந்தார்கள். மாலை 7 மணிக்கு ஆலய அறங்காவலர் அவர்கள் வரவேற்க, ஆணையாளர் அவர்கள் ஆழ்வார்கள் பாசுரத்தின் மேன்மையை விளக்கி நம்மாழ்வார் பாசுரக் கல்வெட்டையும் ஸ்ரீ வெங்கடாசலபதி நூல் நிலையத்தையும் திறந்துவைத்தார்கள். மாலை 7 மணிக்கு இலங்கை திரு. பத்மநாப்பிள்ளை அவர்களின் நாதசுர இசை விழாவையும் ஆரம்பித்துவைத்தார்கள்.

✳ திருமுருகன்பூண்டி ✳

விட்டிசைப்பன கொக்கரைகோடு
கொட்டித் தத்தளகம்
கொட்டிப்பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ்முருகன்
பூண்டிமா நகர்வாய்
இட்டபிச்சைகொண் டுண்பதாகில்நீ
ரெத்துங்கிருந்தீரெம் பிரானிரே

—சுந்தரர்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அவிநாசியிலிருந்து திருப்பூர் செல்லும் நெடுஞ்சாலையில் மூன்ருவது கல்லில் திருமுருகன்பூண்டியென்ற பாடல்பெற்ற சிவத்தலம் இருக்கிறது. திருப்பூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஐந்து கல் வடக்கே சென்ருல் இப்பதியை அடையலாம். இது கொங்கேழ் தலங்களில் ஒன்று. ஏழு தலங்களையும் கீழ்க் காணும் பழைய வெண்பா அறிவிக்கின்றது:-

ஆதி கருவூர் அணிவெஞ்சைமாக் கறைசை
நாதரவி நாசி திருநணு—மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டி
நெஞ்சமே நித்தம் நினை. [தமை

[கறைசை-கொடுமுடி. திருநணு-பவானி. செங்குன்றூர்-திருச்செங்கோடு.]

திருமுருகன்பூண்டி சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுத் தொடர்புடையது. இங்கு ஒரு அற்புதத்தை நிகழ்த்தி இறைவன் அவரை ஆட்கொண்டார். இது முருகன் சிவபெருமானை வழிபட்ட தலங்களுள் ஒன்று. ஆதலின் முருகன்பூண்டி என்ற பெயர் பெற்றது. இதை,

செருமலைத் திருவேற் செங்கைத்
தேசிகன் வழிபா டாற்றும்
பெருமையிற் சிறந்த தாலப்
பெருந்தலம் பொருந்து தெய்வ
வரமலி வானோராதி மகிதலத்
தோர்க்கும் யார்க்கும்
அருமையான் முருகன் பூண்டி
யாயதே யதற்கு நாமம்

எனத் திருமுருகன்பூண்டிப்புராணம் கூறுகிறது. மாதவி (குருக்கத்தி) தலவிருட்சமானபடியால் மாதவிவனம் என்றும், 'முல்லைத்தாது மணங்கமழ் பூண்டி' என்று தேவாரத்தில் வருவதால் முல்லைவனம் என்றும் இத்தலத்திற்குப் பெயர்களும் உண்டு.

இத்தலத்து இறைவன் திருநாமம் முருகநாதர். முருகப்பெருமான் இலிங்கம் நிலைபெறுத்தி வழிபட்டமையால் இப்பெயர் ஏற்பட்டது. தேவியார் திருப்பெயர்கள் ஆவுடைநாயகி, முயங்குபூண்முலையம்மை என்பன. 'ஏந்துபூண் முலை மங்கை தன்னெடும்' என்று தேவாரத்தில் வருவதும் காண்க. சந்நிதி மேற்கு நோக்கி இருக்கிறது. கோயிலுக்கு முன் கோபுரமில்லை. உள்ளே போகப் போகப் பள்ளத்திலிறங்கிச் செல்லவேண்டும். இலிங்கமூர்த்தியின்மேல் உத்தராயணத்திலும் தட்சணுயனத்திலும் சூரியனின் கதிர்கள் படுகிறதாம். சந்நிதிக்கு வலதுபுறம் முருகன் சந்நிதி. அழகிய திருவுருவம். மிகவும் வரப்பிரசாதி. கோயிலுக்குள் ஒரே பிரகாரம்தான். இறைவன் சந்நிதிக்கு இடதுபுறம் அம்பாளின் தனிச் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. பிரகாரத்தில் பஞ்சலிங்கம், பைரவர், சண்டேசுரர், அறுபத்துமூவர் இவர்களுடைய சந்நிதிகளும் இருக்கின்றன. கோயிலின் குடைவறையில் இறைவன் வேடரூபத்தில் கம்பீரமான காட்சியளிக்கிருர். எதிரில் சுந்தரர் பொருள் பறிகொடுத்து

திருமுருகன்பூண்டி அம்மன் சந்நிதி

வாடிய முகத்துடன் நிற்பதும், பொருள் திரும்பப்பெற்ற பின் மகிழ்ச்சி கூடிய முகத்துடன் இருக்கும் காட்சி கண்கவர் வனப்புடையவை.

கோயிலுக்குள் **சண்முகதீர்த்தம்** இருக்கிறது. கோயிலுக்கு வெளியே வடமேற்றிசையில் **பிரமதீர்த்தம்**. இது ஆழமான கிணறு. படிக்கட்டுகள் இருக்கின்றன. பிரமகத்தி, பைத்தியம் பிடித்தோர் இந்த தண்ணீரில் மூழ்கி அவை நீங்கப் பெறுகின்றனர். இப்போதும் அவ்வித பிணியாளர் தங்கி இருந்து நீராடவேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நாள்தோறும் மக்கள் வந்து போய்க்கொண்டிருக்கின்றனர். கோயிலுக்கு வெளியே தென்புறம் **ஞானதீர்த்தம்** என்ற பெரிய கிணறு இருக்கிறது. இதுவும் அத்தன்மையதே. கோயிலுக்குப் பின்புறம் **அக்கினி ஆறு** ஓடுகிறது. **மாதவி** (குருக்கத்தி) இத்தல விருட்சம். அழகிய மணமுள்ள பூக்களுடன் இறைவன் சந்நிதிக்கு வலதுபுறம் இருக்கிறது. இத்தலத்தில் மாசி மகத்தில் சிறந்த உற்சவம் நடைபெறுகின்றது. நாள்தோறும் பூசைகள் குறைவற நடக்கின்றன.

சேரமான் பெருமாள் நாயனுர் கொடுத்த பெரும் பொருள்களை எடுப்பித்துக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் செல்ல இவ்வூர் வழியே வருகிறுர். எம்பிரான் பூதகணங்களை வேடர்களாக்கி அனுப்பி அப்பொருள்களைப் பறிக்கச் செய்கிறுர். சுந்தரர் திருக்கோயிலுக்கு வந்து "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினுர். இறைவன் மீட்டும் அப்பொருள்களை அளிக்கிறுர். "பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொன் கொடுப்பதலால் ஒருவர் கொடுப்பக்கொள்ள ஒண்ணுமைக் கது வாங்கிப் பெருகருளால் தாம் கொடுக்கப் பெறுவதற்கோ" என்று இதனைச் சேக்கிழார் நயம்பட உரைக்கிறுர். 'எல்லை காப்பதொன் றில்லையாகி ஆறலைத்து வடுகர் வாழும் இந்தக் கூறைகொள்ளுமிடத்து பூண்முலை மங்கையொடும் எத்துக்கிருந்தீர் எம்பிரானிரே' என்பன போன்ற கருத்துக்கள் நிறைந்த பத்துப் பாடல்களுள்ள சுந்தரர் பதிகம் சுவைத்தின்புறத்தக்கது.

இத்தலத்திற்கு ஓராட்டுக் குப்பை **செட்டிபாளையம்** மகாவித்துவான் **வாசுதேவ முதலியார்** புராணம் பாடியுள்ளார். அது பதினெரு சருக்கங்களையும், 618 திருவிருத்தங்களையும் கொண்டது. **அருணகிரிநாதர்** இப்பதியைப்பற்றி ஒரு திருப்புகழ்ப் பாடல் அருளியுள்ளார்.

முருகநாதர் கோயிலுக்குத் தெற்கே **மாதேசுவரர்** கோயில் என்ற தனிக் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. இறைவன் சுயம்பு மூர்த்தி. அம்பிகைக்குத் தனிச் சந்நிதியும் இருக்கிறது. **மங்களாம்பிகை** என்பது தேவியின் திருநாமம். கோயிலின் முன் வாயில் மண்டபத்தின் மேல் கோபுரத்திற்குப் பதிலாக பிரமாண்டமான சுதை வேலையால் செய்யப்பட்ட நந்தி இருக்கிறது. அது வெகு தொலைவுவரை தெரிகிறது. திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் சாலையில் அரை கல் தொலைவில் ஒரு பாறையின்மேல் விநாயகர் கோயில் இருக்கிறது. சுந்தரரிடம் வழி மறித்து நிதிபறித்த இறைவன் இருக்குமிடத்தைச் சுந்தரர்க்குக் காட்டிய கணபதி இங்கு எழுந்தருளியிருக்கிறுர். **கூப்பிடுபிள்ளையார்** என்ற பெயரால் மக்கள் இவரை அழைக்கின்றனர்.

திருமுருகன்பூண்டிக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. அவை, கோனேரின்மை கொண்டான், சுந்தர பாண்டியதேவன், கொங்குமன்னனை இராஜாதிராஜ உத்தமசோழன், வீரராஜேந்திரதேவன், குலோத்துங்க சோழதேவன், விக்கிரம சோழதேவன், வீரநஞ்சையராய உடையார் இவர்கள் காலத்தவை. கோயிலில் விளக்கெரிப்பதற்கும், கோயில் பூசைக்காக நெல்லும் நிலமும் முதலிய தானங்கள் வழங்கியதை இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. தவசியர்களுக்கு அமுதளிக்க நெல் வழங்கியதை ஒரு கல் வெட்டுக் குறிக்கிறது. இறைவன்பெயர் திருமுருகன் பூண்டி ஆண்டார், திருமுருகன் பூண்டி மகாதேவர் என்று இவைகளில் காணப்பெறுகின்றது. திருப்பள்ளியறை நாச்சியார் உருவம் ஒன்றை இக்கோயிலில் நிலை நிறுத்தி அதன் பூசனைக்கு வேண்டிய நிலதானம் வழங்கப்பட்டதை ஒரு கல் வெட்டால் அறிகிறேம். இந்த கோயில் இந்திய அரசாங்கத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரின் பாதுகாப்பில் இருக்கிறது. அழகிய உருவ வேலைகள் செய்யும் கற்சிற்பிகள் இந்த ஊரில் இருந்து வருகின்றனர்.

158335

"திருமண்டங்குடி ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோயிலில் பாலாலயம்"

'திருமண்டங்குடி'யிலுள்ள தொண்டரடிப் பொடியாழ்வார், அவருக்குக் காட்சி கொடுத்த ஸ்ரீரங்கநாதப்பெருமாள், ஸ்ரீரங்கநாச்சியார் கோயில் திருப்பணிக் கமிட்டியின ரால் திருப்பணி செய்யப்பெற்று வருவதை முன்னிட்டு 13-9-59 அன்று 'பாஞ்சராத்ர' முறைப்படி 'பாலாலயம்' சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொதுமக்களும், திருப் பணிக் கமிட்டியினரும் டிரஸ்டிகளும் கூடியிருந்தனர்.

"பன்னிரு ஆழ்வார்கள் அவதரித்த ஸ்தலங்களில் உடனடியாக அடியார்களது கவனம் திரும்பவேண்டிய நிலையிலுள்ளது இத்தலமே. எம்பெருமானின் வைஜயந்தி வனமாலையின் அவதாரமாகிய இவ்வாழ்வாரது பக்தி மணம் நாடெங்கும் கமழ்ந்து, அன்று அடியார்கள் இங்கே மண்டிப் படுகாடு கிடந்ததால் இத்தலம் திருமண்டங்குடி ஆயிற்று. இங்கு, ஆழ்வார் மூலவர், 'யோகநிலை'யில் ஒரு மூர்த்தியும், 'துளவக்கூடை'யுடன் ஒரு மூர்த்தியுமாக இருவர் உளர். யோகமூர்த்தியின் வலப்புறத்தில் திருமாலிருஞ் சோலைக் கள்ளழகரும், இடப்புறத்தில் திருவேங்கடமுடையானும் நின்ற திருக்கோலத்தில் எழுந் தருளி அனுக்ரகிக்கிறார்கள். திருவரங்கத்தரவணையானும் ஸ்ரீரங்கநாச்சியாரும் தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளனர்.

எனவே, அரங்கனுக்குப் 'பள்ளியெழுச்சி' பாடி, திருமாலை சூட்டித் 'திருமாலை' பாடிப் போந்த இத்தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருப்பணிக்கு உதவுவது, அரங்கன், கள்ளழகர், வேங்கடமுடையான் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் செய்த தொண்டின் பயனை அளிக்கவல்லது.

மேலும், இத்தலம், திருவரங்க நகரானின் திருவடித் தொடர்புபெற்ற புனித ஸ்தல மாகும். திருமாலை 19-ஆம் பாசுரத்தில் 'குணதிசை பாதம் நீட்டி' என்ற பாசுரப் பகுதிக்கு, தாம் அவதரித்த திருமண்டங்குடி அளவு திருவடியை நீட்டித் தம்மை அனுக்ரகித்ததாக, ஆழ்வாரின் திருவுள்ளமென்பது ப்ரபந்த ரசிகர்களது அனுபவம்.

ஆகவே, பக்தர்கள் ஒருமுறை நேரில் உடனே விஜயஞ்செய்து, இத்தலத்தைப் பார்வையிட்டு, பொதுவாக இயன்ற பொருளுதவி செய்வதுடன், சிறப்பாக தாங்கள் உகக் கும் குறிப்பிட்ட ஒரு திருப்பணியையும் நேரிலோ அல்லது திருப்பணிக் கமிட்டி மூல மாகவோ நிறைவேற்றுமாறு செய்யலாம். தை மாதம் சம்ப்ரோக்ஷணை நடைபெற வேண்டி யிருப்பதால், உதவி உடனடியாகத் தேவைப்படுவதையும் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

தொண்டை நாட்டுத் தலயாத்திரை

தருமபுர ஆதீன சென்னை பிரசார நிலையத்தின் ஆதரவில் நடைபெறும் மாதாந்திர வழிபாட்டுக் கூட்டம் 3-10-59 திருவல்லத்திலும், 1-11-59 திருவொற்றியூரிலும் சிறப்பாக நடைபெற்றது. அடுத்தமாதக் கூட்டம் 6-12-59 ஞாயிற்றுக்கிழமை திருவான்மியூரில் நடை பெறும்.

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம், ஸ்ரீ சொக்கநாதசுவாமி ஆலயத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்ற திருவிளையாடற் புராண சொற்பொழிவுகள் 1—11—59 அன்று நிறைவெய்தியமைக்காக ஷை ஆலயத்தில் சொக்கநாதசுவாமிக்கு விசேஷ அபிஷேகவிழா அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

திருப்பனந்தாள் காசி மடத்தின் பொருளுதவியால் காஞ்சிபுரம் குமரகோட்டத் தில் கந்தபுராணப் பிரசங்கங்கள் 1—11—59 முதல் 6—11—59 வரை கயப்பாக்கம் திரு சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் நிகழ்த்தப்பட்டன.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரைக் கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

[கச்சணிந்த அழகிய அணிகலன்களையணிந்த பெண்களே! (ஒருத்தி) 'எம்பெருமான்' என்று ஒவ்வோர் சமயம் கூறியவளாக சிவபெருமானின் சிறப்பை இடைவிடாமல் கூறுகிறாள். மகிழ்ச்சி மிகுதலால் ஓயாது கண்ணீர்விடுகிறாள். நிலத்தின்மீது விழுந்து ஒரே முறையாக வணங்குவதை மேற்கொள்ளுகிறாள். மற்றைத் தேவர்களையும் வணங்கமாட்டாள். இவ்வாறு நம் பெருமானிடம் அவள் பித்துகொண்ட தன்மையையும், ஆட்கொள்ளும் எம்பெருமானின் திருவடிகளையும் வாயாரப் பாடிக்கொண்டு நாம் நீராடுவோமாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்

[கிளிபோன்ற சொல்லுடைய பெண்ணே! இன்னும் தூங்குகிறாயோ? (என்ன); நங்கையீர்! சில்லென்று அழையாதேயுங்கள் நான் வருகிறேன் (என்ன); உன்னுடைய உறுதிமொழியையும் வல்லமையையும் நாம் முன்னமே அறிவோம் (என்ன); நீங்களே பேசுந்திறமையுடையவர்கள் நான்தானே ஆகக் கடவேன் என்று சொல்லிவிட்டு, உங்களுக்குச் செய்ய வேண்டுவதென்ன (என்ன); நீ விரைவில் வர வேண்டும். வேறு என்ன உடைத்தாயிருக்கிறாய் (என்றுகேட்க); எல்லாரும் வந்தார்களோ (என்ன); வந்திருக்கிறார்கள் வந்து எண்ணிக்கொள் (என்ன); குவலாய பீடத்தைக் கொன்றானை, கம்சாதிகளை அழிக்கவல்ல மாயவனை நாம் பாடுவோமாக! (என்கிறார்கள்)]

அடியவர் திருநட்சத்திரங்கள்

விகாரி—மார்கழி

சைவம்

8உ—இயற்பகை நாயனார்
10உ—மானக்கஞ்சாற நாயனார்
15உ—சாக்கிய நாயனார்
22உ—வாயிலார் நாயனார்
28உ—சடைய நாயனார்

வைணவம்

13உ—தொண்டரடிப் பொடியாழ்வார்



திருவாஞ்சியம்—கோயிலும் திருக்குளமும்



திருவாஞ்சியம்—தர்மராஜா கோயில்

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Nungambakkam, Madras-6.